# கதைக் கனிகள்



பரிசு பெற்ற 12 மலையகச் சிறுகதைகள்

வீரகேசரி பிரசுரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Muralal Shanmuganathan
"Gandhi Nilayam"
Lady MacCallums Drive, Nuwara Eliya.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

= குரலை - ஸ்ரீ - சண்முகநாதன் =

Kuralai Shanmuganathan
" Gandhi Nilayam "
Lady MacCallums Drive, Nuwara Eliya

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதைக் கனிகள்

## பரிசு பெற்ற மலையகச் சிறு கதைகள்

தொகுப்பு:

எஸ். எம். கார்மேகம்

வீரகேசரி வெளியீடு

விலை ரூ. 2—00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதைக் கனிகளில்.....!

## முதலாவது போட்டி

1. பாட்டி சொன்ன கதை — தெளிவத்தை ஜோசப்
2. கால ஓட்டம் — மு. க. நல்லையா
3. காயம் — தங்க – பிரகாஷ். [சாரல் நாடன்]

## இரண்டாவது போட்டி

1. பழம் விழுந்தது — தெளிவத்தை ஜோசப்
2. முடிவு — எம். வாமதேவன்
3. சுமை — குன்றவன் [கே. முருகேசு]

## மூன்றாவது போட்டி

1. இதுவும் ஒரு கதை — மு.சிவலிங்கம்
2. பிரசவக்காசு — பரிபூரணன். [ச. பாக்கியசாமி]
3. இலவுகாத்தகிளி — சி. பன்னீர்செல்வம்

## நான்காவது போட்டி

1. பிஞ்சு உலகம் — மாத்தளை பெ. வடிவேலன்
2. ரேம் ஆறு அமைதியாக ஓடுகிறது. — பரிபூரணன். [ச. பாக்கியசாமி]
3. சம்பள நாள் — அ. சலமன்ராஜ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுழைவாயில்

எத்தனை தலைமுறைகளானாலும் சரி, தோட்டத் தொழிலாளியின் மகன் தோட்டத் தொழிலாளியாகத்தான் இருக்க வேண்டுமென்ற ஒரு நியதியை ஏற்படுத்தினார்கள் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆட்சியாளர்கள். இந்த நியதியைக் காப்பாற்ற வேகமாக மாற்றமடையும் வெளியுலகுடன் தோட்டத் தொழிலாளருக்குத் தொடர்பில்லாமலிருக்க என்னவெல்லாமோ செய்தார்கள். அதே சமயம் தோட்டங்களில் அடைந்து கிடக்கும் குழந்தைகள் பயிர்களுக்குச் சேதம் விளைவியாமல் தடுக்க, ஆடு மாடுகளை அடைத்து வைக்கும் பட்டிகளைப் போல பள்ளிக்கூடங்களென்ற பெயரிட்ட பட்டிகளில் அந்தக் குழந்தைகளை அடைத்து வைத்தார்கள்.

அது ஒரு காலம்! ... இன்று...

இன்று உலகெங்கணும் பரவி வரும் புரட்சிக் கனல், அறிவுத்தாகம், சுதந்திர உணர்ச்சி, உரிமைக்குரல்... இவை பெரும் சூறுவளியைப் போலத் தோட்டப் பகுதிகளிலும் வீசிக் கொண்டிருக்கின்றன. இதன் விளைவு? தோட்டத் தொழிலாளர் விழிப்புற்று வீறு கொண்டு எழுந்துவிட்டார்கள். தங்களுடைய மாபெரும் சக்தியை, அடிப்படை உரிமையை, மறைந்து கிடந்த அறிவாற்றலை உணர்ந்து கொண்டு விட்டார்கள். மற்றவர்களைப் போலத் தாங்களும் வாழ்க்கைப்பாதையிலே முன்னேறுவதை எந்த சக்தியினாலும் தடை செய்ய முடியாதென்ற உண்மையை உணர்ந்து நிமிர்ந்த நன்னடை போடக் கிளம்பிவிட்டார்கள். சாதாரண வெள்ளத்தைத் தடுக்கலாம். கரை புரண்டு வரும் காட்டாற்று வெள்ளத்தைத் தடுக்க முடியுமா? பொங்கும் கடலுக்கு அணை போட்டுவிட முடியுமா? தலைமுறை தலைமுறையாக அடக்கி வைக்கப்பட்டிருந்த உணர்ச்சி வெடித்துக் கிளம்பும் பொழுது அதை ஒடுக்கும் சக்தி யாருக்கு உண்டு? எதற்கு உண்டு?

தோட்டங்களின் நிலைமையும் இன்று இதுதான். பழைய பத்தாம் பசலி நியதிகளையெல்லாம் தூள் தூளாக உடைத்துத் தகர்த்தெறிந்து, உயர் கல்வி கற்று பல மேதைகளையும் கவிஞர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களையும் கல்விமான்களையும் கதாசிரியர்களையும் நமது தோட்ட ங்கள் இன்று தோற்றுவித்திருக்கின்றன. இன்னும் எத்தனையோ பல அறிவாளிகள் அங்கு தோன்றவிருக்கிறார்கள். இந்த வளரும் இளைஞர் சமுதாயத்துக்கு, அவர்களது கற்பனை சக்திகளுக்கு, அறி வாற்றலுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிப்பதற்காக கடந்த நான்கு ஆண்டுகளாக வீரகேசரி சிறுகதைப் போட்டிகளை வெற்றி கரமாக நடத்தி வந்திருக்கிறது. இந்தப் போட்டிகளில் பரிசு பெற்ற மணியான பன்னிரண்டு சிறு கதைகளைத் தொகுத்து பொங்கல் பரிசாக தோட்டத் தொழிலாள சமூகத்துக்கும் தமிழ் கூறும் நல்லுலகிற்கும் வீரகேசரி சமர்ப்பிக்கின்றது. இதே போல வீரகேசரியில் வெளியாகிய மற்றும் பல சிறுகதைகளும் நெடுங் கதைகளும் காலக்கிரமத்தில் புத்தகங்களாக வெளிவர ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதை மகிழ்ச்சியுடன் தெரிவித் துக் கொள்ளுகிறோம்.

கே. வீ. எஸ். வாஸ்
பிரதம ஆசிரியர்
வீரகேசரி/மித்திரன்

10–1–1971

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோரணம்

அன்றுட நாட்டு நடப்புகளையும், உலக விவகாரங்களை யும் மக்களுக்கு அறியத் தருவதோடு ஒரு தேசியத் தினசரியின் கடமை முடிந்துவிடுவதற்கில்லை. மக்களின் பிரச்சினைகளை எடுத் துக்காட்டி, அவற்றிற்குப் பரிகாரம் தேடித்தரக் கூடிய சாதன மாகவும், மக்களின் ஜீவாதாரமான உரிமைகளுக்குப் பாது காவலனுகவும், அவர்களது சிந்தனையின், அபிலாஷைகளின் பிரதி பலிப்பாகவும், எல்லாவற்றிற்கும் மேலாக மக்களின் உரிமைக் குர லாகவும் விளங்க வேண்டியதும்பத்திரிகையின் தார்மீகக் கடப் பாடு ஆகும்.

இந்த வகையில் கடந்த 40 ஆண்டுகளாக முன்னணியில் நின்று இப்பெரும் பொறுப்பை ஆத்மசுத்தியுடன் வீரகேசரி நிறைவேற்றி வந்திருப்பது பெருமைக்குரிய விஷயம். தேசத்துக் கும், ஈழத் தமிழ் பேசும் மக்களுக்கும், தமிழ் மொழியின் வளர்ச் சிக்கும் வீரகேசரி செய்துள்ள சிறப்பான பணிக்கு ஓராயிரம் உதாரணங்களைக் காட்டலாம். இவற்றை நாடே அறியும்; ஆதலால் நாம் பட்டியல் போட்டுக் காட்ட வேண்டியதில்லை.

மக்களின் அபிலாஷைகளை அனுசரித்து வீரகேசரி ஆற் றிய சிறப்பான தொண்டுகளில் மலையக இலக்கிய உலகில் அது ஏற்படுத்திய விழிப்பை இங்கு சுட்டிக்காட்ட வேண்டியது தவிர்க்க முடியாததாகிறது. இன்று மலையக இலக்கிய உலகில் பல மின்னும் தாரகைகள் ஒளி வீசிக் கொண்டிருக்கின்றனவென்றால் அதற்குக் காரணம் வீரகேசரிதான் என்பதை எவரும் மறுப்பதற் கில்லை.

1960-ம் ஆண்டு வாக்கில் ஈழத்து எழுத்துலகில் ஏற்பட்ட தொரு விழிப்பு மலையகத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தத் தவற வில்லை. இத்தாக்கத்தால் உணர்வு பெற்று எழுதத்துடித்த இளம் மலையகத்தினரின் உணர்ச்சிப் பிரவாகத்திற்கு வடிகால் அமைத் துக் கொடுக்க வேண்டுமென்று வீரகேசரி உணர்ந்தது. எழுத் தார்வமிக்க இளைய மலையகத்தலைமுறையினருக்கென வீரகே சரி தினப்பதிப்பிலும், வாரப்பதிப்பிலும் தனிப் பக்கங்கள் ஒதுக் கிக் கொடுத்தது. "தோட்ட வட்டார" மாக ஆரம்பித்து "தோட்ட மஞ்சரி"யாகி இன்று "குறிஞ்சிக் குரல்" என்ற பெய ருடன் நடத்தப்பட்டுவரும் இத்தனிப்பக்க முயற்சி மலையக இலக்கிய வளர்ச்சிக்கு நல்ல விளை நிலமாக அமைந்தது. இம் முயற்சியின் அறுவடையில் விளைந்த நல்முத்தே கதைக் கனிகள் என்ற இச் சிறுகதைத் தொகுதியாகும்.

தனிப் பக்கத்தை மட்டும் ஒதுக்கிவிட்டால் போதும் என் பதோடு நாம் நின்றுவிடவில்லை. போட்டிகள் மூலம் நல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரோக்கியமான மலையக எழுத்துலகை சிருஷ்டிக்க விரும்பினோம். எமது இம்முயற்சி இன்று நல்ல பலன் தந்திருக்கிறது என்பதை அறியும்போது உள்ளபடியே பெருமையாயிருக்கிறது.

இந் நான்கு போட்டிகளையும் முன்னின்று நடத்தியவன் என்ற வகையில் எனக்கு ஏற்பட்ட அனுபவமும் தனித்துவமானது. முதலாவது சிறுகதைப் போட்டிக்கு ஆரம்ப கர்த்தாவாகவிருந்த திரு. பெரி. கந்தசாமி, 40 பேர் இப்போட்டியில் கலந்து கொண்டாலே பெரிய காரியம் என்று பரவலாக பலர் சந்தேகப்படுவதாக கூறியது நினைவுக்கு வருகிறது. ஆனால் 150 பேருக்குக் குறையாமல் இதே போட்டியில் பங்கு பற்றினார்கள். அப்போட்டியில் முதல் பரிசு பெற்றதன் மூலம் அறிமுகமான தெளிவத்தை ஜோசப் இன்று இலங்கையில் மட்டுமல்ல கடல் கடந்த நாடுகளிலும்கூட நல்ல எழுத்தாளராக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறார். தமிழகத்தின் தரமான இலக்கியப் பத்திரிகைகள் அவரது கதைகளைக் கேட்டு வாங்கிப் பிரசுரிக்கின்றனவென்றால் அந்தப் பெருமையின் நியாயமான பங்கு நமக்குச் சேரவேண்டியதாகும்.

64-ம் 66-ம் ஆண்டுகளில் நடத்தப்பட்ட இரண்டாவது மூன்றாவது போட்டிகளும் மேலும் பல புதியவர்களை இலக்கிய உலகுக்கு அறிமுகப்படுத்தின. சமீபத்தில் நடந்த நான்காவது ...டி இரண்டு முக்கிய அம்சங்களில் ஏனைய மூன்று போட்டிகளிலிருந்தும் வேறுபட்டிருந்தது. ஒன்று: மிகக் குறுகிய கால அவகாசத்தில் அதாவது ஒரு மாதகால எல்லைக்குள் நடத்தப்பட்டது. மற்றது, 1025 ரூபா பரிசுத் தொகையாக வழங்கப்பட்டது. பரிசுத் தொகையும்கூட போட்டியின் இறுதியில்தான் அறிவிக்கப்பட்டது. நாமறிந்த வரையில் இங்கு அதிகபட்ச பரிசுத் தொகையாக ரூ. 1025-க்கு இத்தனை குறுகிய காலத்தில் வேறு எவரும் சிறுகதைப் போட்டி நடத்தியதாகத் தெரியவில்லை.

மொத்தத்தில் இந்த நான்கு சிறுகதைப் போட்டிகளும் சுமார் 30—40 பேரை நல்ல முறையில் ஈழத்து இலக்கிய உலகுக்கு அறிமுகப்படுத்தியுள்ளன. நிறையபேரை எழுத்துகில் ஆர்வம் காட்டச் செய்திருக்கின்றன.

இந்நான்கு போட்டிகளிலும் முறையே முதலாம், இரண்டாம், மூன்றும் பரிசுகளுக்குரிய மொத்தம் பன்னிரண்டு கதைகளை மட்டுமே கதைக் கனிகளாகதேர்ந்தெடுத்து இச் சிறுகதைத் தொகுதியில் சேர்த்திருக்கிறோம். விமர்சன நோக்கோடு இக் கதைகளை ஒப்புநோக்க இத்தொகுதி பயன்படும் அதே வேளையில் 60-க்குப் பிறகு, 70 வரையுள்ள பத்து ஆண்டுகளில் மலையக சிறுகதை இலக்கியம் எந்த அளவுக்கு வளர்ச்சி பெற்றுள்ளது என்பதைக் கணிப்பதற்கான ஓர் அளவு கோலாகவும் அமையும் என்பது எமது நம்பிக்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"குன்றவனின்" சுமை என்ற கதை உரிய காலத்தில் வந்து சேராததால் இத்தொகுதியில் இடம்பெற முடியவில்லை. ஏனைய பதினொரு கதைகளும், கருப் பொருளில், கதை சொல்லும் பாணியில் எழுத்துநடையில் பிரச்சினைகளை அணுகும், நோக்கும் விதத்தில் ஒன்றுக்கொன்று வேறுபட்டு நிற்பதை நாம் காணலாம்.

பொழுது போக்குக்காக எழுதப்பட்ட கதைகள் அல்ல இவை. தமது சமுதாயப் பிரச்சினைகளை சமுதாயப்பற்றுடன் யதார்த்த நோக்கோடு பிரக்ஞை பூர்வமாகக் கண்டு உணர்ச்சிக் குமுறலாக வெடித்து இக்கதாசிரியர்கள் கலை வடிவில் தந்துள்ள கனிகள் தான் இவை.

மலையக மக்கள் வாழ்க்கையின் எல்லாக்கட்டங்களிலும் பிரச்சினைகளை எதிர் நோக்கி வாழ்ந்து கொண்டிருப்பவர்கள். தோட்ட நிருவாகங்களின் கெடுபிடிகள், மக்களின் அறியாமை, சமூக சீர்கேடுகள், குடியியல், பாலியல் பொருளாதாரதொல்லைகள், இலங்கை – இந்தியர் பிரச்சினை, கல்விப் பிரச்சினைகள், வேலை நாட் குறைப்பு முதலான பிரச்சினைகளை இக் கதைகள் கலை நயத்தோடு வெளிப்படுத்துகின்றன. எனினும் இக் கதைகள் சிறுகதை இலக்கிய கட்டுக்கோப்புக்குள் நின்று முற்றாக வெற்றி கண்டிருக்கின்றனவா? என்பது விமரிசகர்களின் கவனத்துக்கு உரிய விஷயம்.

இப்பதினொரு கதைகளும் இக் கதைகளை எழுதிய எழுத்தாளர்களுக்கு ஆரம்ப கால முயற்சிகளே. இவர்களில் பலர் இப்போது நன்றாகவே எழுதிக் கொண்டிருப்பவர்கள். எதிர் காலத்தில் இவர்களது சிறப்பான படைப்புகளை இலக்கிய உலகம் எதிர்பார்க்கிறது.

இச் சிறுகதைத் தொகுதியை வெளியிட்டு உதவிய தன் மூலம் வீரகேசரி மேலும் ஒரு சிறப்பை தனதாக்கிக்கொள்கிறது. குறுகிய காலத்தில் இத்தொகுதி அச்சாவதில் பெருமுயற்சி எடுத்துக் கொண்ட அத்தனை பேருக்கும் நன்றிகூறக் கடமைப்பட்டிருக்கிறோம்.

குறிப்பிட்ட நேரத்தில் இப் புத்தகத்தை வெளிக் கொணர்வதில் இரவு பகல் என்று பாராதுழைத்தவர்களில் குறிப்பாக பி. கே. கருப்பையா, எச். எச். விக்கிரசிங்கம் [செல்வா] ஆகிய இருவருக்கும் அட்டைப் படத்தை அழகுறத் தீட்டித் தந்த ஓவியர் ஸ்ரீகாந்துக்கும் எம் நன்றி உரித்தாகிறது.

இப் புத்தகத்தை வாங்கி ஆதரித்த வாசகப் பெருமக்களுக்கும் எம்மனம் நிறைந்த நன்றி.

வீரகேசரி

12–1–1971

எஸ். எம். கார்மேகம்
[கார்வண்ணன்]
பிரதம துணை ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Nuralai Shanmuganathan
"Gandhi Nilayam"
Lady MacCallums Drive, Nuwara Eliya.

# பாட்டி சொன்ன கதை

## தெளிவத்தை ஜோசப்

கொழுந்து நிறுத்து வெகு நேரமாகிவிட்டது. இன்னும் காவேரியை மட்டும் காணவில்லை.

சிலுப்பிக்கொண்டு நின்ற முன் மயிரில் சிட்டுச் சிட்டாய் ஒட்டிக்கிடந்த சாம்பலைத் தட்டியவண்ணம் வெளியே வந்தாள் கூனிப்பாட்டி. மூடியும் மூடாமலும் கிடந்த அவளுடைய விலாப்புறம் மேடும் பள்ளமுமாய் கூரைத்தகரம் போல் கோடு பாய்ந்து கிடந்தது. சிதறியடிக்கும் தன் குழிவிழுந்த கண் பார்வையைச் சேர்த்துப்பிடித்து தன் பேத்தி தூரத்தே வருகின்றாளா? என்பதைப் பார்ப்பதற்காக ஒரு கையைத் தூக்கி தன் கண்ணுக்கு மேல் வைத்துப் பார்க்கிறாள் பாட்டி. கையை மேலே தூக்கியதால் விலா எலும்புகள் விரல்விட்டு எண்ணக் கூடிய விதத்தில் முட்டி நின்றன.

''யே... ... ... தெய்வானே! எங்க காவேரியைக் கண்டியா?

''ஆமா! ... ... ஓம் பேத்தியை காவல் பாக்கதானே தொரை எனக்குச் சம்பளம் கொடுக்குராரு ... ...'

ஒரே லயத்தில் கூடி வாழும் தெய்வானை தங்கள் கூட்டுறவு வன்மையைக் காட்டினாள்.

நம்மவரிடையே ஒற்றுமை இருந்தால் நாம் இன்று இந்த நிலையிலா இருப்போம்?

அதோ ... ... தலையில் விறகுக் கட்டும் தடக் தடக்கென்று முதுகிலடிக்கும் வெற்றுக் கூடையுமாக காவேரி வருகின்றாள். கறுத்த உருவம், கண்ணைக்குத்தும் பருவம்.

அலுத்துக்களைத்த உடல்தானென்றாலும் அழகாய் தான் இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த வயது இருக்கிறதே! அந்த வயதில் எந்தப் பெண்ணும் அழகாய்த்தான் இருப்பாள்.

வாலிபப் பெண்களிடம் மட்டும் இந்த வசீகரிக்கும் சக்தி இல்லாவிட்டால் ... ... ... ... !

பிரபஞ்சமே ஆட்டம் காணும் பெரிய பிரச்சனை அல்லவா அது

''வெறகு பொறக்கப் போனேன் அது தான் நேரமாச்சு!''

நேரமானதற்குக் காரணம் கூறி பாட்டியை ஏமாற்றி விட்ட எக்களிப்பு பேத்திக்கு.

''சரிசரி, நீ ஒன்னும் அதுக்கெல்லாம் போக வேண்டியதில்லே நான் பாத்துக்கிறேன்.''

தன்னுடைய இளமை முறுக்கை எவனிடமும் அவிழ்த்துக் காட்டி அவஸ்தையில் மாட்டிக் கொள்வாளோ என்ற பயம் பாட்டிக்கு. அவள் அன்று கொப்பளித்துத் துப்பிய இளமை தானே இன்று பேத்தி அனுபவிப்பது!

எட்டாம் காம்பரா இருசன் இரண்டு மூன்று நாட்களாக அந்த லயத்துக்கு வருவதும், இருட்டும் வரை அங்கேயே சுற்றுவதும், ''எப்படிப்பாட்டி நல்லா இருக்கியா? ... ... ... என்று விசாரிப்பதும் அவளுக்குச் சந்தேகமூட்டியது. இன்றோ? நாளையோ? நாளை மறுநாளோ என்றிருக்கும் ஒரு கூலிக்காரக் கிழவியைப் பார்க்கவா ஒரு மைனர் பையன் நேரத்தை விரயமாக்கிக் கொண்டு வருவான்?

ஹ்ம் ம் ... ... ... ... ம்... ... ...

பாட்டி பெருமூச்செறிந்தாள்.

''இந்தா காவேரி அந்த கருவாட்டு மண்டையை பொட்டில போட்டு மூடு; கவிச்சின்னு சனியன் நாய்க எங்கேன்னு நிக்கும்! பாட்டி எதைக் குறிப்பிடுகிறாளோ தெரியவில்லை!

அடுப்படியில் கிடந்த பலகைக்கட்டையை தலைக்குஅணைவாக வைத்துக் கொண்டு, மேல் சேலையை உருவி தரையில் விரித்து அதில் சுருட்டிக் கொண்டாள் பாட்டி. சாமான் சட்டிகளை எல்லாம் கழுவிவைத்து விட்டுத்தான் பேத்தி படுப்பாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டியின் அருகே ஒரு கிழிந்த சாக்கில் நாலு குழந்தை கள் கையையும் காலையும் பரப்பிக் கொண்டு கிடந்தன. அந்த நாலும் அடுத்த வீட்டு பரமசிவத்தினுடையது. பரசிவமும் பாரி யாரும், பரமசிவத்தின் தாயும் தங்கையும், ஆறு குழந்தைகளு மாக பத்து உருப்படிகளுக்கு அந்த நண்டு வளையில் முடங்கிக் கொள்ள முடியுமா? ஆகவே தான் நான்கு குழந்தைகள் அடுத்த வீட்டுப்பாட்டியிடம் எப்போதும் வந்து படுத்துக் கொள்ளும். இங்கே பாட்டியும் பேத்தியும் தானே!

பார்வதியின் கையைப்பிடித்து சரியாக நாலு வருடம் தான் எனினும் அவர்களுக்கு ஆறு குழந்தைகள். என்னமோ ஏதோ வென்று நினைத்து விடாதீர்கள். இரண்டு முறை "இரட்டை பிறந்து விட்டதால் தான்.

இறைவன் ஏழைகளுக்கு அள்ளிக் கொடுக்கும் ஆஸ்தி அது ஒன்றுதானே. பரமசிவம் - பார்வதி என்ற பெயர் பொருத்தத் தாலோ என்னவோ இந்த வகையில் அவர்களுக்குக் குறைவில்லை. இப்போதும் கூட அவள் ஓட, உட்கார முடியாத நிலையில் தான் இருக்கிறாள்.

"பாத்தி கதை சொல்லு ... ... ... ... ... !

பரமசிவத்தின் நாலும் கிழவியைக் குடைந்தெடுத்தன. பேத் தியும் வந்து அவளுடைய பாயை விரித்து அதில் முடங்கிக் கொண்டாள். அவளுக்குத் தூக்கம் 'லேசில்' வருவதாக இல்லை. அந்தி நேர ஆட்டத்தின் இன்ப நிழல் அவள் அடித்தளத்தே அரங்கமிட்டு ஆட்டம் காட்டியது.

"ஒரே ஒரு தோட்டத்திலே ஒரே ஒரு லயமாம் ... ... ... ..." கிழவி கதை சொல்ல ஆரம்பித்தாள்.

"ஊம்ம்" நாலும் ஒரே நேரத்தில் ஊம் போட்டன.

'அந்த லயத்துலே, பெரியவங்கெல்லாம் வேலைக்கு போன தும் புள்ளைங்கெல்லாம் தானுப்புல ஆட்டம் போடுமாம் ... ... ...'
' ஊம்''

"ஒன்று கூடப்பள்ளிக் கூடத்துக்குப் போறதேயில்லை ... ... ... பள்ளிக்கூடம் போன்னுட்டு பெத்தவங்க போயிட வேண்டியது. அதுகள் பாட்டுக்கு மாங்காய் அடிப்பதும் குருவிக்கூடு கலைப்பது மாக ஆட்டம் போட்டுக் காலத்தைக்கடத்தின."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அந்த லயத்துலே ஒரு பத்துப்பதினொரு வயசுப்பொண்ணு எங்கியும் போவாமல் வீட்டு வேலைகளை செஞ்சுக்கிட்டே இருக்கும். அடுத்த வீட்டுல ஒரு பய இருந்தான். அவனுக்கு ஒரு பதினொரு வயசு இருக்கும். ரெண்டு பேரும் சேந்துதான் வெளையாடுவாங்க ... ... ..."

"என்ன தூங்கிவிட்டீங்களா?"

பாட்டியின் கேள்விக்கு இல்லேயே என்ற பதில் பரமசிவத்தின் முத்தனிடமிருந்து மட்டுமே வந்தது. மற்ற மூன்றும் குறட்டை விட்டன. விழித்துக்கொண்டிருந்த மூத்தது 'அப்புறம்' என்கவே கதை தொடர்ந்தது.

"அவங்க இரண்டு பேரும் சேர்ந்தே ஆடி ஓடித் திரிஞ்சதுலே ஒன்னுக்கிட்டே மற்றதுக்கு பயமோ கூச்சமோ கிடையாது. அந்தப் பொண்ணு வளர்ந்தப்புறமும் ரவிக்கைக்கு மேலேயும் ஒரு துணியைப் போட்டு மூடிக்கிற அளவு வளர்ந்தப்புறமும் அந்தப்பையன்கிட்ட கூச்சமில்லாமல் பழகிச்சு"

இவ்வளவு நேரமும் பாட்டியின் கதை காதில் விழுந்தும் மனதில் விழுகாமல் படுத்துக்கிடந்த காவேரி புரண்டு படுத்தாள். சிறுகச்சிறுக அவளுடைய மனம் கதையில் லயித்தது. அந்த மூத்ததும் தூங்கிவிட்டதைக்கண்ட கிழவி சுறுசுறுப்புடன் கதையைத் தொடர்ந்தாள்.

"நீ வளர்ந்த பொண்ணு! அந்த தடிப்பயகிட்டே என்ன பேச்சு ... ... ..."

கிழவியின் கதையில் தெரிந்த மாற்றம் காவேரியைத் தடுமாறச்செய்தது. தனக்கும் இருசனக்குமுள்ள தொடர்பை அறிந்துகொண்டுதான் அப்படிக் கேட்கிறாளோ! என்று எண்ணி ஏதோ கூறத்தொடங்கியவளை தடுத்து நிறுத்தியது பாட்டியின் குரல்.

"... ... ... அப்படீன்னு பெத்தவங்க கண்டிக்கத் தொவங்கவும் பெத்தவங்க கண்ணுக்குத் தெரியாம அவங்க இரண்டு பேரும் ஆட்டம் போடுவாங்க. ஆச்சு! பொண்ணுக்கும் பதினாலு வயது முடிஞ்சு போச்சு. குச்சுக்குள்ளேயும் உக்காந்துட்டு வந்துருச்சி, ஆள் கூடன்னு அந்த வருசம் தொரை தோட்டத்தில பேரு பதிய மாட்டேன்னுட்டாரு. வயசு வந்த பொண்ணுச்சேன்னு பெத்தவங்க ரொம்பக் கவலைப்பட்டாங்க. அதுக்குக்காவலா ஒருத்தர் வீட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிலேயே இருக்க முடியுமா? பொண்ணுப் பொறந்தது இல்லே, தன்னைக் காப்பாத்திக்கிடணும்.''

பேத்தி தூங்கிவிட்டாளா என்பதையும் பாட்டி கவனித்தாள். பேத்தியினுடையதுவும் வாலிப மனதல்லவா? கதையும் இப்போது அந்தப்படியில் தானே இருக்கிறது. ஆகவே அவள் பெருமூச்சு விடுவதும் புரண்டு படுப்பதுமாக இருந்தாள். பேத்தி தூங்கவில்லை என்பதை உணர்ந்த பாட்டி தொடர்ந்தாள்

''ஒரு நாள் வெள்ளனவே வேலே எல்லாம் முடிச்சுட்டு அந்தப் பொண்ணு பக்கத்து வீட்டுக்குப் போச்சு. லயத்துலே ஒரு சுடுகுஞ்சி கூடக்கிடையாது. பொண்ணு அங்கே போனதும் பய அதைப்புடிச்சி இழுத்து அணைச்சிக்கிட்டான். அந்தப் பொண்ணுக்கிட்ட அவனுச்குத்தான் கூச்சம் கிடையாதே! கொஞ்ச நேரத்துல தாவணித்துணி மட்டும் தூர விளுந்து கெடந்திச்சி.

பேத்தியின் உடல் வளைந்தது. பாட்டியின் கண்குழியில் கோர்த்து நின்ற கண்ணீர் கன்னத்தில் ஓடி கட்டையில் விழுந்தது. கண்ணைத் துடைத்துக் கொண்டே தொடர்ந்தாள்.

''அந்தப் பொண்ணுக்கு புத்தி இப்படியா போவணும். ஒவ்வொரு நாளும் அவங்க ரெண்டு பேருக்கும் இப்படியே இன்பமாய் பொழுது போய்கிட்டே இருந்திச்சி. அடுத்த வருசம் அந்தப்பொண்ணை தொரை பேரு பதிஞ்சிட்டாரு. அதுவும் வேலைக்குப் போகத் தொடங்கிடுச்சி. எப்பவோ குழையோ, மரமோ வெட்டினதுக்காவ அந்தப்பயலை பேரு பதிய மாட்டேன்னுட்டாரு.

ஆயாகாரி தன் கூடவேதான் அந்தப் பொண்ணை வேலைக்குக் கூட்டிப் போவா! கண்ணுல வைச்சி எமையாலத்தான் மூடிக் காத்தா, என்ன செய்வது? கள்ளன் பெருசா காப்பான்; பெரிசாம்பாங்க. அந்தப் பொண்ணும் ஆயாவை ஏமாத்திட்டு காடோமேடோ, மலையோ, கானோ எங்கேயாவது அந்தப்பயல் கூட இருக்காம இருக்கவே இருக்காது. நாளைக்கு வர்ரதை கொஞ்சமாவது யோசிச்சிருந்தான்னு ..........! வளர்த்த வளர்ப்பு அப்படி

வளர்ந்த பையனை ஏன் வீட்டுல வைச்சிருக்கியக, எங்க கூட வந்து கடையில் நிக்கட்டுமேன்னு கடன் வாங்க வந்த ஒரு கடை முதலாளி பையனை இழுத்துக்கிட்டுப் போயிட்டாரு. பய போன பொறவு இந்தப் பொண்ணுக்கு ரெண்டு மூணு நாளா வெறிச் சோன்னுஇருந்திச்சி; அப்புறம் ஒரு மாதிரியா சரியாப்போயிடிச்சி''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு வாரமாக தன்னைச் சுற்றி வந்து தன்னையே சுற்றிக் கொண்ட இருசனும் ஒரு நாள் இப்படிப் போய் விடுவானோ என்ற பயம் அவளைப் பற்றிக்கொண்டது.

ஆகாயத்திலேயே பறந்து கொண்டிருந்த அவளுடைய வாலிப எண்ணத்தில் பாட்டி ஏற்றிவிட்ட பாரம் அதைத் தடுமாறச் செய்தது. பேத்தியின் மனப் போராட்டத்தை அறியாத பாட்டி தொடர்ந்தாள்.

"அந்தப் பொண்ணு மூணு சம்பளம் வாங்கிறிச்சி, நாலாவது சம்பளத்துக்கு வேலை செய்டயிலே ஒரு நாள் ஏதோ தலை சுத்துருப்புல இருக்குன்னு வீட்டுலே நின்னுட்டா. மாங்கா திங்கனும்னு அவளுக்கு ஒரு அதிசய ஆசை ஏற்பட்டிச்சி. ஒரு பையனை விட்டு பங்களா மரத்துல ஒரு மாங்கா அடிச்சாரச் சொல்லி ரெண்டு உப்புக்கல்லையும் வைச்சி தட்டி ரெண்டு வாய் கஞ்சியைக்குடிச்சா. குடிச்ச கஞ்சி கொடல்ல விழுகிறதுக்குள்ளார ஓ ... வ் ... வுன்னு ஓமட்டி அவ்வளவையும் வாந்தி எடுத்துட்டா! அடி வயித்துல ஏதோ ஒரு சிலு சிலுப்புத் தோணினாலும் அது என்னங்கிற விவேகம் தெரியாத வயதுதானே! பாவம் ஆயாளுக்குத் தெரியாம எத்தனை நாளைக்குத்தான் ஒளிக்க முடியும்?

"ஆயாளுக்குத் தெரிஞ்சு அப்பனுக்குச் சொல்லி வீடு சுடுகாடா மாற, ஆச்சி போச்சின்னு ஆறு மாசம் ஆயிடுச்சி. ஆறு மாச வயித்துப் புள்ளையை அருக்காவது மறைக்க முடியுமா? அந்த ஆயாளும் பகலெல்லாம் மலையில செத்துச் செத்து வேலை செஞ்சிட்டு ராமுழுக்க தன்னாலே முடிஞ்ச மருந்தெல்லாம் செஞ்சி பார்த்துட்டா, ஒண்ணும் பலிக்கல. பொண்ணோட அப்பனுக்கு என்ன செய்யிறதின்னே தெரியல்லே. சாப்பிடாம, தூங்காம, வீட்டையும் கவனிக்காம 'எக்கேடோ கெட்டுப்போ' ன்னு மிசின் கணக்கா சுத்தி வந்தது. பெத்தவ மனது கேக்குமா? புருசனை ஏசிப்பேசி நம்ம புள்ளையில்லையா சாக்கடையிலே விழுந்துடிச்சேன்னு அதிலேயே அமுக்கி வச்சிறுவோமா? நாமதானே கழுவி குளிப்பாட்டி எடுக்கணும்! மூஞ்சியைச் சுழிச்சிட்டாப்போல போதும்ன்னு சமாதானம் பண்ணி பத்தனை நாட்டுல ஒரு கிழவி இருக்காளாம், இதிலெல்லாம் கை தேந்தவளாம், அவளை இன்னைக்கே கூட்டியாங்கன்னு அனுப்பினா. மனுசனும் தலைவிதியேன்னு போச்சி.

அந்தக் கிழவி இதிலெல்லாம் கை தேர்ந்தவள் தான். தாய்க்குத் தெரியாம புள்ளையை இழுத்து தரையில போட்டுருவா! அவரேட்டுக் கேக்குற விதமே அலாதி. மூனு மாசம்னா முப்பது ரூபா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும், ஒரு முழுப் போத்தல் வெள்ளையும், ஆறு மாசம்னு அறுபது ரூபாயும் ரெண்டு வெள்ளையும்.

உடும்பு போனு போவட்டும்ங்குற நெலேயில இருந்த அவங்களும் காசைப்பாக்காம அவளை கூட்டிக்குனு வந்துட்டாங்க. கிழவீ வந்த சங்கதி தெரிஞ்சவுடனே தோட்டமெல்லாம் இது தான் கதை. மலேயில, பெரட்டுக்களத்துல, பீலிக்கரையில, எங்க பார்த்தாலும் காவேரி முழுகாம இருக்காளாம்ங்கிறது தான் குசுகுசுப்பு. நம்ம சனங்க வெறும் வாயையே மொட்டு மொட்டுன்னு மெல்லுவாங்க. இப்படி ஒரு வெசயம் கிடைச்சா சும்மா இருப்பாங்களா? அந்த மனுசன் தரையைப் பார்த்த தலேயைத் தூக்குறதே இல்லே. தம் பொண்ணு தன்னே தலேகுனிய வச்சிட்டுதே என்ற வெசனம்.

பாட்டியின் பக்கத்தே கிடந்த பரமசிவத்தின் இளசு 'வீல்' என்று கத்தவே பாட்டி அதைத் தட்டிக் கொடுத்துக் கொண்டே கதையைக் தொடர்ந்தாள்.

அந்த மருந்துக்காரக் கிழவி வந்த மூணும் நாள் அந்த வூட்டுக்கு ஒரு போலிசய்யா வந்தாரு. அந்தப் பொண்ணு பேரைச் சொல்லி வெசாரிச்சாரு, தாலி கட்டாமலே அந்தப் பொண்ணு தாயாகிவிட்டதாகவும், பெத்தவங்க கருவை கலேச்சு வூட்டுலேயே குழி வெட்டிப் பொதைச்சிட்டதாகவும் பெட்டிஷன் வந்திருக்குன்னு அவரு சொன்னுரு பெண்ணேப் பார்த்து டாக்டரய்யாவுக்கு எழுதிக்குடுத்துட்டு, அவரு பொயிட்டாரு. அக்கம்பக்கத்துக்கு மட்டும் தெரிஞ்சது இப்ப அரசாங்கத்துவரை தெரிஞ்சிட்டதேன்னு அந்த மனுஷன் கெடந்து அங்கலாய்ச்சுக்கிட்டது; அவமானம் தாங்காம ஒரு நாளு தூக்குப் போட்டுக்குனு தொங்கிட்டது.

...கூலிக்காரன்னு அவனுக்கு மட்டும் மானம் மருவாதி இல்லேயா?

பாட்டி அழுதே விட்டாள்.

' இவ்வளவுக்கும் காரணம் யாரு... நீயே சொல்லு?'' கிழவீ நேரிடை யாகவே பேத்தியைக் கேட்டாள்.

பேத்தி பதில் கூறவில்லே.

அவள் உள்ளம் கொதி நீராய்க் கொந்தளித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டியின் கதையில் வந்தபெண் அல்ல அவளை அலைக்கழித்தது, அவளே-ஒரு உருவாகி அவளையே அந்த உரு அலைக்கழித்துக் கொண்டிருந்தது. அந்த இருசனுடன்தான் கூடிக் கும் மாளமிட்ட இத்தனை நாளில் என்றுவது தன்னை அவனுக்கு அர்ப்பணித்திருக்கின்றளா என்பதை ஆராய்ந்தாள் தனக்கும் அந்த கதைப் பெண்ணுக்கு நேர்ந்த கதிதானே நேரும் என்று மயங்கினுள்!

அன்றைக்கு!... இல்லை அதற்கடுத்தநாள்... அன்றும் இல்லை! நேற்று அவனுகவே வலிய இழுத்தும் நாளைக்குப் பார்ப்போம் என்று ஓடிவந்து விட்டாள்.

இன்று....?

அழுது ஓய்ந்த பாட்டியின் குரல் அவள் கற்பனையைத் துண்டித்தது.

''அந்தப் பொண்ணு மட்டும் நாளைக்கு வாரதை எண்ணி சாக்கிரதையா இருந்திருந்தா இவ்வளவும் நடக்குமா? நாளைக்குத் தனக்குத் தானே கஷ்டம். ஆம்பளைக்கு என்ன? நானு? எப்போன்னுட்டு போயிருவான். இதையெல்லாம் ரோசிக்கக்கூடவா பொண்ணுப் பொறந்ததுக்கு புத்தியில்லாமப்போயிறும்,''

பாட்டி தனக்கே சொல்லுவது போலிருந்தது காவேரிக்கு. கட்டை யைப்போல படுத்த வண்ணம் கேட்டுக் கொண்டிருந்தாள்.

லயத்துல விட்டுவச்சிருந்தா அந்த பொண்ணும் செத்துப் போயிடும்னு உடனே ஆசுப்பத்திரியிலே கொண்டு போய் நிப்பாட்டிக் கிட்டாரு டாக்டரய்யா. அந்தப் புள்ளே ஒன்னுமே சாப்பிடுறது இல்லே. எளைச்சு எலும்புந் தோலுமாயிட்ட அப்புறம் என்ன...? எளவயது, எளைச்சுப்போன உடம்பு: தலைச்சன் புள்ளை எல்லாமாச் சேர்ந்து அவளைத் தின்னுறுச்சி.

சிசுவை இந்த ஒலகத்துல விட்டுட்டு அந்த மவராசி துள்ளித்திரியற அந்தப் பதினறு வயசுல, ஊத்தைப் பேரையும் சொமந்துக்குனு போய்ச் சேந்துட்டா...

அதிலேருந்து உன்னை வளர்த்து எடுக்க நான் என்னபாடு பட்டேன் தெரியுமா...?

காவேரி துள்ளித் துடித்துப் போனுள்.

''பாட்டி'' என்ற பேத்தியின் அலறலைப் பொருட்படுத்தாத கிழவி 'ஒங்காயாவுக்கு நேர்ந்தகதி ஒனக்கும் நேரனுமா! நாளைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடப்பதை யோசிக்காம இன்னிக்கு மட்டும் இன்பமா இருந்திட்டாப் போதுமா'' என்று கேள்வி மாலை தொடுத்தாள்.

ஆடிமழையில் நனைந்த சூரியகாந்தியாய் துவண்டு கிடந்தாள் பேத்தி.

கூடாது!... கூடவே கூடாது...!! காவேரியின் மனம் கடலாய்க் கொந்தளித்தது.

பின் ஜன்னலில் விழுந்த டொக் டொக் என்ற சப்தம் வெண்கலப் பானையில் பளிங்கு விழுந்தது போல் கிணீர் கிணீர் என்று விழுந்தது காவேரியின் காதுகளில்.

நேற்று வரை ஒருவித அசம்பாவிதத்துச்கும் தன்னை ஆளாக்கிக் கொள்ளாத காவேரி இன்று...'.

பாட்டி தூங்கிய பிறகு அவனை வரும்படி அவள்தானே கூறுனள். ஏமாற்றி விடுவாயா? என்ற அவனுடைய கேள்விக்கு ''இல்லவே இல்லை.' என்று அவள் தானே வாக்கும் கொடுத்திருந்தாள். அதோ அவனும் வந்துவிட்டானே! இனி என்ன செய்வது?

பாட்டிமட்டும் கதை சொல்லி மனதைக் குழப்பியிரா விட்டால்... குதூகலத்துடன் ஒளிந்து ஓடியிருப்பாளே?

சன்னமாக வெளிவந்த பாட்டியின் குறட்டை ஒலி' அதற்குள்ளாக தூங்கி விட்டாள் என்ற மன உறுத்தல்: உழைத்து சலித்த உடலல்லவா? என்ற சமாதான முயற்சி ஆகிய இத்தனை மனக்குழப்பங்களுக்கிடையே முன் கதவும் லேசாகத் திறந்து கொண்டது.

புஸ்ஸென்று வெளிவந்த மூச்சை மெதுவாக இழுத்துப் பிடித்து விட்டாள்.

பேத்தியைத் தொடர்ந்து பாட்டியும் வெளியே வந்தது பேத்திக்குத் தெரியாது. கதை சொல்லத் தெரிந்த பாட்டிக்கு குறட்டை விடவாத் தெரியாது!

''தான் இவ்வளவு நேரம் இறைத்ததெல்லாம் விழலுக்குத் தானு'' என்ற ஏக்கம் கிழவிக்கு.

அந்த இளைஞனும் பேத்தியும் பேசிக்கொள்வது பாட்டியின் பழைய காலக்காதுகளுக்கு எட்டவில்லை. சந்தர்ப்பத்தை சமாளிக்கக்கூடிய அளவு நெருங்கி நிற்க வேண்டுமென்ற எண்ணத்துடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருங்கிச் சென்றாள். அவர்கள் பேச்சு அவளுக்கு நன்றாகக் கேட்டது. ''இந்தா காவேரி! இன்னிக்கும் நான் சும்மாப் போகு ஏலாது. இத்தனை நாளா என்னை ஏமாத்தினது போதும்'' அவனு டைய குரல் நடுங்கியது.

''நான் ஒன்னை எப்ப ஏமாத்தினேன். இதோ பாரு! ஒனக்கு எய்மேலே அவ்வளவு ஆசைன்னு நாளைக்கே எங்கக் கிழவி கிட்ட வந்து நானு ஒம் பேத்தியைக் கட்டிக்கப் போறேன்னுச் சொல்லு மத்ததெல்லாம் அப்புறமாப் பாத்துக்கிடலாம்.

அதுக்கு இப்ப என்னு அவசரம்-? அதைச் சொல்லத்தானு இந்த சாமத்திலே என்னைய அழைச்சே...!

''ஆமா! அதுக்கு இப்ப அவசரமில்லேன்னு மத்ததுக்கும் இப்ப அவசரம் இல்லே'' என்றவாறே காவேரி நடந்துவிட்டாள்.

கிழவியின் மனம் மகிழ்ச்சியால் சிரித்தது. பேத்தியைத் தூக்கி உள்ளத்தில் ஓர் உயர்ந்த இடத்தில் வைத்துக்கொண்டு வீட்டுக்குள் விரைந்தாள்.

''நில்லு'' எட்டி நடந்த காவேரியை இழுத்துப் பிடித்தது இருசனின் இரும்புக்கரம்.

''நேரமாவுதில்லே'' என்று இறைந்தபடி அவள் உடம்பில் கையை ஓட்டினான். இருட்டுத்தான் என்றாலும் கைக்குத் தெரி யாதா?....

பளார்...!

உழைத்து உறுதிவாய்ந்த கையல்லவா காவேரியின் கை. இருச னின் கன்னம் சிவந்தது.

கதவைச்சாத்திக் கொண்ட காவேரி படுக்கையில் விழுந்து விம்மினாள்.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கால ஓட்டம்

## சாரல் நாடன்

**ஆகா**...... நெஞ்சில் இனிக்கும் நினைவுகள் என்று யாரோ ஒரு தமிழ்க் கவிஞன் பாடியிருக்கிறானே, அந்தக் கற்பனை இதே போன்ற சூழ்நிலையில்தான் அவனுக்குத் தோன்றி யிருக்க வேண்டும். எனக்கு மட்டும் கவிதா ரசனை இருந்தால் அவனைப் போன்று ஒரு பாடல் என்ன...? ஒரு காவியமே இயற்றி விடுவேன்!

பெண்களின் விம்மிப் புடைத்த மார்பகங்களின் மீது பச்சைநிறச் சேலையைப் போர்த்ததைப்போல காட்சியளித்தது அந்தத் தேயிலைத் தோட்டம்.

எத்தனை உயர்ந்த மலைகள்? அந்த உயர்வில் வளர்ந்து நிற்கும் கணக்கற்ற மரங்கள்; மரங்களின் கீழ் ஆர்த்து நிற்கும் இளந்தளிர்ச் செடிகள்......

எல்லாம் ஒரே பசுமை.

ஆமாம் மலை நாடெங்கணும் ஒரே பசுமை — அங்கு உள்ளவர்களின் வாழ்வைத் தவிர்த்து.

தினந்தோறும் வானமளந்து நிற்கும் இம்மலைகளில் ஏறி இறங்குவதென்றால்...... நினைக்கவே மலைப்பாகவும் பயமாக வும் தானிருக்கிறது; இமயத்தில் கொடி கட்டியவர்கள் இவர் களின் முன்னோர் என்பது வெறும் கற்பனையாக இருக்க முடி யாது! தமிழர் வீரம் இன்னும் செத்துவிடவில்லை. நவநாகரிகம் எட்டாத இந்தத் தோட்ட சமூகத்தின் நாளாந்த வாழ்க்கையில் அது இன்னும் உயிர் வாழ்கிறது — கால அரக்கனின் ஜீரண சக்திக்கு உட்பட்டு அழியாது.

ஏறக் குறைய பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பின் இந்த இடத்தைப் பார்க்கும்போது பசுமரத்தாணி போல பதிந் திருக்கும் பால்ய நினைவுகள் தோன்றுகின்றன. அந்த நினைவுகளில் உயிர் பெறும் நிகழ்ச்சிகள்.........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது நான் சிறுவன். ஐந்தாம் வகுப்புவரை இதே தோட்டத்துப் பள்ளிக்கூடத்தில்தான் படித்துக் கொண்டிருந்தேன். அப்போது நடந்த சம்பவங்கள் எதையுமே விகற்பமாக எண்ணவும், எண்ணியதை மறைக்கவும் தெரியாத வயது சிறுமிகளோடு ஒன்ருகச் சேர்ந்துகொண்டு ஓடி விளையாடுவதும், ஒளிந்து கண்டு பிடிப்பதுமாக இந்தத் தேயிலைத் தோட்டத்தையே ஒரு கலக்குக் கலக்கி விடுவேன். விடுவேன் என்ரு சொன்னேன்? தவறு...... விடுவோம் நானும் என் நண்பன் துரைசாமியும்.

துரைசாமியின் தந்தை அத்தோட்டத்து நூற்றுக் கணக்கான தொழிலாளர் "மந்தை"களில் ஒருவர். என் தந்தை மந்தைகளின் மேய்ப்பன்...... கண்டக்டர். ஆனால் இந்த வித்தியாசத்தையெல்லாம் பெரிதுபடுத்திக்கொள்ளும் பெரிய மனுஷத் தன்மைக்கு உட்படாது, விளையாட்டொன்றையே முன் வைத்து உறவுபார்க்கும் சிறுபிள்ளைத்தனமான நாட்கள். அப்படி அமைந்த உறவு முறையில்தான் எத்தனை சண்டையும் சச்சரவும்? பெரிய மனுஷத் தோரணையில் குடும்பம் நடத்த முனைந்த குடும்ப விளையாட்டுக்கள்தாம் எத்தனை? இப்போது நினைத்தாலும் அவைகள் இனிப்பதற்குக் காரணம் என் துரைசாமிதான்.

கண்ணாமூச்சி விளையாடுவதிலிருந்து கல்லெறிந்து கொய்யாப்பழம் திருடுவதுவரை அவன்தான் எனது வலது கரம். காலத்துக்கு இதயமில்லை. இல்லாவிட்டால் அந்த விளையாட்டுப் பருவத்தை, மனித வாழ்க்கையில் ஒரு குறுகிய எல்லைக்குள் முடித்துவிட்டிருக்குமா?

பள்ளிக்கூடத்தில் மட்டுமென்ன? நானென்றும் படிப்பில் அவ்வளவு சிறந்தவன் இல்லை. சாதாரணம்தான். துரைசாமியோ மகா கெட்டிக்காரன். இதை எங்கள் சுந்தரமூர்த்தி வாத்தியார் அடிக்கடி குறிப்பிடுவாரே!

எனக்குத் தெரியாததையெல்லாம் தெளிவுபடுத்தி படிக்க வேண்டும் என்ற ஆசையை — என் மரமண்டையில் புகுத்தியது அவன் தந்த சம்பளமில்லாத — "டியூஷன்" தான்.

சுந்தரமூர்த்தி வாத்தியாரின் கொடி பிரம்புக்கும் ஏச்சுக்கும் மசியாத என் மூளை அவனது நட்புக்கு மசிந்து கொடுத்தது. "வீட்டில் தின்னுபுட்டு சும்மா கெடக்க வேண்டியதுகளும், சொரண்டிய தூக்கிக்கிட்டு புல்லுவெட்டப் போக வேண்டியதுகளும் இங்கு வந்து நம்ம உசிர வாங்குதுகள்" என்ற அவரது வயிற்றெரிச்சலில் வெளிப்படும் சாபத்துக்கு இல்லாத சக்தி "என்ன நல்லா? பாரு! யோசித்துப்பாரு! அன்னிக்குக்கூட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரியா சொன்னியே இப்பமாட்டேங்கிறியே" என்ற துரைசாமியின் இதயத்தை நெகிழ்த்தும் சொற்களுக்கு நிறைய உண்டு.

எனக்கு நன்ருக நினைவிருக்கிறது. சுந்தரமூர்த்தி வாத்தியார் வாரத்துக்கு இரண்டு முறை ஐந்தாம் வகுப்பில் படிக்கும் பெரிய பிள்ளைகளாகப் பார்த்து விறகு கொண்டு வரும்படி கூறுவார். மற்ற வகுப்பு மாணவர்கள் அந்த நேரத்தில் பள்ளிக்கூடத்தைச் சுற்றியிருக்கும் அவரது தோட்டத்தில் "தோட்ட வேலை" செய்வார்கள்.

ஆசிரியருக்கு மாணவர்கள் தங்களின் குருதட்சணையை அதன்மூலம் செலுத்தி வருவது தோட்டத்தில் தொன்றுதொட்டு நிலவி வரும் தழும்பேறிப்போன பாரம்பரியம். காலத்தின் கொடுமைக்குள் சிக்கிச் சிதையாது இன்னும் உயிரோடு பேணப் படும் மலைநாட்டு வழக்கங்களில் அதுவுமொன்று.

அங்கேயும் — விறகு வெட்டும் போதும் மிலாறு பொறுக்கும்போதும் – அவன்காட்டும் விரைவு... அப்பப்பா...!

எனக்கும் சேர்த்தே அவன் விறகு சேகரிப்பான். அதைத் தூக்கிக்கொண்டு வருவதொன்றே நான் செய்யவேண்டிய வேலை. அப்போதும் சுமை தெரியாமலிருப்பதற்காக அவன் சொல்லும் கதை — சொல்லும் முறைதான் எவ்வளவு கவர்ச்சியானது.

அல்லியரசாணிமாலை, விக்கிரமாதித்தன், மயிலிராவணன், நல்லதங்காள் ஆகிய பல கதைகளையும் அந்த சின்ன வயதிலேயே நான் தெரிந்துவைத்திருந்தமைக்கு அவன்தான் காரணம் என்பேன்.

அந்த சின்ன வயதிலேயே அதையெல்லாம் தெரிந்து வைத்திருக்கிருனே! எனக்கு ஆச்சரியமாயிருந்தது.

ஒருநாள் அவனிடம் கேட்டேன்.

"துரை இவ்வளவு நல்லா கதை சொல்றியே! யாருக் கிட்டேயடா கத்துக்கிட்டே!"

"எங்க அப்பா ராத்திரி படுக்கிறப்போ , தூக்கம் வர்ர வரைக்கும் இப்படி ஏதாவது படிக்கச் சொல்லி கேட்பாரு. விளங்காத இடத்தில் எனக்குத் தெரிஞ்ச மட்டும் விளங்கப் படுத்துவேன். அப்படி செய்ததால் அவைகளெல்லாம் எனக்கு மனப்பாடமாயிடுச்சி. அதிலும் இந்த நல்ல தங்காள் கதையிருக்கே! அம்மாவுக்கு உசிரு! திரும்பத் திரும்ப படிக்கச் சொல்லி கேட்பாங்க..."

"இந்த புத்தகம் உங்க வீட்டுல இருக்குதா?"

"மூணு நாலு கெடக்குது. அட்டலில் தேடிப் பார்த்தா இன்னும் கெடைச்சாலும் கெடைக்கும். இந்த பெரிய எழுத்து புராண வரிசைகளும், நவரச, ஒப்பாரிவரிசைகளும்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களது தாத்தாவும் அம்மாயும் எங்களுக்கு விட்டுப்போன சொத்து."

இதைச் சொல்லும் போதே அவனது முகத்தில் இனம் தெரியாதவொரு மலர்ச்சி பரிணமித்தது. அதுகாலப் போக்கில் இழைந்தோடி நிலைத்து நிற்கும் பாரம் பரியத்துக்கு அவன் காட்டிய மரியாதை.

இதைக் கேட்டதும் நானும் ஒரு தொழிலாளியின் குடும்பத்தில் பிறந்திருக்கக்கூடாதா என்ற ஏக்கம் ஏற்பட்டது. இது போன்ற எத்தனைக் கதைகளை படிக்கும் வாய்ப்பு கிடைத்து இருக்கும்?

என் எண்ணப் போக்கை உணர்ந்தவன் போல துரை சாமி பேசினுன்.

"என்ன நல்லா! உங்க வீட்டுலே இந்தக் கதை புத்தகங் களெல்லாம் இல்லையா? உங்க வீட்டுல யாருக்கும் இந்த கதை யெல்லாம் தெரியாதா?

தமிழர் பாரம்பரியத்தோடு ஒன்றியைந்து வளர்ந்த புராதன கலைகள் பழைய கர்நாடக முறையில் வாழ்பவர்கள் இடையேதான் இன்னும் உயிரோடு வாழ்கிறது, என்பதை புரிந்து கொள்ள முடியாத வயது என்னுடையது. அதனுல் அதற்கு பதில் சொல்லாமல் மௌனமாக இருந்தேன்.

மௌனத்துக்கு அவன் எப்படி அர்த்தம் கற்பித்துக் கொண்டானே தெரியவில்லை.

சிறிது நேரம் அமைதி நிலவிற்று. நான் அவனைப் பார்த் தேன். அவன் என்னைப் பார்த்தான் என்றநிலைமை. பின் நான்தான் பேச ஆரம்பித்தேன்:—

"உங்க வீட்டுல வேற ஒண்ணும் வாங்க மாட்டாங்களா துரை?"

"வேற ஒண்ணும்னு"......

"ஆனந்தவிகடன், கல்கி, குமுதம்......?"

"ஆமாண்டா! நல்லா! அதெல்லாம் வாசிக்கணும்னு எனக்கு ரொம்ப நாளா ஒரே ஆசைதான். ஆனுல் யாரு வாங்கித் தருவா...?" ஏக்கத்தோடு கேட்டான்.

"அதைப்பத்தி ஒனக்கு ஏதாச்சும் தெரியுமாடா?"

"ரொம்ப கதைகளிருக்கும்டா......! ஒரு நாள் நம்ம வாத்தியார் வீட்டுத் தோட்டத்தில் ஒரு பழைய புத்தகம் கிடந்திச்சி. படிச்சிப் பார்த்தேன். ரொம்ப நல்ல கதைகள் இருந்திச்சுடா!"

"அதெல்லாம் படிச்சியினு இன்னும் ரொம்ப கதைகள் சொல்லுவ இல்லையா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நெசந்தான்டா? ஆமாம் உங்க வீட்டுல அதெல்லாம் வாங்குகிறீங்களா?" ஏக்கத்தோடு ஆசையும் இழைத்து அவன் பேசினன்.

"ஆமாம்டா! என்னென்னமோ புத்தகங்க வாங்குறுங்க! ஆனு யாரு படிக்கிறு! அவசரத்துக்கு அடுப்பு பத்தவைக்கத்தான் உதவும்."

இதைக் கேட்டதும் அவனது கண்கள் வியப்பால் விரிந்தன. என்னை ஏதோ ஒரு நூதனப் பிராணியைப் பார்ப்பதைப் போல பார்த்தான்.

"வேணும்னு ஒனக்குகொண்டாந்து தாறன். வாசிச்சிட்டு தா. நான் வாசிச்சேன்னு பாடங்கள் படிக்காம கெட்டுப் போறேன்னு அப்பா ஏசுவாரு."

"சரிடா" அவன் நன்றி கலந்த பார்வையொன்றை என் மீது வீசினன்.

அதன் பின்னர் அவன் எனக்குப் பிடித்த புதிய கதைகளைச் சொன்னன். கேட்பதற்கு அவைகளெல்லாம் ரசமாயிருந்ததால் நானும் அவைகளைப் படிக்கத் தொடங்கினேன்.

காலம் காட்டாறுபோல வேகமாக ஓடியது. அதன் போக்கில் எத்தனையோ மாறுதல்கள்.

நான் நாவலப்பிட்டியிலும், பின் பல்கலைக் கழகத்திலும் சேர்ந்து படித்தேன். பன்னிரெண்டு ஆண்டுகள் உருண்டோடி விட்டன.

இப்போது நானொரு பட்டதாரி. கல்லூரி ஒன்றில் ஆசிரியர். கால ஓட்டம் என்னை எவ்வளவு உயர்த்தியது? துரைசாமியை.........?

படிக்கும் காலத்தில் வீட்டில் தங்கி வானம் அளந்து நிற்கும் மலைகளின் அழகையெல்லாம் இரசிக்காத குறையை இந்த விடுமுறையிலாவது போக்கிக் கொள்ள வேண்டும் என்ற வெறியோடுதான் வந்திருக்கிறேன்.

கால ஓட்டத்தில் நான் மாறியதைப் போல அவ்வளவாக இல்லாவிட்டாலும் இந்தத் தோட்டமும் மாறித்தானிக்கிறது.

முன்பு நாங்கள் பிள்ளையார் பந்து விளையாடிய பொட்டலில் புதிய லயன்கள் பல கட்டியிருக்கிறுர்கள். பார்க்க நன்றுய்த்தானிருக்கின்றன. முன்பு மாதிரி குனிந்து சென்றுல் இடிக்கும் மாட்டுப்பட்டி, "கதவு" மாதிரி இல்லாமல் புதிய முறையில் சமையலறை எல்லாம் வைத்துக் கட்டியிருந்தார்கள்... "பரவாயில்லையே நத்தை வேகத்திலே யாயனும் தோட்டத்தில் மாறுதல் தெரிகிறதே."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காற்று மெதுவாக வீசி உடலை இதப்படுத்தியது. காணும் காட்சிகள் உள்ளத்தை இதப்படுத்தின.

அதோ அந்தப் பள்ளத்தில் நிற்கிறதே ஒரு சவுக்கு மரம். அதைக்கூட காலம்விட்டு வைக்கவில்லை. முன்பு செழித்து படர்ந்திருந்த அந்த மரம் இப்போது பட்டுப் போகும் தறுவாயிலிருந்தது. இலைகளெல்லாம் கொட்டிவிட்டிருந்தன. அதற்கு பட்டை வெட்டிவிட்டிருந்தார்கள்.

அந்த மரத்தில் வளர்ந்து விட்டிருக்கும் கிளை ஒன்றிருக்கிறதே! அதிலுள்ள பொந்து ஒன்றில்தான் "மைனு" கூடு கட்டியிருந்தது. அது இறக்கை விரித்து இன்பமாக பறந்து திரிவதை புரிந்து கொள்ளமுடியாத சிறு "பிராயம்". அதைப் பிடித்து நாக்கை அராவி பேச வைத்து பார்க்க வேண்டும் என்ற சிறு பிள்ளை ஆசை.

இதைத் துரைசாமியிடம் சொல்லிய போது, "இன்னிக்கு அந்திக்குப் பார்ப்போம்" என்ருன்.

அன்று மாலை.

இருவரும் அந்த மரத்தருகே சென்ரேம். அவன் இரண்டு ஏணிகளை ஒன்ருக இணைத்து உயரமாகக் கட்டி மரத்தின் மீது சாய்த்து நிறுத்திஞன். ஏணியின் இரு ஓரங்களுக்கும் நடுவில் மரம் நின்றிருக்குமாறு சாத்திவிட்டிருந்தான். ஏணியை இப்படியும் அப்படியும் நகர்த்திப் பார்த்தான். நகரவில்லை. அவனது செய்கைகளை பார்த்துக்கொண்டே, நான் பேசாமல் நின்று கொண்டிருந்தேன்.

"நல்லா இதை எதுக்கும் இறுக்கமாப் புடிச்சுக்க" என்று சொல்லி ஏணியை காட்டிவிட்டு, அதன்மீது ஏறத்தொடங்கிஞன். அவனது கையில் சல்லடை கம்பியிலான ஒரு சிறிய கூடு வைத்து இருந்தான்.

துரைசாமி இரண்டு குஞ்சுகளையும் பிடித்து கூண்டுக்குள் போட்டுக் கொண்டு கீழிறங்க த்தொடங்கிஞன். அப்போதுதான் அது நடந்தது.

அதன் தாய்ப்பறவை திரும்பி வந்து கூண்டில் குஞ்சுகள் இல்லாததையும், என் நண்பன் பிடித்திருந்த கூண்டினுள் அவை சிறைவைக்கப்பட்டிருப்பதையும் கண்டது. அவ்வளவுதான். கீச், மூச் என்று ஒரே சத்தம். தம் இறக்கைகளை வயிற்றில் அடித்துக் கொண்டு மரத்தை சுற்றிச் சுற்றி பறந்தது. தாய்ப் பறவையின் வியப்பைக் கண்டதும் குஞ்சுகளும் கூண்டின் சந்துகளிடையே தலையை நீட்டிக் கொண்டு கத்தத் தொடங்கின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னிரு கைகளாலும் துரைசாமி தாய்ப் பறவைகளை விரட்ட முயன்ருன். ஆனுல் அந்த அற்ப மருட்டலுக்குப் பணிந்து விடுவதா தாய்ப்பாசம்!

நண்பன் ஏணியில் நின்றபடி பரிதாபமாக என்னையும் கூண்டையும், தாய்ப்பறவையையும் மாறிமாறிப் பார்த்தான். நான் தலையைக் குனிந்து கொண்டேன்.

சிறிதுநேரம் சென்று நிமிர்ந்துபார்த்தபோது நண்பன் குஞ்சுகளை கூட்டுக்குள் திருப்பி வைத்துவிட்டு இறங்கிக்கொண்டிருந்தான்.

கீழே இறங்கியதும் அவன் முகத்தை ஏறிட்டுப் பார்த்தேன். அவன் கண்கள் கலங்கியிருந்தன.

"நல்லா — என் மீது கோபமா?" பரிதாபமாய் இருந்தது. அவன் கேள்வி.

"இல்லை துரை! உன் மீது எனக்கேன் கோபம். நீ இவ்வளவு இளகிய சிந்தையுள்ளவன் என்பதை இப்போதுதான் கண்டு கொண்டேன். நான் செய்ய இருந்த பாவத்தை தடுத்து நிறுத்திட்டியே!"

அப்படியா நல்லா! சுந்தரமூர்த்தி வாத்தியார் ஒருநாள் "ஜீவகாருண்யம்" பற்றிப் படித்துக் கொடுத்தாரே! நினைவிருக்கிறதா? அன்றிலிருந்தே நானிப்படித்தான், இன்னைக்குக்கூட உன் ஆசையைக் கெடுக்கப்படாதுன்னுதான்......!

"உங்க வீட்டிலே ஏதேனும்."

"அப்படி ஒன்னும் கஷ்டமாயில்ல. பெரும்பாலான வீட்டுல ஜீவகாருண்ணியம் கடைப்பிடிக்கப்படுவதற்கு, அவர்கள் வீட்டில் நிலவும் வறுமைதான் காரணம். அந்த வறுமை எனக்கும் உதவுகிறது."

என்னைப் போல் வசதியில்லாத வாழ்க்கையிலும் அவனுடைய அறிவு முதிர்ச்சியும் தெளிவும் அவனிடத்தில் எனக்கு ஒருவித மதிப்பேற்படுத்தியது. இன்றும் அது நின்று நிலவுகிறது.

குறிதவருது கல் எறிவதில் அவன் சமர்த்தன். என் சக மாணவர்களில் இந்த விஷயத்தில் அவனிடம் பொருமை கொண்டு ஒருமுறை "ஏன் பீத்திக்கிற, முடியும்ன அந்தக் குருவியை அடித்து விழுத்து, விழுத்த முடியுதான்னு பார்ப்போம்" என்று மாமரத்தின் உச்சியில் உட்கார்ந்திருந்த குருவி ஒன்றைக் காட்டி சவால் விட்டனர்.

சவாலுக்கு எதிர்ச் சவால் விடும் அந்தப் பயமறியாத இளம் கன்று பருவத்திலும், நிதானமாக, "ஏன் இந்த விளையாட்டுக் கெட்டித்தனத்தைக் காட்டிட இந்தக் குருவிதானு கிடைச்சது?" என்று கேட்டுவிட்டு அருகிலிருந்த தவிட்டுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொய்யா மரம் ஒன்றின் உச்சியிலிருந்து சில பழங்களை அடித்து வீழ்த்தித் தன் திறமையை அப்போது மெய்ப்படுத்திக் கொண்டான்.

தனது திறனை வெளிப்படுத்துவதற்குக்கூட பிற உயிர்களைத் துன்புறுத்த நினையாத அவனது காருண்ய மனம் இன்று நினைத்தாலும் மெய் சிலிர்க்கிறது.

ஊ...... ஊ...... ஊ...... ஆலைச் சங்கின் ஒலி என் நினைவோட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தது. தொழிலாளர் வேலையினின்றும் வீட்டுக்குத் திரும்பலாம் என்பதற்கான அடையாளம் அது.

நாள் முழுவதும் உடலில் ஏற்றிக்கொண்ட சோர்வை மட்டுமல்லாது கூடையில் நிறைத்துக்கொண்ட சுமையையும் இறக்கி வைப்பதற்காக மடுவத்தை நோக்கித் தொழிலாளர்கள் திரும்பிக் கொண்டிருப்பதுகூட அழகாகத்தான் இருக்கிறது.

ஓர் ஓரத்தில் நின்றபடி அவர்களில் ஒருவன் என் துரைசாமியாக இருக்கக்கூடாதா? என்று கவனிக்கிறேன். ஒவ்வொரு ஆண் தொழிலாளியையும் உற்று உற்றுப் பார்க்கிறேன்.

கறுத்த வியர்த்த முகம்; வதங்கி சுருங்கிய நெற்றி குழி விழுந்தகன்னம், காவிபடித்தபற்கள். இத்தனையும் நிறைந்த அந்த தொழிலாளர்களிடையே, "ஜீவகாருண்யமும் அறிவும் மிக்க என் துரைசாமியைக் தேடிப் பார்க்கிறேன்.

இன்னும் ஐந்தாறு தொழிலாளர்கள்தான் எஞ்சியிருக்கின்றனர். அவர்களுள்ளும்...... இல்லையே...... அவனைக் காணோமே.........!

ஏமாற்றத்தோடு திரும்ப முனைகையில் துரைசாமி என்ற பெயர் அவர்கள் சம்பாஷணையில் கேட்கவே நின்று உற்று கேட்கிறேன். சபலம் விடுகிறதா? என்ன?

"இப்ப முன்னமாதிரியில்ல. காலம் மாறிப் போயிடுச்சு. இல்லாட்டி துரைசாமி அப்படி நடந்துக்குவானு...!" என்றான் ஒருவன்.

"அதுதானே! பாருங்களேன்" என்றான் மற்றவன்.

"சிறிதா இருந்தப்போ எப்படி சாதுவா இருந்தான் துரை" என்றான் வேறொருவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் மனம் படபடத்தது. மூச்சைப் பிடித்துக் கொண்டு காதைத் தீட்டியவண்ணம் கேட்டுக் கொண்டிருந்தேன். "தன்ரை "ஸ்ரைட்க்" கில் சேராமே வேலைக்குப்போயிட்டான் என்பதற்காக தன் சித்தப்பன் மகனையே வெட்டிப்போட்டானே! கொலைகாரப்பாவி...! ! !" என்றான் மூன்றுமவன்.

எனக்குப் "பகீர்" என்றது, தலையைச் சுற்றியது. செவிகள் கேட்கும் சக்தியை இழந்து விட்டிருந்தன.

காருண்யத்தையும் கருணையையும் சூழ்நிலையின் உதவியுடன் உட்கிரகித்து சீரணித்துவிடும் கால ஓட்டம் தன்பாட்டில் போய்க்கொண்டிருந்தது.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காயம்

## தங்க-பிரகாஷ்

பள்ளிக்கூட விடுமுறை நெருங்கிக் கொண்டிருக்கும் போது அன்னை எனக்கு கடிதம் எழுதியிருந்தாள். எல்லோரது நலன்களையும் எழுதியிருந்தாள். பார்வதியக்காவுக்கு இரண்டு யார் பட்டுப் புடவை எடுத்து வரும்படி ஆணையிட்டிருந்தாள்.

பள்ளிக்கூட விடுமுறைவிட்டு வீடு திரும்பும்போது மறவாமல், அந்தபட்டுப் புடவையை வாங்கிக் கொண்டேன். வீட்டுக்கு வந்ததும் வராததுமாக பார்வதியக்காவைப் பற்றித்தான் விசாரித்தேன்.

இரண்டு மூன்று நாட்களாக வீட்டுப் பக்கமே வர வில்லையென்றும் உடல் நலக்குறைவான காரணத்தால், தான் போய் பார்வதியைப் பார்க்கவில்லையென்றும் அன்னை கூறினாள்.

அன்னையிடம் விடை பெற்றுக்கொண்டு பார்வதி யக்காவின் வீடு நோக்கிக் கிளம்பினேன்.

"யாரது தம்பியா! வந்துட்டீங்களா? என்றபடி உள்ளிருந்து பார்வதியக்காதான் வந்தாள். அழகிய அவள் உருவம் அடியோடு மாறியிருந்தது. விசாலமான விழிகளில் ஒளியேயில்லை. வலது காலை நொண்டியபடி மெல்ல வந்தாள்.

"தம்பி பரீட்சையெல்லாம் நல்லா எழுதுனீங்களா? ரொம்பவும் மெலிஞ்சிட்டீகளே! நல்ல சாப்பாடு கிடைக்க வில்லையா?"

எனக்கு அவள் கேட்டது ஒலிக்கவில்லை. அவள் வலது கால் பக்கமே பார்த்தேன்.

"ஒண்ணுமில்லே தம்பி! அன்னிக்கி பைப்படிக்குப் போன போது வழுக்கி விழுந்துட்டேன். காலிலே அடிபட்டுவிட்டது. எல்லாம் சரியாயிடும்; நீங்க ஒன்னும் யோசிக்காதீங்க, நேற்றுத் தான் எண்ணை பூசினேன் தம்பி!"

அவள் பேசிக்கொண்டே உள்ளே சென்றாள். திரும்பி வரும்போது சுவையான தேனீர் கொண்டு வந்து தந்தாள். நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதை வாங்கிக் கொண்டு என் கையிலிருந்த சிறு பார்சலை அவளி டம் நீட்டினேன். அதில் இரண்டு யார் பட்டுப்புடவையுடன் தீன் பண்டங்களும் இருந்தன. அதைப் பிரித்துப் பார்த்ததும் முகம் மலர்ந்தாள். கண்களில் எடுத்து ஒற்றிக் கொண்டாள்.

எனக்கு அக்காமார் யாரும் கிடையாது. என்பெற்றோர் களுக்கு நான் ஒரே பிள்ளை. தோட்டத்திலே வேலை பார்த்துவந்த பெற்றோர்களுக்கு என்னைப் படிக்கப்போட்டு, ஆளாக்க வேண்டு மென்று பெரும் ஆசை. தோட்டத்தில் கல்வி கற்று முடிந்ததும் பக்கத்திலேயுள்ள பட்டினத்து பள்ளியொன்றில் சேர்ந்து கல்வி கற்று வந்தேன்.

பார்வதி எனது உடன் பிறவா தமக்கை. பக்கத்து லயத்து சாமிநாதனுக்கும், அவளுக்கும் மணம் நடந்தபோதுதான் நான் அவளைப் பார்த்தேன். பார்வதி தோட்டத்துப்பெண். ஏழைதான்; ஆனால் அழகிலே செல்வி. அறிவும் பண்பும் இவள் முகத்திலே மிளிர்ந்ததைக் கண்டு வியந்தேன். மக்குகளுக்கெல்லாம் இப்படிப் பெண்கள் எங்கிருந்துதான் கிடைக்கிறார்களோ! என்று அப்போது வியந்தேன்.

திருமணம் முடிந்து தம்பதிகள் எங்கள்வீட்டுக்கு வந்தனர். எனது பெற்றோர் அவர்களை வாழ்த்தினர். அப்போது என் பெற்றோரின் கால்களில் விழுந்து வணங்கி, வாழ்த்துப் பெற்று எழுந்த பார்வதி. ஒரு மூலையில் ஒதுங்கி நின்றுகொண்டிருந்த என் முகத்தைப் பார்த்தாள். சில விநாடிகள் கவனித்தாள். அவளது விரிந்து சுழன்ற கண்களில் நீர் மல்கியதைக் கண்டு எல்லோருமே வியந்துதான் போனோம்.

சில நாட்களுக்குள்ளாகவே பார்வதி எங்கள் வீட்டைப் பெரிதும் கவர்ந்துவிட்டாள். அன்னை மீது அளவற்ற அன்பை அள்ளிச்சொரிந்தாள். என் அன்னைக்கும் பெருமகிழ்வு. எனக்கோ, அக்காள் ஒருத்தி கிடைத்ததில் எல்லையற்ற மகிழ்ச்சி. "தம்பி! தம்பி! !" என்று என்னை வளைய வந்த அவள் பாசப் பிடிப்பிலே திணறிப்போனேன். ஒருநாள் பார்வதியக்கா என் அன்னையிடம் கூறியதைக் கேட்டேன்.

எனக்கொரு தம்பியிருந்தாம்மா, நம்ப ராஜா மாதிரியே; எனக்கு ஒரே தம்பிதாம்மா அவன். என் கண்ணுபோல பார்த்தேன். ஆனா...? போன வருஷம் காய்ச்சல்லே படுத்து அவன் செத்துட்டாம்மா? நம்ப ராஜாவை பார்க்கும் போதெல்லாம், அவன் நினைவுதாம்மா வருது...!

அவள் தேம்பினாள். அன்னை தேற்றினாள். எனக்கோ மணவிழா சமயத்தில் பார்வதியக்கா என்னைப் பார்த்து கண்ணீர் துளிர்த்ததின் காரணம் புரிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவு ஆகாரத்தை முடித்துக் கொண்டு படுக்கையிலே சாய்ந்து மெல்ல கண்களை மூடினேன். எங்கிருந்தோ ஒரு விகார சப்தம் வந்து என்னை எழுப்பியது. காதுகளை கூர்மையாக்கினேன்.

அது உடுக்கின் ஒலி.

இரண்டு மூன்று உடுக்குகள் ஒன்று சேர்ந்து எழுப்பிய கர்ண கடூர சப்தத்தில் சுழன்று நின்றன. அவற்றுக்கிடையே சலங்கைகளின் நாதம் மிதந்து வந்தது.

நான் அளவுமீறிய வியப்பால் வெளியேவந்தேன். பார்வதி யக்காவின் வீட்டுப் பக்கமிருந்து வந்தது அந்த சப்தம். என் நெஞ்சு துடித்தது.

"......... ம் ரீங்காரி......, ஓங்காரி...... மாரியாயி......! ஓடி வா......? தாயே ...... ஓடி வா.........?

ஒரே மந்திரக் குரல். எழுந்து சப்தம் வந்த திசை நோக்கி ஓடினேன்.

பார்வதியக்காவின் வீட்டையடைந்தபோது பெரிய நிகழ்ச்சியொன்றினைக்கண்டேன். பேரிடிவிழுந்ததுபோலிருந்தது.

அங்கே.........!

கிழிந்து ஓட்டை விழுந்த பாயின் மீது கூந்தல் அவிழ்ந்து கிடந்த நிலையில் பேயாக ஆடிக்கொண்டிருந்தாள் பார்வதி. யக்காள் ஒளியிழந்த முகத்தால் ஜீவனற்ற உடலை வைத்து வெறி பிடித்து ஆடினாள்.

கையிலே உடுக்கு ஏந்தி, மயிர்கள் குத்திட்டு நிற்க, பம்பரமாய் ஆடிக்கொண்டிருந்த அந்த பூசாரியைப் பார்த்தேன். அந்த பூசாரிக்கு முன்னால் வைக்கப்பட்டிருந்த விபூதிப் பொட்டலம், சூடம், சாம்பிராணி பல்வேறு தீன் பண்டங்கள் இத்யாதி — ஊதுபத்தியின் மணம் நிரம்பி வழிந்தது. உயர்ந் தோங்கிய விளக்கொளி மங்கி மங்கி விரிந்தது. அவற்றின் சிருஷ்டிகர்த்தாக்களான — தோட்டத்துப் பெரியவர்கள் கரங் களில் உடுக்கையேந்திய சிஷ்யர்கள்.

ஐயோ......! இதென்ன கொடுமை என்று உள்ளே பாய்ந்தேன். என்னைத் தடுத்து நிறுத்திய சாமிநாதன், மெல்ல என்னை அழைத்துக்கொண்டு வெளியே வந்தான்.

"மாமா...? இதென்ன கொடுமை...?" என்றேன். அவன் என் முகத்துக்கு நேராக முதுகை திரும்பிக் கொண்டு பய பக்தியால் உடம்பெல்லாம் ஆடபதிலளித்தான்.

"நான் என்ன செய்யிறது தம்பி......! எல்லாம் அந்த ஆத்தாசெயல்...! பார்வதிக்கு பேய் பிடிச்சுக்கிட்டு இப்படி ஆட்டுறன். இப்பதான் விஷயம் புரிந்தது. பூசாரி வைச்சு பேய் ஓட்டுறோம்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றிரவு நான் தூங்கவேயில்லை. அழகே உருவான அக்காள்; அவலத்தால் பேயானவள். இரு உருவங்களும் மாறி மாறி என் மனதை வாட்டின.

காலையிலே எழுந்த எனக்கு ஆச்சரியமாகவிருந்தது. இரவு நடந்த நிகழ்ச்சிகளின் சாயல் எதுவுமேயில்லை. ஒருவேளை எல்லாம் கனவுதானு?

பார்வதியக்காவின் வீட்டுக்குச் சென்றேன். வீட்டில் யாருமேயில்லை. இரவு கண்ட அவலம் அப்படியேயிருந்தது. மூலையிலே வளைந்து சுருண்டு படுத்திருந்த உருவத்தைக் கண்டேன்; எலும்புக்கூடாக பார்வதியக்கா கிடந்தாள்.

"அக்கா.........! அக்கா.................!!"

அவள் விழித்தெழுந்தாள். கண்களை விரித்து கசக்கிவிட்டு திரும்பினுள். தட்டுத் தடுமாறி எழுந்தாள். சுவரைப் பிடித்துக் கொண்டு தள்ளாடி வெளியே வந்தாள்.

வெளியே என்னைக் கண்டாள்.

என் கால்களைப் பிடித்துக்கொண்டாள். ஆதரவாக என் தலையை கோதினுள். "அக்கா...!" என்று கண்ணீரோடு அழைத்தேன்.

"தம்பி...! இந்த அநியாயத்தை என்ன சொல்வேன்...? என் கொடுமையை பாருங்க தம்பி! எனக்கு பேய்பிடிச்சிருக்காம். பட்டமரத்து முனி பிடிச்சிருக்காம்......! இந்த பாவிக என்னைப் போட்டு அடிச்சிக் கொல்றுனுக. என்னைப் பாருங்க தம்பி... என் முகத்த பாருங்க...! எனக்கு பேயா பிடிச்சிருக்கு......?"

நெஞ்சின் மீது கரங்களால் ஓங்கி ஓங்கி அறைந்து கொண்டாள்.

"உண்மையை சொலுங்கக்கா. உங்களுக்கு என்னதான் நடந்தது......?"

"தம்பி அன்னைக்கு ஓங்கக்கிட்டே பைப்படியிலே விழுந்து அடிபட்டேன்னு சொன்னேனே,... அதுதான் தம்பி நடந்தது. அன்னைக்குபட்ட அடி பெரிய அடி தம்பி...! பெரிய அடி...! கால் சரிஞ்சே போச்சி. வலி பொறுக்க முடியாம நடுங்கினேன். அன்னைக்கி ஓங்கக்கிட்டகூட உண்மையை மறைச்சேன். இந்தப் பாவிக எனக்கு பேய் பிடிச்சிருக்கின்னு பூசாரியை வைச்சு ஆட்டுறுனுக. எவ்வளவோ சொல்றேன்...... என்னைப்போட்டு வதைக்கிறுனுக...... தம்பி! என் ஒடம்பப்பாருங்க...... ஒடம்ப பாருங்க.........!!"

அவள் ஆவேசத்தில் எழுந்தாள். மேலாடையை நகர்த்தி ரவிக்கையை கிழித்தெறிந்தாள். தன்னையே மறந்து சிறிதும் வெட்கமில்லாமல் மேலுடம்பை சுற்றி சுற்றிக் காட்டினுள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாட்டையடிகள்பட்டு இரத்தம் கட்டி தழும்பேறிப் போயிருந்தது.

எனக்கு மயக்கம் வந்தது. சாய்ந்து கீழே விழப் போனேன். அப்போதுதான் உள்ளே நுழைந்த சாமிநாதன் என்னை தாங்கிப் பிடித்தான். அவனையடுத்து எங்கோ வெளியே சென்றிருந்த அந்த மனித பேய்கள் உள்ளே நுழைந்தன. பார்வதியக்காளின் வெறிபிடித்த கோலம் பூசாரியின் வெளிறிய கண்களுக்குபட்டது. அவனது கரம் சாட்டையைத் தூக்கியது. உடுக்கைகளை எழுப்பி சிஷ்யர்கள் அதில் மொய்த்து நின்றனர்.

"அடே முனி.........? மறுபடியும் வந்துட்டாண்டா — ஓட்டுடா — அம்மா மாரிதாயே...! ஓடி வா......! !

பார்வதியக்காவை கீழேதள்ளி ஓங்கியோங்கி அடித்தான் பூசாரி.

மயக்கம்வரும்வரை அடித்தான். நான் உணர்வு பெற்று எழுந்தேன். பொங்கினேன். பாய்ந்து சென்று பூசாரியின் கரத்தைத் தடுத்து நிறுத்தினேன். என்னை கீழே தள்ளி தனது கரத்தை மேலே உயர்த்தி பிடித்தான் பூசாரி.

"அடே...! இவனுக்கும் பேய் பிடிச்சிருக்கடா. முனி புடிச்சிட்டான். கொண்டுவா. உடுக்கை! மாரிதாயே ஓடிவா."

என் பிஞ்சு உடம்பிலும் சில அடிகள் விழுந்தன. காலை உடம்புவலியோடு மெல்ல எழுந்தேன். அன்னை பக்கத்திலே அமர்ந்து என்னையே பார்த்துக் கொண்டிருந்தாள். அந்த முகத்தை கண்ணீர் மறைத்து சோகம் கப்பியிருந்தது.

எங்கோ பறையொலிகேட்டது.

அதைத் தொடர்ந்து அழுகையும் புலம்பலும் ஒப்பாரியும் எழுந்தது.

"என்னம்மா... அது?" என்றேன் என் நெஞ்சு வேகமாக அடித்துக்கொண்டது. அன்னை கரத்தை சுட்டிபார்வதியக்காவின் வீடு நோக்கி காட்டினாள். எனக்கு புரிந்துவிட்டது.

அவ போயிட்டாப்பா...! பார்வதி போயிட்டாப்பா! பாவிக அடிச்சே கொன்னுட்டானுக. உடம்பெல்லாம் ஒரே இரத்தக் காயம். பிழைப்பாளா...?"

என் இதயத்தை ஈட்டிகள் பிளப்பது போலிருந்தது.. நொந்த உள்ளத்திலேயிருந்து நைந்த சொற்கள் என்னை மீறி வந்தன.

"அக்கா...! காயம் உங்க உடம்பிலே மட்டுமல்ல எங்க சமுதாயத்திலேகூடத்தான். உடல் காயத்தால், உள்ளக் காயத்தால் நீங்க ஒரேயடியாக செத்திட்டீங்க! இந்த மூட சமுதாயம் அணு அணுவாக சாகிறது......! ! !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழம் விழுந்தது

தெளிவத்தை ஜோசப்

வீரன் விக்கித்து நின்ருன்.

தானும் அப்பவே கிழவிக்குப் பெயர் கொடுத்திருக்க வேண்டும். சரி சரி இனி யோசித்துப் பயனில்லை.

தொண்டைக்கும் நெஞ்சுக்குமாக இழுத்துக்கொண்டுக் கிடக்கும் அந்தக் கிழடின் உயிரை இன்னும் இரண்டு நாள் இரண்டே இரண்டு நாள் நிறுத்தி வைத்திருக்க அவனுல் முடியுமென்ருல்.....!

அவனுல் அது முடியாது!

கிழவியின் உயிரை தன்னுல் இழுத்துப் பிடித்து நிறுத்தி வைக்க முடியாது என்பதையும் அவன் உணராமலில்லை.

மனிதனின் பலவீனத்தை, சக்தியின்மையை சந்தர்ப்பங்கள் தான் எத்தனை நாசூக்காக அவனுக்கு உணர்த்துகின்றன — அவ்வப்போது சமயம் வாய்க்கையில் எல்லாம்!

"இந்தாம்மா நிலா, தண்ணிச் சுட்டா அப்பாயிக்கு ஒரு கிளாஸ் ஓர்லிக்ஸ் கலக்கிக் கொடு. நீயும் ஒரு கரண்டி அள்ளிக் கொட்டிக்காதே! இன்னும் நாலைஞ்சு நாளைக்கு வேணும்."

தன்னுடைய ஒன்பது வயது சிறுமியிடம் கூறினுன் வீரன்!

இன்ஞெரு போத்தல் ஓர்லிக்ஸ் வாங்கப் பணம் கிடைக்க இன்னும் நாலைந்து நாளாகுமா அல்லது அவளுடைய ஆயுசே இன்னும் நாலைந்து நாள் என்பதுதான் அவனுடைய கணிப்பா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"டேய் சிராளை இங்கே வா, அந்தப் போத்தலைக் குட்டிச் சாக்கோடு கொண்டு போய் தண்ணி கலக்காமல் நல்லதா ஒன்று நான் கேட்டேன்னு வாங்கிட்டு வா. அப்பாயிக்கு கொடுப்போம்! எனக்குன்னு கேளு, தெரியுதா ஓடு ஓடு"

தாய் மேல் தனக்குள்ள பாசத்தை காட்டிக் கொள்ளும் இறுதிக் கட்டம்.

பாளை சீவும் பண்டா வீட்டை நோக்கி நடந்தான் மகன்!

ஆவி பறக்கும் கிண்ணத்துடன் அப்பாயியை நோக்கி நடந்தாள் மகள்!

ஆபீஸை நோக்கி நடந்தான் வீரன்!

கிழவியின் கருவிழிகள் கண்களின் ஒரு மூலைக்கும் மறு மூலைக்குமாக ஆட்டம் காட்டிக்கொண்டிருந்தன. கிழவிக்குத் தெரியும் மகனின் பற்று பாசம் எல்லாம். அவனுடைய பதைப்பு, துடிப்பு வருத்தம் யாவற்றிற்கும் அடித்தளம் எது என்பதும் அவள் அறியாததல்ல!

உதட்டைப் பிளந்து கொண்டு கரண்டிக் குழியால் உள்ளே ஊற்றப்படுவது கூட உள்ளிறங்காமல் கடைவாயில் வடிந்து விடும் இந்த இறுதி வேளையில் 'ஓர்விக்ஸ்! என்றும், ஓவல் என்றும், பிஸ்கோத்தென்றும், ஆரெஞ்சென்றும் அவளைச் சுற்றி வட்டமாக மாலை கோர்த்து கிடக்கின்றனவே.... பிரயோஜனம்?

செத்த பின் சீத்தை போடும் பித்துக்குளித்தனம்தானே அத்தனையும் தின்று தீர்க்க கிழவிக்கும் ஆசைதான். முடிய வில்லையே! ஊறும் உமிழ்நீரைக் கூட உள் விழுங்க திராணியில்லை. வாயால் தின்று வயிற்றை நிரப்ப இயலாவிட்டாலும் கண்களால் தின்று மனதை நிரப்பிக் கொண்டாள்.

இப்போதாவது கண்படும் இடத்தில் அவைகளை வைத்திருக்கிறானே மகன்!

சாகப் போகும் சந்தோஷத்தில் கிழவி சிரித்துக் கொண்டாள். உதடு பிரியாவிட்டாலும் உள்மனதில் ஒரு விரிசல். இரவின் கருமையிலே நெளிந்தோடும் மின்னற் கொடி போல!

கூழாங்கல் குவியலாய் பட்டர் பிஸ்கோத்துக்கள்; ஒட்டுத் துண்டங்களாய் 'ரோஸ்டு ரஸ்க்'. இன்னும் கிழவி பார்த்தே கேட்டேயிராத என்னென்னவெல்லாமோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தனை மேலும் ஒரு கணம் பார்வையை மேயவிட்ட கிழவி கண்களை இறுக மூடிக்கொள்கின்றாள்.

அன்றெல்லாம் தன்னால் தின்று தீர்க்க முடிந்த அந்தக் காலத்தில் ஒரு அரை வயிற்றுக் கஞ்சியாவது ஊற்றினார்களா?

கணவன் கண்ணை மூடிய காலம் தொட்டு இன்று வரை அதே இடம்தான் அவளுக்கு.

அப்பனுக்கு செய்ய வேண்டியது எல்லாம் செய்து முடித்து தாயையும் தன்னுடன் கூட்டி வந்து விட்டான் வீரன்!

பத்து மாதம் சுமந்து பெற்ற மகன்தான் என்றாலும் அவனுக்கென்றொரு மனைவி, ஆறேழு பிள்ளை குட்டி என்று ஆகிவிட்ட பிறகு அவனிடமிருந்து பெற்றவள் பெரிதாக எதை எதிர்பார்க்க முடியும்?

ஏதோ காமா சோமா வென்று காலம் தள்ளி நெஞ்சில் விழுந்த அடி படிப்படியாக மாற மீண்டும் தோட்டத்தில் ஒருத்தியாகி காலையில் மலைக்கும் மாலையில் லயத்திற்கும் என்று சுற்றி வந்தாள் செக்கில் கட்டிய மாடாய்.

வேலைக்குப் போகாமல் வீட்டிலிருக்க வேண்டும் என்ற எண்ணம் கிழவிக்கு எப்போதுமே எழுந்ததில்லை. அவளைப் பொறுத்த வரை வீடு, மலை, ஓய்வு எல்லாம் ஒன்றுதான்! அவளாலேயே நடக்க முடியாத பட்சத்தில் என்றாவது ஒரு நாள் இருந்து விட்டாளென்றால் அன்றைக்கு வீட்டில் அமளி தான்!

'கிழவி இன்னைக்கு வேலைக்குப் போகலியா?' என்பதில் தொடங்கி எனக்கிருப்பது போதாதென்று இது வேறு வந்த மனுஷன் கழுத்தை அறுக்கிறது என்று தொடர்ந்து கிழடை கொளுத்திய அன்று தான் தனக்கு நிம்மதி என்று முடிப்பான் வீரன்!

அத்தனையும் தனக்கே உரித்தான தடிக் குரலில், தனக்கே உரித்தான தனித்துவ பாஷையில்!

அப்போதெல்லாம் கிழவி 'ஏம்பா அப்படிச் சொல்றே இந்த மாசத்திலேயே இன்னைக்கு மட்டும் தானே வீட்டுல நின்னேன்' என்று நினைத்துக் கொள்வாள்! ஆனால் வாய் விட்டுச் சொல்ல மாட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியாயமானவைகள் தான் என்றாலும் நினைப்பதை எல்லாம் வாய்விட்டுச் சொல்லிவிட முடியுமா என்ன? அதுவும் இளைத்தவர்கள் வலுத்தவர்களிடம்.

கிழவி மௌனமாக கண்ணீர் வடிப்பாள். அடுத்த நாள் மழையோ பனியோ நடந்து விடுவாள் மலையை நோக்கி தலையில் கூடையுடன்.

மகன் வீட்டு அடுப்பில் விறகு எரிகிறதா இல்லையா என்பது கூடக் கிழவிக்குத் தெரியாது. அவள் ஆட்சிக்குட்பட்டதெல்லாம் இஸ்தோப்பின் இடது மூலை இருட்டு. அவளது சாம்ராஜ்பமே அதுதான். அதட்டுவதற்கு ஒரு நாய். அணைத்துக்கொள்ளவும் அதுதான்!

சுருட்டிக் கொள்ள அந்த இருண்ட மூலை. விரித்துக் கொள்ள ஒரு சாக்கு, போர்த்திக் கொள்ள ஒரு சேலை, தலைக்கு அணைவு மூலையில் புதைக்கப்பட்டுள்ள திருகை!

இரவில் குளிர்ந்து விட்ட கிழவியின் உடலுக்குச் சூடேற்றுவது 'நச் நச்' என்று அவள் மெல்லும் வெற்றிலை. மனதிற்குக் கூட அதுதான்! காலையில் வீடு கூட்டும் போது அந்தப் பெண் நிலா வெளியே கொண்டுபோய் போட்ட கிழவியின் எச்சில் சுண்டை எடுத்து வர ஒரு ஆயிரம் சத்தம் போட்டு பார்த்து விட்டு 'நாமலே போய் எடுத்தாந்துடுவோம்' என்று எழுந்து தட்டு தடுமாறி நடந்து சென்று கோழிக் கூடையில் மோத, அது 'கறே புறே' என்று கத்த. மகன் உள்ளேயிருந்து கத்துவான்; 'இந்தாம்மா நெலா அந்த எச்சில் கொத்தை போய் எடுத்துக் கொடு. அந்தச் சனியன் விழுந்து சாகுது, வாயைத் திறந்து கேட்டா என்னவாம்? அவ்வளவு ராங்கி' என்று.

கூடக் கொழுந்து எடுக்கும் வலுவோ, ஓடி ஆடி வேலை செய்யும் உடலுரமோ கிழவியிடம் கிடையாது. எதிர்பார்ப்பதும் கூடாது. எதிர்பார்க்கவும் முடியாது. அந்த வயதில் அவள் வேலை செய்வதே அதிசயம்.

சம்பளம் முப்பதோ, நாற்பதோ எடுத்துவந்து மகனிடம் கொடுத்துவிடுவாள் சதம் குறையாமல்.

வருசத்திற்கு ஒரு சேலை என்றாலும் வாங்கிக்கொடுப்பது அவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரை வயிற்றுக் கஞ்சி என்றாலும் ஆக்கிக் கொடுப்பது அவன் மனைவி.

சுருட்டிக் கொள்வது இஸ்தோப்பு மூலை என்றாலும் இடம் கொடுப்பது அவன் வீடு என்ற நன்றியுணர்வு.

துரை கொடுக்கும் சில்லறையில் சம்பளத்து வாசல் வியாபாரியிடம் ஒரு இருபத்தைந்து சதத்திற்கு பிஸ்கோத்து வாங்குவாள். சம்பளத்து வாசலுக்கும் லயத்திற்கும் உள்ள இடைத்தூரத்தில் அவள் கடித்துக் குதப்பிய ஒன்று போக மீதி இருபத்திநாலையும் கடதாசியில் சுற்றியசடப்பு அவிழாமல் அடிமடியிலிருந்து எடுத்து பேத்தியிடம் கொடுத்துவிட்டு, மீதி சில்லறைகளை நோட்டுகளுடன் சுற்றி மகனிடம் நீட்டிவிடுவாள்.

கிழவியிடம் சம்பளத்தைப் பெறும் ஒவ்வொரு மாதமும் 'இந்த மாதம் கிழவிக்கு ஒரு சீலை வாங்கிக் கொடுத்து விட வேண்டும்' என்றுதான் வீரன் நினைப்பான். ஆனால் குடும்பம் என்பதே ஒரு பெரிய கடல்—கூலிக்காரனின் குடும்பமும் கடல்தான்; அதில் எத்தனையோ அலைகள்! ஒன்றில்லாவிட்டால் ஒன்று வந்துகொண்டே இருக்கும். 'பாவம் கிழவி! சரி அடுத்த மாசம் பார்ப்போம்' என்று சமாதானம் அடைந்து அதுவும் தொடர்ந்துகொண்டே போய் தீபாவளியோ, பொங்கலோ பல்லைக் கடித்துக்கொண்டு, கிழவிக்கு ஒரு சீலை வாங்கிக் கொடுத்துவிடுவான்.

அதுவும் 'இது பெருநாள் மாதமாயிற்றே' என்ற கட்டாயத்தில் 'போன மாதமே வாங்கியிருக்கலாம்' என்ற முனகலுடன்!

சம்பளம் போட்ட மறுநாள் துரையில்லாத நேரம்பார்த்து மெதுவாக ஆபீசை அடைவான் வீரன். தலையைச் சொறிந்த வண்ணம் 'எங்க கிழவிக்கு எவ்வளவுங்க இருந்திச்சு' என்று கேட்டுக்கொள்வான். ஒன்றோ, அரையோ கிழவி பதுக்கிக் கொண்டாளா என்று பார்க்கத்தான்!

கிழவி சரியாகத்தான் கொடுத்திருப்பாள், ரொட்டி வாங்கியது போக!

அந்தி சாயுமுன்னமே அடிவானம் இருண்டுவிட்டது; கொழுந்து நிறுத்துமுடிந்து அமைதியான பெறட்டுக்களத்தின் அகன்ற பரப்பில், அங்கொன்று இங்கொன்றாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைந்து கிடக்கும் கொழுந்திலைத் துகள்கள்போல நீலம் பூத்துக் கிடந்த வானத்தில் நட்சத்திரங்கள் ஒன்றிரண்டு மின்னின.

மலைநாட்டிற்கே உரித்தான குளிரில், பல்லோடு பல்லடிபடும் அந்த அந்திநேரப் பனியில் குளிரோ, நடுக்கமோ இல்லாது அதோ போகிறாள் கிழவி, ஆற்றுநீரில் குளித்துவிட்டு!

மெதுவாக ஆற்றுப்படி இறங்கி, சில்லிட்டோடும் அச் சிற்றோடையில் குளித்து முடித்து ஈரச் சீலையை சுற்றிக்கொண்டு எண்ணி அடிவைத்து ஏறிவர அவளுக்கு இத்தனை நேரம் பிடித்திருக்கிறது.

பச்சைத் தண்ணீர் குளிரும் என்றால், அவளுக்கு யார் சுடுதண்ணீர் வைத்துக் கொடுக்கப்போகிறார்கள்?

நனைத்து விடப்பட்ட அடைக்கோழியாய் உள்ளெலும்பு வெளியே தெரிய, முழங்காலுடன் முழங்கால் மோத; முழுப் பாதமும் தரையில் பட அழுத்தி ஊன்றி அவள் நடக்கும்விதத்தைப் பார்த்தால், இப்போதோ இன்னும் கொஞ்ச நேரத்திலேயோ என்றுதான் படும். ஆனால் அடுத்தநாள் காலையில் மலையில் நிற்பாள்!

அன்று கழுத்திருந்த இடத்தில் இன்று தலையிருக்கிறது. வளர்ச்சிக்குப்பின் தேய்வுதானே!

கிழவிக்கு சின்ன துரை வேலைநிறுத்திவிட்டார். காரணம், பின்னிக் கிடக்கும் தேயிலையில் விரைவாக நீந்திவர கிழவியால் முடியாது. மலைகளில் ஏறவோ, பள்ளங்களில் இறங்கவோ முடியாது. ஊடே ஊடேயுள்ள கான்களைத் தாண்ட முடியாது.

வேலைசெய்யும் இடத்தில் எங்காவது விழுந்து கிழவி செத்துத் தொலைந்துவிட்டால்....!

பெரிய துரை கைகட்டி நிற்கவேண்டும். வேலைசெய்ய முடியாத கிழவிக்கு சம்பளம் அழுவது போதாதென்று, வீண் தொல்லைகளை ஏன் விலைகொடுத்து வாங்கவேண்டும்? அப்படி ஏதாவது நடந்துவிட்டால் பெரியவரிடம் இவர் தப்பிக்கமுடியுமா? ஆகவே கிழவிக்கு வேலை கொடுக்க மறுத்துவிட்டார்.

அடுத்தநாள் வீரன் ஆபீசை இரண்டாக மட்டுமல்ல மூன்றாகவும் ஆக்கிவிட்டான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கிழவிக்கு யார் சோறு போடுறது?' அவன் துரையிடம் கேட்ட முதல் கேள்வி. இப்ப கிழவிக்கு வேலைசெய்ய முடியாது தான். அதுக்காக வேலை இல்லேன்னுடுறதா? இத்தினி வருசமா எந்தத் தோட்டத்துக்காகப் பாடுபட்டிச்சி.... இந்தத் தோட்டத்துக்கு ஒழைச்ச கிழவிதானே.. நான் என்ன கண்டாக்கா? இல்லை கணக்கப்பிள்ளையா வீட்டுல வைத்து சோறு கொடுக்க! அதெல்லாம் சரிவராது துரைகளே; வேலை கொடுங்க இல்லேன்னு சுட்டுத் தள்ளிப்புடுங்க..!

மாதுளை மொட்டாய்ச் சிவந்து கிடக்கும் அவன் கண்களையும், ஆளையும் பார்க்கையில்..'இவனிடம் பேசிப் பயனில்லை' என்றுணர்ந்த துரை 'நீ போ' என்று அவனை அனுப்பிவிட்டு கண்டக்டரிடம் கூறினார், மேடு பள்ளமில்லாத ரோட்டோர மலைகளாகப் பார்த்து கிழவிக்குப் போடும்படி.

இதுபோன்ற சின்ன விசயங்களையும் பெரியவரிடம் அனுப்பி, தன்னுடைய நிர்வாகத் திறமையை அவர் குறைத்து மதிப்பிட சிறியவர் விரும்பவில்லை. தனது முன்னேற்றத்தை அது பாதிக்குமென்ற நோக்கத்தில் தாமே விசயங்களைச் சமாளிக்கும் எண்ணமே தவிர, கிழவிமேலுள்ள பச்சாத்தாபமோ பரிவோ அல்ல அது.

தோட்டத் தொழிலாளர்களுக்கு பென்ஷன், மாதத்திற்கு பதினைந்து அல்லது இருபது ரூபாய் என்பதும், அரிசிக்குப்போக மிகுதி எவ்வளவு இருக்கும் என்பதும் வீரனுக்குத் தெரியும். ஆகவேதான் 'சுட்டுத் தள்ளுங்கள்' என்றவன், பென்ஷன் கொடுங்கள் என்று கேட்கவில்லை. பலவந்தமாக ஒரு தொழிலாளிக்கு பென்ஷன் கொடுக்கத் தோட்டத்துக்கு இயலாது; இயலாது என்பதல்ல—முடியாது.

தனி மலை கொடுத்து கிழவி வேலைசெய்யத் தொடங்கிய காலகட்டத்தில்தான் ஒரு புது விதி வந்தது. இனிமேல் யாருக்கும் மாதப் பென்ஷன் கிடையாது. 'ஓய்வுச் சம்பளம்' என்று மொத்தமாக அறுநூறோ எழுநூறோ கொடுக்கப்படும். வேலை செய்துள்ள விகிதப்படி என்பதுதான் அப் புதுச் சட்டம்.

ஓய்வுக்குப் பெயர் கொடுத்தவர்கள் யாரும் வேலைக்குப் போக இயலாது என்றவுடன் வீரன் தயங்கினான் இது ஏதோ சூழ்ச்சி என்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர் கொடுத்த விபரம் எல்லாம் கம்பெனிக்குப் போய் 'சரி' என்று வர குறைந்தது நாலு மாதமாகலாம். பெயர் கொடுத்து விட்டு வேலையில்லாமல், சம்பளமில்லாது திரிந்தவர்களிடம் வீரன் சொன்னான். "பாத்தியா ஏயாத்திட்புட்டானுங்க, நம்மகிட்ட நடக்காது" என்று பெருமையாக.

ஆனால், பெயர் கொடுத்த நாலாவது மாதத்திலேயே 'இன்டோர் லயத்து இருசனுக்கு, எண்ணூறு ரூபாய் கிடைத்தவுடன் வீரன் விக்கித்துத்தான் நின்றுவிட்டான்.

கவ்வாத்து மலையாய்க்காய்ந்துகிடந்த இருசனுடைய நடையிலேகூட ஒரு மிடுக்கு.

எண்ணூறு ரூபாய், ஆயிரத்துக்குக் கொஞ்சந்தான் குறைவு. இருகைகள் கொள்ளாத நோட்டுக் கட்டுகள்.

'சம்பளம் போடையில் துரை மேசையில் அடுக்கி வைத்திருப்பாரே அந்த மாதிரி' என்று எண்ணிய வீரன் சரி, சரி, இனி யோசித்து என்ன பயன்! என்று அன்றே கிழவியை இழுத்துக் கொண்டு ஓடினான் ஆபிசுக்கு.

'எந்த வருடம் பேர் பதிந்தாய்?'

'எத்தனை தடவை ஊருக்குப் போயிருக்கிறாய்..?'

'வேறு எந்தெந்தத் தோட்டத்தில் வேலை செய்தாய்..?'

தோட்டச் சம்பளத்தைத் தவிர வேறு வருமானம் உண்டா?..! என்பது போன்ற கேள்விகளுக்குப் பதில் கூறி விட்டு, 'எப்பங்க பென்ஷன் கிடைக்கும்?' என்று கேட்டு வைத்தான்.

'பென்ஷன் இல்லே வீரா, ஓய்வு உபகாரச் சம்பளம்!' திருத்தினார் துரை.

எந்த மண்ணோ! காசு எப்ப கிடைக்கும் என்பதுதான் அவனுடைய அவா.

'போன தடவையே எழுதியிருந்தீன்னா இந்த மாசம் கெடைக்கும். இப்ப இன்னும் ஆறு மாசமாகும்' என்று ஐயா கூறியதும் 'அதுவரை' என்ற கேள்வியே பேயாய், பெரிதாய் எழுந்து நின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறு மாதமென்றாலும் சுமை சுமைதானே.

'கிழவி பேருக்கு ரெண்டேக்கர் கொந்தரப்புக் கொடுங்க'

'ஏலாது! ஓய்வு பெறப் பேரெழுதிய யாருக்கும் செக்ஷே வில் பேர் இருக்கக் கூடாது..'

'சரி.. என் பேருக்குக் கொடுங்க' என்று அப்போதே கிழவிக்கு ஒரு வழி பார்த்துக்கொண்டுதான் வந்தான்.

அடுத்த நாளிலிருந்து வெய்யிலோ மழையோ கிழவி புல் வெட்ட வேண்டியது. சம்பளம் வீரன் பெயரில்.

வீரன் ஆபீசுக்கு போய் 'இன்னும் பதில் வரல்லையா' என்று ஆர்ப்பாட்டம் செய்யாத நாள் அந்த ஞாயிறு ஒன்றுதான்.

அப்பேர்ப்பட்ட தன் மகன் இன்று துடிக்கிறான்; துவள்கிறான் என்றால்..!

ஓர்லிக்சா, ஓவலா என்கின்றான் என்றால்..!

கிழவிக்குத் தெரியாதா?

அகிலத்தையே ஆட்டி வைக்கும் மூவாசைகளுள் கடைசி ஆசைதான் தன் மகனையும் துடிக்க வைக்கிறதென்று. மகன் இப்போதும் எங்கே போகின்றான் என்பது கிழவிக்குத் தெரியும்.

கட்டை விரல் நுனியில் ஏதோ சில்லிட்டது. காலை ஒரு முறை மடக்கி நீட்டினாள். நீட்டிய காலை மறுபடியும் மடக்கினாள். நினைவில் கால் மடங்கியதேயொழிய செயல்படவில்லை. 'ஒரு நிகாத் தெரியாத நிபாத நிலை.' பரக்கப் பரக்க ஒருதடவை விழித்துப் பார்த்தாள். சுற்றியுள்ள எதுவுமே பார்வையில் பிடிபடாமல் நழுவிச் சென்றுகொண்டிருந்தன. மேலிமையில் நூல் சேர்த்து கீழிமையுடன் இழுத்து ஒட்டவைப்பது போலிருந்தது. கிழவி கண்களை மூடிக்கொண்டாள்.

''எல்லாம் பாசாகி வந்துவிட்டது. இன்னும் இரண்டு நாளில் பணம் கிழவியின் கைக்கு வந்துவிடும்.''

நேற்றுக் கிளாக்கரய்யா சொன்ன செய்தியின் இனிமையை நுகர்ந்தவாறு ஆபீசை நோக்கி விரைவாக நடைபோட்டான் வீரன். நிலைமை எப்படியிருக்கிறது என்பதை மேலும் தெளிவாக அறிந்து கொள்ளும் நோக்கம்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த பண விஷயமே இப்படித்தான்: நம்ப கையில் வந்து விழும்வரை எதையுமே நம்ப இயலாது.

தலையிலே கிடந்த கொழுந்து நிறைந்த கூடையைத் தரையில் இறக்கி வைத்தப் பெண் போல் ஒரு திருப்திப் பெருமூச்சு விட்டான் வீரன். 'நாளைக்குக் கிழவியைக் கூட்டி வா. நான் சொல்லுற நாலைந்து இடத்துல கையெழுத்துப் போட்டுட்டு காசை வாங்கிட்டுப் போகலாம்!' என்ற செய்தியைக் கேட்டதும்.

கூரை இரும்பின் முடுக்கில் குளவி கூடு கட்டிக்கொண்டிருந்தது. தற்செயலாக மோட்டு வளையைப் பார்த்த வீரன் குளவி கூடு கட்டுவதைக்கண்டான். 'மனைவி ஒரு மாதிரி இருக்காளோ' என்று மனதில் எழுந்த சோம்பல் நினைவை கலைத்து விரட்டிக் கொண்டு வந்தது 'மாமோவ்' என்ற அலறல்.

வீரன் வெளியே வந்தான். லயத்துக் கோடியில் நின்று கொண்டு கத்துபவன் ஸ்டோர் லயத்து இருசனின் பேரன் 'கங்காணியூட்டுக் கறுப்பனு'க்குப் பயந்துதான் பயல் அங்கேயே நின்னுவிட்டான்' என்று யூகித்த வீரன், 'அது கடிக்காதுடா' என்றவாறு பையனிடம் வந்தான்.

'அப்பா உங்களைக் கையோட கூட்டியாரச் சொல்லிச்சு' என்றபடி சிறுவன் முன் நடக்க, வீரன் பின் நடந்தான்.

இருசக் கிழவன் எண்ணூறு ரூபாவை வாங்கி மகனிடம் கொடுத்து இன்னும் முந்நூறு நாள் ஆகவில்லை. கிழவனுக்கு 'அந்தா இந்தா' என்றிருக்கிறது.

நாளைக்கு நாலுதரம் கிழவனைக் கழுவி, துணி மாற்றி, இடம் மாற்றி, கிடந்த இடத்தைக் கூட்டி மெழுகிப் போடுவதென்றால் யார்தான் முகம் சுழிக்க மாட்டார்கள். 'செத்துத் தொலையுதில்லையே!' என்று கருவிக்கொட்ட மாட்டார்கள்?

ஊறி நொதித்த இடத்தில் கிடந்தான் கிழவன். எத்தனை தடவைதான் இடம் மாற்றுவது.

'கொர், முர்ர்' என்று உள்ளுக்கும் வெளிக்குமாக மூச்சுத் திணறியது.

'மூணு நாளா இதே கதிதான்! இப்போ முடிஞ்சுடும் போலிருக்கே!' என்று கேட்ட வீரனுக்கு இருசனின் மகன் கொடுத்த பதில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'விளக்கெண்ணெ இருக்கா' என்று கேட்ட வீரன் இடது கைக்குழியில் எண்ணெயை வாங்கிக்கொண்டு கிழவனிடம் நெருங்கி உட்கார்ந்து கண்ணைக் காட்டினன். இருசனின் மகன் மற்றவர்களைக் கூட்டிக்கொண்டு வெளியே வந்துவிட்டான்.

வலது கைவிரலால் எண்ணெயைத் தொட்டுக் கிழவனின் முகத்தில் தடவினன் வீரன்.

புருவ மேட்டில் தடவி நாசித் தண்டை நெருடியவாறு விரல்களைக் கீழிறக்கி நாசித் துவாரத்திடம் வந்ததும் ஒரு முறை தொட்டுக்கொண்டான். கொழ கொழத்த விரலிடுக்குகளில் இறுகப் பிடிபட்டிருந்தது நாசித் துவாரம்.

கிழவனின் மூக்குப் புடைத்து விம்மியது. உடல் இலேசாக திமிறியது. மூச்சுத் திணறியது.

வேட்டைக்காரனின் வெளிச்சத்தையே உற்றுப் பார்க்கும் காட்டு முயற்கண்கள் போலக் கிழவனின் கண்கள் வீரனுடைய கண்களை நேர்பாய்ச்சி ஒரு கணம் பார்த்தன. மறு கணம் மேல் இமைக்குள் சேர்ந்தன; தலை கவிழ்ந்துவிட்டது.

* * *

வீரன் தலையைப் பலமாக உதறிக்கொண்டு கால்களை எட்டிப் போட்டான்.

இந்த நேரத்தில் தனக்கேன் அந்தப் பழைய நினைவு வர வேண்டும். மீண்டும் தலையை உதறிக்கொண்டான்.

ஒரு காரைப் பிடிச்சாவது கிழவியைத் தூக்கிப் போட்டுக் கிட்டுப் போய்க் கையெழுத்துப் போட்டுட்டா நிம்மதியா மூச்சு விடலாம்'.

'இரண்டு நாள் கழித்துப் போகிற உயிரை அப்போதே நிறுத்திக் காட்டினயே, இந்தக் கிழவியின் உயிரை இரண்டு நாள் நிறுத்தி வைக்க உன்னுல் முடியுமா?' என்று மனம் கேட்கிறதோ?

உள் மனதின் பயங்கர ஊளை வீரனின் நடையை ஓட்டமாக்கியது.

அதோ பலாமரத்து சந்தில் தெரிகிறது அவனுடைய லயம். அதென்ன அங்கே கூட்டம்!

'அப்பாயி செத்துப் போச்சப்பா' என்று அலறியபடி ஓடி வந்தாள் மகள்.

ஓட்டம் நடையாகி, நடையும் மெலிந்து, உலகமே சுற்றியது அவனுக்கு. பழம் விழுந்துவிட்டது.

வீரன் விக்கித்து நின்முன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடிவு

**எம். வாமதேவன்**

அப்படிக் கூறியதைப் பெரியசாமி எதிர்பார்க்க வில்லை. அதைக் கேட்க அவனது உள்ளம் குமுறியது. தான் உழைத்த உழைப்பின் ஊதியத்தைக் கொடுக்க மறுத்திருந் தாலாவது உழைக்கின்ற உடம்பு, சம்பாதித்துக் கொள்ள லாம் என்று பேசாமலிருந்திருப்பான். ஆனால் இதைக் கேட்ட வுடன் அவனது உடலெல்லாம் ஒருவித உணர்வு, தடுமாற்றம்.

'ஓம் மக சிரிசேனுவோட சேர்மானமாக இருக்கிறு' கூறிய வர்கள் பிறர் வாழ, இன்பங்காண பொறுக்காத மனங் கொண்டவர்களல்ல. இவனதுவாழ் நாளெல்லாம் நன்மையி லும் தீமையிலும் உதவி செய்தவர்கள், செய்கிறவர்கள். பெரியசாமியின் மதிப்பிற்குப் பாத்திரமானவர்கள்.

மணி பத்திருக்கும் என்பதை உணர்த்திக்கொண்டிருந் தது-காய்ந்து கொண்டிருந்த வெய்யில் உடலின் வருத்தத் தைப் பாராது கருமமே கண்ணாக ஈடுபட்டிருந்தனர் தொழிலா ளர்கள். கையிலே பளிச்சென மின்னிடும் கத்தி. பன்னிரெண் டிற்கு முன்பதாக நிரையை வெட்டிவிட வேண்டும் என்ற முனைப்பின் உந்துதல் அவர்கள் முகத்திலே வழிந்து கொண் டிருந்த வேர்வையை மிஞ்சிப் பிரதிபலித்துக் கொண்டிருந் தது. பெரியசாமி மகளைப் பற்றிய சேதியைக் கேட்டதும் அதிர்ந்து விட்டான்.

வெட்கம் அவனைப் பிடுங்கித் தின்றது. வேதனை அவனது உள்ளத்தைக் குடைந்தது. இதே செய்தியை வேறு யாராவது அவனது காதுகளில் போட்டிருந்தால், துடிப்பில், வேகத் தில், வெட்டியே போட்டிருப்பான். ஆனால் இப்பொழுது..? மகளைப் பற்றிய இந்தப் பேச்சை மறுத்துப் பேசத் துடித்தான், எண்ணினான், ஆனால் முடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியசாமி, ராணித்தோட்டத்து மக்களின் ஏகதலைவன். நடந்த தோட்டக் கமிட்டித் தேர்தலில் அவனது நல்ல நடத்தைக்காகவும், உழைப்பிற்காகவும், சேவைக்காவும், படிப்பிற்காகவும், குடும்பத்தின் பழம் பெருமைக்காகவும் கேளாமலே அவனது தலையிலே சுமத்தியிருந்தார்கள் தோட்டத்துத் தலைவர் பொறுப்பை. அதை ஏற்று முழுசாக மூன்று மாதங்கள் ஆகவில்லை. அதற்குள் அவனது பேருக்கே—குடும்பத்துக்கே களங்கம் தருகின்ற வகையிலே சேதியொன்றை செவிமடுத்திருக்கிறன். எப்படிப் பொறுத்திடுவான் பழியற வாழ்ந்த பெருமைமிக்க அவன்.

'தனது மகள் இன்னொருவனை காதலிக்கிறுள்' என்று அறிந்திருந்தாலாவது இவ்வளவு வேதனைப்பட்டிருக்க மாட்டான். அந்தக் காதலை மகிழ்ச்சி ஆரவாரத்துடன் ஏற்றிருக்கும் பண்பட்ட அவன் உள்ளம்.

ஆனல் அவள், சனசம்மா சிரிசேனவை விரும்புகிறுள் என்பதைத்தான் அவனுல் கேட்கச் சகிக்கவில்லை. தற்கொலை செய்து கொள்ளலாமா? என்ற இறுதி நிலைவரை சிந்தித்து விட்டான். தனது உள்ள விருப்பத்திற்கு அந்தச் 'சேர்மானம்' முரணக இருந்தது. தான் இவ்வளவு நாளாகப் பேசியது, தன் இலட்சியம் எல்லாம் என்ன? அவனது உள்ளத்தில் அவைகள் இப்போது நிழலாட்டம் போட்டன.

தமிழ்! தமிழ் படிக்கின்ற காலத்தில் அவனது உள்ளத்தில் தமிழுணர்ச்சி பொங்கி வழிந்தோடும். பாரதியாரின் பாடல்களைத்தான் அவனது வாய் முணுமுணுத்துக் கொண்டிருக்கும். தனியே இருக்கின்ற போதெல்லாம் தமிழ்க் கவிஞர்களின் தெள்ளு தமிழ்ப் பாடல்கள்தான் அவனது உள்ளத்தை நிரப்பிக்கொண்டிருக்கும். காண்கின்ற அத்தனை பேரிடமும் தமிழ் பற்றிய பேச்சுதான். படிப்பு நின்றது. தொழிலாளியானன். என்றுலும் அவனது உணர்வுகள் மடிந்து விடவில்லை. அவைகள் முன்னிலும் பார்க்கத் திடமாக உருப்பெற்றன. தான் கற்ற பாடல்களையெல்லாம் தன் நண்பர்களுக்குப் படித்துக் காட்டுவான். திருமணம், திருவிழா இப்படிப்பட்ட விசேஷ தினங்களில் நிச்சயம் அவனது உணர்ச்சியின் உந்துதல் பாடல்களாக ஒலிப்பதைக் கேட்க முடியும். மணமும் ஆனது. குழந்தையும் ஆனது. ஒரே குழந்தை, பெண் குழந்தை. அவள் ஐந்தாம் வகுப்புப் படித்துக் கொண்டிருக்கும் போதே திருக்குறளில் பாரதி பாடலில் சில மனப்பாடம். அனைத்தும் பெரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாமியின் தமிழுணர்வின் உந்துதலின் விளைவுதான். மொட்டாக இருந்த அவள் மலரான அன்றே அவளது படிப்பிற்கு முற்றுப் புள்ளி வைத்தாயிற்று. அதற்குமேல் படித்தால்.. அதற்கு நமது சமுதாயத்தில் இடமில்லையே என்ன செய்ய. அவளும் கூடையைத் தோளில் போட்டு ஆண்டுகள் இரண்டாகி விட்டன. இப்பொழுது அவள்! சினிமா நட்சத்திரங்களாக மாறுவதற்கு எவ்வித முயற்சியும் எடுத்துக்கொள்ளாவிட்டாலும் அவள் ஒரு நட்சத்திரம் தான். மின்னும் நட்சத்திரம். அந்தத் தோட்டத்து அத்தனை அழகிகளிலும் அவளுக்கு ஒரு தனி மதிப்பு, மவுசு, அவள் சிரிசேனுவைக் காதலிக்கிருள் என்றதும் பெரியசாமி தடுமாறி நிற்கிருன். சிரிசேனு ஒரு.. அவனது தமிழுணர்ச்சி, இவ்வளவு காலமும் போற்றி வளர்த்த பண்பாடு அவனை வதைத்தது. அவன் ஒரு முடிவிற்கும் வரமுடியாமல் தவித்து நின்றுன் சிரிசேனு ஒரு.. ஒரு.. அவனை மருமகனுக ஏற்றுக் கொள்ளாதே! நெஞ்சின் அடிதளத்திலே ஒலித்த ஒலி அவனுக்கு கேட்காமலில்லை. எப்பொழுது தனது நிரையை முடித்தானே? சங்கு எப்போது ஊதியதோ அவனுக்கு தெரியாது. வீட்டிற்கு வந்துங்கூட அவனது உள்ளம் ஒரு முடிவையடையவில்லை. அவனது நினைவில் சிரிசேனுவும் கனகம்மாவும் மாறி, மாறி வந்து கொண்டிருந்தனர். காதலுக்காகத் தன் மகள் கண்ணீர் விடுவதும், கெஞ்சுவதும், மன்றுடுவதும் நினைவுத் திரையிலே திரைப்படம் காட்டிக் கொண்டிருந்தது.

சிறிசேனு அந்தத் தோட்டத்திலே பிறந்தவன், வளர்ந்தவன். பெரியசாமி வசித்தலயத்து தொங்கக் காம்பராதான் சிரிசேனுவின் வீடு, பலாங்கொடை நாட்டிலேயிருந்து தோட்டத்து மனைவியுடன் வந்த சந்திரசிரி சிரிசேனுவை இந்த உலகிற்கு அளித்து விட்டு தன்னை உலகப் பிரஜை என்ற அந்தஸ்திலிருந்தும் நீக்கிக் கொண்டான். அதன் பிறகு நாதியற்ற அந்தக் குடும்பம் நாடிருந்தும் அற்றவராக வாழுகின்ற ஆயிரமாயிரம் குடும்பத்துள் ஒன்றுகி விட்டது. அதன் பிறகு அவர்களுக்கு நாடாவது, இனமாவது அனைத்தும் ராணித் தோட்டமே. வீட்டிலே தாய் மொழியைப் பேசிக் கொண்டாலும் வெளியே பேசுவதெல்லாம் தமிழ் மொழிதான் உண்ணுவது முதல் உடுப்பதில்: வாழ்வதில், வணங்குவதில் தமிழர்களாகவே காட்சியளித்தனா. சிரிசேனு பண்டாரவளையில் உள்ள பாடசாலையொன்றில் படித்தது அவனது தாய்மொழி என்றுலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவாடிய மொழி தமிழ்தான் எப்படியோ தமிழ் கற்று, படிக்கின்ற, புத்தகங்கள், பார்க்கின்ற படங்கள் எல்லாமே தமிழாக இருக்கக் கவனித்துக் கொண்டான்.

இத்தனையும் பெரியசாமியின் நினைவில் அலைமோதியது எல்லோருக்கும் அப்பழுக்கற்ற, அழகிய இளைஞனாக, நல்லவனாக சிறிசேனா இருந்தாலும் அவனோடு சம்பந்தம் வைத்துக் கொள்வதா என்ற வைராக்கியம் அவனது நினைவினை குழம்பிக் கொண்டிருந்தது' இரண்டில் ஒன்று முடிவு காணாதவரையில் இது பற்றி சிறிசேனாவிடமோ கனகம்மாவிடமோ விசாரிப்பதில்லை என்று அவனது உள்ளம் இறுதித் தீர்மானம் நிறைவேற்றியது.

காலமென்னும் அரக்கி நேரத்தை விழுங்கிக்கொண்டிருந்தாள். அதற்குள் எத்தனையோ நிகழ்ச்சிகள் பிரச்சினைகள்? தோட்டத்துக் தலைவரல்லவா? அதிலேயே மூழ்கி விட்டான், இருந்தும் தனது மகளின் காதல் விவகாரங்களை கேள்விப்படாமல் இல்லை. அவைகள் நாளொரு வண்ணமும், பொழுதொரு மேனியுமாக வளர்ந்து இவனுக்கு எட்டிக்கொண்டிருந்தன. சும்மா இருக்கிற நம் மக்களுக்கு ஒரு விஷயம் கிடைத்து விட்டால் விடுவார்களா என்ன? பெரட்டுக்களம், வேலைத்தளம், வீடு, வாசல், குளிக்குமிடம் எல்லாவிடத்திலும் 'வெறும் போக்கடா, தீட்டிப் போட்டு ஆக்கடா' என்ற பழமொழிக்கேற்ப இதே பேச்சுத்தான்.

மேலும் தலைவரின் மகள் பற்றிய பிரச்சினை அல்லவா? அதுவும் அவள் வேறு இனத்தானோடு....!

இதுவும் அவர்களது பேச்சினை வலுவூட்டி ருசிகரமாகக் கிக் கொண்டிருந்தது.

அன்று ஞாயிற்றுக்கிழமை. எட்டு மணிக்கு எழும்பும் வழக்கமுள்ள பெரியசாமி ஆறுக்கே எழுந்து விட்டான். காலைக்கடன்களை முடிப்பதிலும், அலங்கரிப்பதிலும் ஒரே வேகம். பெரியசாமியின் மனைவிக்கு ஆச்சரியமாக இருந்தது. தலைவர் பதவியை கணவன் ஏற்றது முதல் ஜில்லாவிற்கு செல்லாத ஞாயிற்றுக்கிழமையே இல்லை, ஆனால் இவ்வளவு காலையில் புறப்பட்டது இதுதான் முதல் தடவை.

'ஏது காலையில்....முக்கிய சங்கதியோ' மனைவி கேட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஒனக்கு இன்னந் தெரியாதா? இன்னைக்குத் தானே நம்ம பிரச்சினை யெல்லாம் பேசுறதுக்கு பண்டாரவளையிலே மகா நாடு நடக்கப் போவுது. எல்லாத் — தலைவர்பார்களும் இன் னைக்குத் தானே ஒரே மேடையிலே பேச போறாங்க. இன் னைக்கு ரெண்டுல ஒன்னும் தெரிஞ்சு போகும்.' இனப் பற் றும், மொழிப் பற்றும் இப்படி அவனைப் பேசத் தூண்டியது. இரண்டு பிரச்சினைகளுக்கு இன்று முடிவு கண்டுவிட ஆசைப் பட்டது மனம். ஒன்றை அவன் தன் மனைவியிடம் கூறினான். இன்னொன்றை கூற நினைத்தான். ஆனால் கூறவில்லை. அங்கே கனகம்மா ஏந்திய குடத்துடன் வாசலை மிதித்துக் கொண்டி ருந்தாள். இவ்வளவு நாளும் அவனது உள்ளத்தை கப்பிக் கொண்டிருந்த ஒரு உணர்வு எகிறித் திகிறி இன்று எழுப்பி நின்றது. கனகம்மாவை ஒரு மாதிரி பார்த்துக் கொண்டே வீட்டை விட்டு கிளம்பினான்.

லயத்து வாசல்களிலே ஆட்கள் சிறு சிறு கூட்டங்களாக கூடி தோட்டத்துப் பள்ளத்தாக்கிலே கூட்டமாக வளர்ந்திருக் கும் கருப்பந்தைல மரங்களைப் போல நின்று பேசிக்கொண் டிருந்தனர்.

'என்ன நீங்களெல்லாம் புறப்படலியா? வெள்ளனை போனாத்தானே.' தலைவரின் கம்பீரமான பொறுப்புடன் கூடிய ஒலி கேட்டு 'நீங்க தலைவர் கொஞ்சம் முன்னாடி போங்க, பின்னாடியே நாங்களும் வந்துடுறோம்'. ஒருவர் கூற பெரியசாமி வேறு சிலரோடு அவர்களைக் கடந்து சென்றான்.

பண்டாரவளையை நோக்கி மக்கள் கூட்டம் சாரிசாரியாக எறும்பு ஊர்வதைப் போல், சென்று கொண்டிருந்தது' கையோடு காய்கறியும் வாங்கி வரலாம் என்ற முனைப்பில் உறைகள் ஒவ்வொருவர் கையிலே இருந்தமையும் அழகாகவே இருந்தது பெரியசாமிக்கு காய்கறி வாங்க வேண்டுமென்ற கவலை இல்லை. கூட்டத்துற்கு செல்கிறோம் என்பது கூட அவ னது உள்ளத்திலே நிறைந்திருக்கவில்லை. அவனது உள்ளப்..

'என்ன தலைவரே பேசாம வர்றீங்க. நமக்கு பிரசா உரிமை குடுத்துப்புடுவாஹ.'

'பொறுத்துத்தாங்க பார்க்கணும். நம்ம ஒண்ணும் இதில் சொல்லிப்புட ஏலுங்களா.'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'என்ன செஞ்சாலும் காரியமில்லே. டிப்பாவை திறந்திட்டாங்கன்னு போதும்.'

பெரியசாமிக்கு என்ன பதிலிறுப்பது என்பதே தெரியவில்லை, அவனது உள்ளத்திலே தெளிவு இருந்தால்தானே? உள்ளம்.. முடிவு தேடி அலைந்து கொண்டிருந்தது.

மகள் கனகம்மாவை ஒருத்தன் கையிலே புடிச்சுக் குடுக்கணும். பெற்றவனுக்கு அது பெரிய கவலையாய் போய் விட்டது. குயினு தோட்டத்து மச்சான் எப்படியாவது இன்னைக்கு வருவாரா? அவரு மகனுக்கு அவன் எந்த மாதிரி அழகற்ற குருபியாக இருந்தாலும் கொடுத்துடணும். முடிவை நிர்ணயித்ததில் உள்ளத்திலே ஒரு நிறைவு. முகத்திலே அது பிரதிபலித்துக் கொண்டிருந்தது.

பண்டாரவளை நகர மைதானம் மக்கள் திரளால் நிரம்பி இருந்தது. தொழிலாளர்களின் வழக்கமான ஜே! ஜே கோஷங்களுக்கும் வாழ்க, ஒலிகளுக்கும் அங்கு குறைவிருக்கவில்லை. தலைவர்கள் மேடையை நோக்கிச் சென்று கொண்டிருந்தனர். பெரியசாமி கூட்டத்தாருள் ஒருவனாக நின்று கூட்டத்தை நோக்கினான். கூட்டத்தைக் கண்டதும் அவனது உதடுகள் பாரதிதாசனின் பாடலொன்றை முணுமுணுத்தன. வெள்ளம் போல் தமிழர் கூட்டம் வீரங்கொள் கூட்டம் அன்னார் உள்ளத்தால் ஒருவரே. மற்றுடலினால் பலராய்க் காண்பர்! கள்ளத்தால் நெருங் கொணுதே. .அடுத்தவரி அவனது நினைவிற்கு வரவில்லை. துள்ளும் நாள் எந்த நாளோ? என்ற இறுதி வரியை மாத்திரம் திருப்பி திருப்பி கூறிக்கொண்டான். மலைநாட்டினரும் ஓரணியிலே நின்று ஒரே குறிக்கோளுக்காகப் போராடிக் குறைகளையெல்லாம் நிறைவுகளாகக் காணும் நாள் எந்த நாளோ? என்று அவனது உள்ளம் ஒலமிட்டது.

ஐயோ! ஐயோ! கூட்டத்தின் ஒரு பகுதியினரிடமிருந்து கிளம்பிய ஒலி பேச்சாளர்களின் சங்கநாதத்தை சங்கொலி ஒலிப்பது போல் ஒலி பெருக்கி ஒலித்துக்கொண்டிருந்தாலும் பெரியசாமியின் செவியில் கேட்கத்தான் செய்தது. சில விநாடிகள். சில நிமிடங்கள். ஓலக்குரல் காட்டுத் தீ போல பரவி கூட்டமெல்லாம் ஒலிக்கிறது.

ம், அடிடா ஒதைடா.

ஏ தம்பி எங்கடா இருக்கிற?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோட்டக் காட்டாங்களுக்கு என்னடா கூட்டங் கள்ளத் தோணி மினுசுன்ட வெறா ந்தட்டம தென்ன ஓணே கூக்குரல் கள் வானைப் பிளந்தன. பெரியசாமிக்கு விஷயம் விளங்க வெகு நேரம் பிடிக்கவில்லை. களம் கண்ட இணைத்துப் பரம்பரையிலே உதித்தவனல்லவா? தோளிலே போட்டிருந்த சால்வைத் துண்டு இடுப்பை சுற்றிக் கொண்டது. பாதங்களை அலங் கரித்து தெருவைக் கூட்டிக் கொண்டிருந்த வேட்டி இடுப்புக்கு மேலே சென்றது காலிலே இருந்த செருப்பு அங்கு இருக்க வில்லை. கையிலே அலங்கரித்திருந்த பலகைத் துண்டு? பாய்ந்து சென்ருன். அப்போது அங்கே!

"ஆ! சிரிசேனு நீயா?" திடீரென அலறிஞன். பெரியசாமி. காடையர்களை சிறிசேனு இனத்தைப் பொருட்படுத்தாமல் நேர்மையின் உயர்விற்காகத் தாக்கிக் கொண்டிருப்பதை நன்ருக உணர்ந்தான் பெரியசாமி. பொலிசார் விரைந்து வந்து கொண்டிருந்தனர். காடையர் சிலர் கைது செய்யப்பட் டனர். அங்கே கூட்டம் நடந்தது என்பதற்கு எந்த அறிகுறி யும் காணவில்லை. பெரியசாமி சிரிசேனுவை அப்படியே அணைத் துக் கொண்டான். அந்த அணைப்பில் இனத்திற்கு உதவி செய்தான் என்ற நன்றியறிதல் மாத்திரம் இருக்கவில்லை, பாசம், பந்தம் இழைத்தோடியது. நீதான் என் மருமகன்: தோட்டமே நாடே—, ஏன் உலகமே எதிர்த்தாலும் முடிவு கண்டு விட்ட பெருமையில் பெரியசாமியின் உள்ளம் நிறை வுற்றது. பொலிசார் வேனிலே கடையர்களை ஏற்ற வேன் புறப்பட்டது. பின்னுலே பெரியசாமியும், சிரிசேனுவும் சென்று கொண்டிருந்தனர். வேகமாக தாங்கள் மாமனும் மருமகனும் ஆகிவிட்ட நற்செய்தியை உரைக்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதுவும் ஒரு கதை

**(மு. சிவலிங்கம்)**

கொளம்பு தண்ணிக்கு ஒண்ணுமில்லே... ஒரு கோசா கன்னு ஒடிச்சி தாங்கப்பா!| உயர்ந்திருக்கும் வேலிச் செடியை இரு கைளாலும் நீக்கி, தோட்டத்துக்குள் தண்ணீர் போடும் அப்பாவைக் கேட்டாள் பொட்டு.

'சே! போம்மா அங்கிட்டு' பல்லு இல்லாதவனுக்கு கோசாத் தண்டை ஒண்ணுரெண்டா அவிச்சிப் போட பார்றியா...? ரெண்டு முள்ளங்கி புடுங்கித்தாறேன்; நல்லா வேக வைச்சு கொம்ளபு வய்யி! கொச்சிக்கா கூட போடாதே...!'

வெங்காய பாத்தியின் விளிம்பு மண்கரைய, அதை காலால் மிதித்து அணைத்தவாறு பூவாளியை மறுகைக்கு மாற்றினான்.

'ஏம்பா இப்படி கைவலிக்க கஷ்டப்படுறீங்க. வாளியை கொடுங்கப்பா நான் தண்ணி கொண்டாறேன்' என்றவாறு போட்டு இறங்கி வந்தாள்.

கஷ்டமா?

ராமு சிரித்தான். 'இந்த காடு மேடு எல்லாம் இந்த மாதிரி பூவாளியை தூக்கிக்கிட்டு நான் பூ போல தண்ணி போட்ட நன்றியை மறக்காமே சொல்றதுக்கு இந்த தேயிலை களுக்கெல்லாம் வாயிருந்தா வகை வகையா சொல்லும்மா'

பூ வாளியில் தண்ணீர் முடிய கீழே வைத்தவள் பொட்டுவின் கெண்டைக் கையில் 'படார்' என்று அடித்தான். 'ஒன்னுமில்ல ஆணைக் கொசுவு கடிக்குது வூட்டுக்கு போம்மா சுருக்கா..' அவள் கையை தேய்த்து விட்டவன், குங்குமச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவப்பேறிய ரத்தத் திட்டை கண்டு மாய்ந்து போனான்: வெற்றிலைக் குப்பியில் இருந்து சுண்ணாம்பை எடுத்துத் தடவினான்.

வண்ண ஓவியத்தில் ஒரு சின்ன மை சிதறிவிட்ட ஒச்சம்

அவன் பெற்ற மனம் துடித்திருக்க வேண்டும். அவளை மேலும் அங்கு நிறுத்தி சின்னபின்னமாக்க விரும்பாது, ஓடிப் போய் இரண்டு முள்ளங்கிக் கிழங்கைப் பிடுங்கி அவளைத் துரிதப்படுத்தினான்.

பொட்டு சிரித்தவாறு நடந்தாள். என் கண்கள் அவளையே பார்த்துக் கொண்டிருந்தன. அவள் செம்பட்டை மயிர் கற்றையை சீவி முடித்திருந்தாள். பின்னழகும் ஒரு பிரத்தியேக அழகாக.... இரண்டு நடை பயிலவும் அந்த இஸ்தோப்பு பஞ்சைத் தகரக் கதவு மூடவும் சரியாக இருந்தது!

தங்கத் தடாகத்தில் தவழ்ந்து செல்லும் மாலைச் செங்கதிரோன் மேட்டு மலையைத் தாண்டி மறைய நான் நடந்தேன்.

என் தலையைக் கண்ட ராமு பூவாளியை மறைக்க முயன்றான். 'என்ன ராமு! தவறணை பூவாளியை ஏன் சொந்தப் பாவனைக்கெல்லாம் தூக்கிக்கிட்டு வர்றே?'' உத்தியோகத் தோரணையில் கேட்டேன்.

'தோட்டத்துக்கு தண்ணி போடலாமுன்னு கொஞ்சம் கொண்டாந்தேனுங்க ஐயாவு... நாளைக்கு கொண்டு போயி வச்சுப் புடுறேனுங்க... ஹி.. ஹி..'

அவன் குழைந்த குழைவைப் பார்க்க பரிதாபமாக இருந்தது! 'பரவாயில்லை. வேண்டிய நேரம் பாவிச்சுக்க! ஓம் பாவனை எனக்குத் தெரியாதா? .. என்றேன்.

அவனுக்கு இந்த அணைப்பு வார்த்தை எப்படி இருந்ததோ, தன் பொக்கை வாயைத் திறந்து ரத்தச் சிவப்பேறிய வெற்றிலைக் காவியை சிரித்துக் காட்டினான்.

நான் வீட்டை நோக்கி நடந்தேன்.

* * *

விடு —

செக்ரோலை அலட்சியமாக மேசையில் போட்டேன்: அலைச்சல் மிகுதியில் வந்த களைப்புடன் வெறுப்பாக சமையல் கட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுக்குள் நுழைந்தேன். அங்கு நல்வரவு தந்து கொண்டிருந்தது எவரெடி பிளாஸ்க்!

தேநீரை ஊற்றிக் குடித்தேன். என்னதான் விஞ்ஞானம் உதவி செய்தாலும் இயற்கைத் தன்மையை காப்பாற்ற முடிவதில்லை.

அன்றைய கொழுந்து கணக்கைப் பார்க்க செக்ரோலை விரித்தேன். அலுப்பாக இருந்தது. மறுநாள் போயா நாள் தானே, காலையில் செய்து கொள்ளலாம், என்று செக்ரோலை மூடிவிட்டு, இரவுச் சாப்பாட்டையும் முடித்துக்கொண்டு படுக்கையை அடைந்தேன். விளக்கை இறக்கிவிட்டு போர்வையை இழுத்து மூடிக்கொண்டேன்.

தூக்கமா வந்தது?

கடும் வெய்யிலில் மேய்ந்து, பலசாதி செடிகொடிகளை புல் பூண்டுகளை வயிற்றுக்குள் சேர்த்துக் கொண்டு, நிழல் படர்ந்த இடத்தில் படுத்து அசை போடும் ஒரு மாடு மாதிரி அன்று காலை தொடக்கம் மாலைவரை நடந்த சம்பவங்களை நினைத்துக் கொண்டிருந்தேன்.

ராமுவின் நினைவு வந்தது.

அட! ஆபீஸ் டைரியைப் பார்க்கவே இல்லையே!

போர்வையை உதறித் தள்ளிவிட்டு மேசை அருகில் சென்று விளக்கைப் பெரிது பண்ணி விட்டு எனக்கும் சின்ன துரைக்கும் தொடர்பாக உள்ள ஆபீஸ் டைரியைப் புரட்டிக் கொண்டு போன எனது பெருவிரலும் ஒரு ஆள்காட்டி விரலும் ஒரு பக்க ஏட்டின் அடிமுனையை இறுகப் பிடித்துக்கொண்டன.

ராமு பென்சனுக்கு எழுதியனுப்பி இருந்த தனிக் கடிதம் டைரி ஏட்டில் 'பின்' பண்ணியிருந்தது. அதே கடிதத்தின் அடியில் மெனேஜரின் அந்த இரண்டு வரி அப்படியா இருக்க வேண்டும்.

"இந்த வருஷம் பென்ஷன் கிடையாது, புதுப் பேர் பதிவுக்குப் பிறகு அடுத்த வருஷம் எதிர்பார்க்கலாம்."

கோடிக் கணக்கில் பணத்தைக் கொட்டி 'பிஸ்னெஸ்' நடத்தும் தோட்டக் கம்பெனிக்கு ராமுவின் தொளாயிரம் ரூபாய் பென்ஷன் பணம்... கடல் நீரில் ஒரு கையளவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த 'சில்லறைக்'' காசுக்கு இந்தக் கம்பெனி போடுகிற சட்டம், சாக்குப்போக்கு, கட்டுத் திட்டம் இவைகளைப் பார்க்கும் போது எனக்கு சிரிப்பு வருகிறது. ராமு விஷயத்தில் தோட்டம் நடந்து கொள்கிற முறை எனக்கு கொஞ்சம் கூடப் பிடிக்கவில்லை.

என் மண்டை சூடேறியது, பாவம் ராமு! என்னை அல்லும் பகலும் தொந்தரவு செய்து என்னையே முழுமனதோடு நம்பிக் கொண்டிருக்கும் அந்தக் கிழட்டுச் சீவனுக்கு எப்படித்தான் பதில் சொல்லப் போகிறேனோ?

''ராமு நாளைக்கு பிரட்டுக்களம், கொழுந்து மடுவம்; தவறணை எல்லா இடத்திலும் என்னைக் காணும் போதெல்லாம் சுற்றி சுற்றி வருவாயே! இழவு துரை இப்படியா செய்ய வேண்டும்? கட்டிலில் போய் விழுந்து போர்வையை இழுத்து மூடிக் கொண்டேன்.

ராமு இந்த தோட்டத்துக்கு நாற்பத்து மூன்று வருட உழைப்பாளி. கோப்பிக் காலம் அழிந்து கொட்டைத் தேயிலை போட்ட காலம் வரை நடந்த கதைகளை அக்குவேறு ஆணிவேறாகப் பிட்டு பிட்டு வைப்பான்' தான் கங்காணி வேலை பார்த்தது, அடுத்த தோட்டத்திலிருந்து ஆள் திருடிக் கொண்டு வந்தது, மாரியம்மன் கோயில் கட்டியது, கறத்தை ரோட்டு வெட்டியது போன்ற தனது உடல் உழைப்பால் உருவாகியவைகளைப் பற்றி பெருமை பொங்க கதை கதையாகக் கூறுவான்.

வஞ்சகமில்லாமல் நிலத்தாய்க்கு தனது உடல் உழைப்பைக் கொடுக்கும் ஒரு நல்லவன், மண்ணுக்கு மட்டும் வஞ்சகம் பண்ணப்படாதுங்க ஐயாவு' என்று அவன் மண்வெட்டியைத் தூக்கி ஓங்கி ஓங்கிப் போடும்போது பத்து அடி தள்ளி நின்றுதான் அவன் வேலையைப் பார்வையிடமுடியும்.

தேயிலைக் கொட்டை விதைத்து, கொட்டைக் கன்று நட்டு பயிரிட்ட ராமு ஒவ்வொரு தேயிலைக் கன்றின் வயதையும் வளர்ச்சியையும் விஞ்ஞானிகளைப் போல கூறிவிடுவான்.

''இப்ப என்னுங்க, 'வங்கி கட்டிங்ஸ்'ன்னு வங்கி ஒரு துகளை நறுக்கி கன்னு போட பழகிக்கிட்டானுங்க. ஆணி வேரு இல்லாத கழுதை! நல்ல ஆயுசோட வாழாது போங்க...'' என்று தற்கால நவீன தேயிலைக் கன்று உற்பத்தியைக் கேலி செய்வான். எனினும் நவீன தேயிலைக் கன்று உற்பத்திச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்பு ராமுவைத் தான் சேர்ந்தது.

தவறணை வேலையில் அவனுக்கு ஒரு தேர்ந்த ஞானம் இருந்தது. அவன் உற்பத்தியில் உருவாகிய கன்றுகள் வளர்ந்து நல்ல கொழுந்து கொடுத்து நல்ல பேரும் வாங்கி விட்டது.

வெற்றிலையை இடித்து சாந்தாக்கி, முடிச்சு கட்டிப் பத்திரப்படுத்தி திடீர் பாவனைக்கு உபயோகித்துக் கொள்வான். என்னோடு கேலி தமாஷ் பேச ராமுவுக்கு ரொம்ப விருப்பம். 'இனிமேல கொச்சிக்கா தூள் மாதிரி வெத்தலை பவுடரும் செஞ்சி, வித்தானுங்கன்னு 'வ்வளவு சொணக்கம் வராதுங்க' என்று அவன் நுனி நாக்கில் சுண்ணாம்பைத்தடவி புகையிலைத் துண்டை வாய் வளிம்புகளைத் துடைத்து உள்ளே அடக்கிக் கொள்ளும் போது எனக்கு சிரிப்பு பொத்துக்கொண்டு வரும்.

எனது நான்கு வருட அனுபவத்தில் ராமுவுக்கு முன்பு இருந்த தோற்றம், உடல் ஊக்கம் இப்போது இல்லை. ஒருவித வாயு நோய் அவனை வாட்டித் துரும்பாக்கிக் கொண்டிருந்தது.

ஏற்கனவே மெலிந்த உடம்பு; இப்போது விலா எலும்புகளை எண்ணும்படியாக மெலிந்திருந்தது.

அறுபத்தி மூன்று வயதில் அவன் நடமாடுவதே ஆச்சரியம்.

● ● ●

வெள்ளிக்கிழமை.

'இன்று தவறணைக் கன்றுகளைப் பார்வையிட வருவேன்' என்ற 'மனேஜர் சர்குலரை' சின்னதுரை எனக்கு டைரியில் வைத்து அனுப்பியிருந்தார். எனது கவனம் தவறணையை அடைந்தது. ஏற்கனவே இரண்டு வெட்டு இலைப் பாத்திகள் நிரப்பி வைக்கச் சொல்லி இருந்தேன்.

நான் அங்கு போனபோது இரண்டு வெறிச்சிட்டிருந்த பாத்திகள்தான் என்னை வெறுமையோடு பார்த்தன.

எனது உடல் சிலிர்த்தது. தாங்க முடியாத ஆவேசத்தோடு 'ஏய் ராமு' என்று கத்தினேன். எனது சத்தம் தவறணைப் பள்ளத்திலிருந்து வெடி வைத்து கல்பிளக்கும் சத்தமாய் எழும்பி தேரியை நோக்கி மேலோடியது. சவுக்கு மரம் ஒன்றில் உட்கார்ந்திருந்த நெருப்புக்குருவி ஒன்று எழுப்பிப் பறந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கத்து வாகை மரத்தில் உட்காரப் போய் அங்கும் அமராது குட்டித் தேரியை நோக்கிப் பறந்தது.

பழைய கன்றுகளின் மத்தியில் உள்ள காய்ந்த சருகுகளை பொறுக்கிக்கொண்டிருந்த ராமு 'ஸ்பிரிங்' பொம்மை போல எழும்பி ஓடி வந்தான்.

„ஐயாவு,'

'அடச்சீ! என்ன ஆளய்யா நீ! வர வர ஒனக்கு நிதானம் குறைஞ்சு போச்சு. வேலே செய்ய முடியாட்டி 'பென்ஷன்' வாங்கிக்கிட்டு வீட்டுலே கெடக்கிறது தானே?'

என் சத்தம் என் காதையே அடைத்தது. 'வெளங்கல் லீங்க ஐயாவு' 'ரெண்டு பாத்தி கட்டிங்ஸ் போடச் சொன்னேனே போட்டியா? மெனேஜரும் சின்னவரும் இப்ப வருவாங்களே, என்ன சொல்வது?'

அந்த கிழட்டு உடல் தடதடவென ஆடியது. அவன் தன் பெருவிரல் நகத்தில் இருந்த மண்ணை சுரண்டிக்கொண்டு என்னைப் பார்த்த பார்வை......

தன் கவனக்குறைவைவிட குற்றத்தை பெருந்தன்மையோடு ஏற்றுக்கொள்கிறான் என்பதைத் தெளிவுபடுத்தியது.

''அப்பிடி போயிட்டு இப்படி வாங்க ஐயாவு! அஞ்சி நிமிசத்திலே போட்டு வைக்கிறேன்'' என்றான்.

அவன் பேச்சு எனச்கு அவசியப்படவில்லை. மெனேஜரின் ஒற்றைக் கேள்விக்கு சின்ன துரை என்ன மறுமொழி சொல்லப்போகிறார்? சின்ன துரை மதிப்பை காப்பாற்றாத எனக்கு என்ன நேரும் என்ற குழப்பத்தில் மண்டையை உடைத்துக் கொண்டு அடுத்தாற் போலிருந்த வேலைத் தளத்துக்குப் போய் விட்டு கையோடு மெனேஜர் கார் வருகிறதா என்பதையும் பார்த்துக்கொண்டு திரும்பினேன்.

என்ன! நெஞ்சு நினைக்காத விசித்திரம்!

வெறுமனே கிடந்த இரண்டு பாத்திகளிலும் 'டி. ஆர். ஐ. இருபது, இருபத்தியாறு' இன வெட்டு இலைகள் போட்டு, பூவாளி சிரிக்க 'பூ' வென தண்ணீர் வார்த்துக் கொண்டிருந்தான் ராமு. பச்சை வெட்டு இலைகள் நிரம்பி முழுமை பெற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றிருந்த அவ்விரண்டு பாத்திகளும் நிறைவு பெற்ற பெண்ணைப் போல சாடை காட்டின.

கண்ணைச் சிமிட்டாமல் ராமுவைப் பார்த்தேன். அவன் சிரித்துக் கொண்டே பூவாளியை வைத்து விட்டு புகையிலையைத் திருகி தன் பொக்கை வாய்க்குள் போட்டான். 'பதமான வெட்டு போட்டிருக்கேன் ஐயாவு! ரெண்டு நாளைக்கு பனி பேஞ்சி சூரியன் வந்தா குபீர்ன்னு எழுந்திருச்சுடுங்க'' என்றான். எனக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை: "ராமு, ரொம்ப வெத்தலை திங்காதப்பா... ஆயுசை கொறைச்சிடும்'' என்று அவன் கோபத்தைக் குறைப்பதற்காக ஏதோ சொல்லிவிட்டு நகர்ந்தேன்.

'ஐயாவு...' ராமு என் பின்னால் ஓடி வந்தான்.

அவன் எதைக் கேட்கக்கூடாது என்று நான் நினைத்தேனோ அதையே அவன் கேட்டான்.

'என்னுங்க என் பென்ஷன் விஷயமா தொரைக்கிட்டே கேட்டீங்களா? துண்டு அனுப்பினீங்களா' தொரை என்ன சொன்னாரு''.

எனக்கு சங்கடமாக இருந்தது. 'ராமு! தொரை பதில் அனுப்பி இருக்கிறாரு... பென்ஷன் இப்ப தருவதில்லையாம்.'

'பின்னே எப்போதைக்கு சாமி கெடைக்கும்? நான் கட்டையிலே போனப்புறமா?'

'எப்படியும் இன்னும் ரெண்டு வருசம் போகும்...'

'ஐயோ! நான் நெனைச்ச மாதிரி நடக்காதா சாமி! நான் என்ன பண்ணுவேன்!'

அந்தக் கிழம் தடதட வென மின்சாரம் தாக்கியது போல் ஆடியது. என்னைப் பார்த்து இன்னும் என்னவோ சொல்ல வாயெடுத்தான். வாய் வரவில்லை! ஆத்திரம் அதிகமானால் பேச வராது என்பார்களே, அது சரியாகத்தான் இருந்தது.

மூடிய வாய் திறக்காதிருக்க உதட்டு இடுக்குகளில் வெற்றிலைச் சாறு வடிந்து கொண்டிருந்தது. தனது புறங்கையால் அதைத் துடைத்தவாறு 'ஐயாவு! ஒங்களாலே நடக்காத காரியம் ஒண்ணும் இல்லீங்க. நீங்க மனசு வச்சா எல்லாமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடக்கும். இந்தக் கெழட்டு பாவி எண்ணத்துலே மண்ணு விழாமே செஞ்சுட்டீங்கன்னு நீங்க மவராசனு இருப்பீங்க சாமி' என்றவாறு என் சப்பாத்துக் கால்களை இரண்டு கைகளாலும் தொட்டான்.

நான் துள்ளி ஒதுங்கிக் கொண்டேன். அவன் தோள்களை பற்றித் தூக்கிவிட்டவாறு 'என்னமோப்பா நான் மறுபடியும் தொரைகிட்டே சொல்லிப் பார்க்கிறேன். நீ மனசை ஒடைச்சிக்காதே' என்றேன். அதிக நேரம் அந்த இடத்தில் நின்று அக்கிழட்டு மனம் துடிப்பதை பார்க்க சகிக்காத நான் நடையை விரைவு படுத்தினேன்.

பசி —;

வீடு —

பிடிசாதம் தான் அள்ளிப் பிசைந்திருப்பேன். அதை ஏற்க வாயும் மனசும் மறுத்தன.

தொங்கிய முகத்தோடு நின்ற ராமுவின் தோற்றத்தை மறக்க முடியவில்லை.

நான் இந்தத் தோட்டத்திலே மிகவும் சக்தி வாய்ந்த ஒரு மனிதன் என்று என்னையே நம்பிக் கொண்டு எந்த நேரமும் என் தயவை எதிர்பார்த்து கெஞ்சாத நாட்கள் பாவம் செய்தவை.

என்னைத் தவிர வேறு யாரிடமும் ஒட்டமாட்டான். பெரிய அதிகாரிகளில் நான் ஒருவன் மட்டுமே அவனிடம் சகஜமாக நெருங்கிப் பழகுபவன். அவனுடைய அந்திய கால எண்ணம், லட்சியம் என்னாலேதான் நிச்சயம் நிறைவேறப் போகிறது என்ற நப்பாசையில் என்னைக் காணும் போதெல்லாம் ஒரு திவ்விய ஜனிப்பு அவன் முகத்தில் எழிலாடும்.

'பென்ஷனுக்கு எழுதுங்க சாமி! உசுரோட போயி என் பொறந்த மண்ணை மிதிக்கிற பாக்கியம் கெடைக்க வழி பண்ணுங்க ஐயாவு' இந்த வார்த்தைகள் நான்கு வருட காலமாக என் காதிலே விழாத நாட்களே கிடையாது.

ராமுவுக்கு ஊன்று கோலாக ஒரு வயது வந்த மகள் பொட்டு; ஏதோ சாதி முறையில் தூரத்து மாமன் மச்சான் என்று யார் யாரோ இருந்தார்களே யொழிய அவனுக்கு சுற்றமும் சொந்தமும் இலங்கையில் யாருமே இல்லை. அவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனைவி இறந்த பிறகு அவனுக்கு உதவி யாருமில்லாததால் இந்தியாவுக்கு வந்து விடும்படி எத்தனையோ கடிதங்கள் அவன் தங்கையிடமிருந்து வந்த வண்ணமாக இருந்தன! ''முறைப் பொண்ணு பொட்டுவை சிலோன்காரனுக்கு கட்டி வைச்சிப் புடாதே! சுருக்கா வந்திடப்பாரு அண்ணே'' என்று ராமுவின் கிழட்டுத் தங்கை வாஞ்சையாக வரைந்து அனுப்பும் கடிதங்களை என்னிடம்தான் படித்துக் காட்டும்படி கேட்பான்.

''ஐயாவு நான் இந்த ஊரிலே சம்பாரிச்ச சொத்துச் சொகங்களை கொண்டுக்கிட்டு வாடான்னு யாரும் அடிக்கல லீங்க... என் தங்கச்சி மவனுக்கு என் மவள் பொட்டை கட்டி வைச்சுட்டேன்னு அதுவே போதும்'' என்பதுதான் அவன் லட்சியத்தின் ஆணி வேர். இந்த லட்சியத்துக்காக அவன் முழுக்கவும் என்னைத்தான் நம்பிக் கொண்டிருந்தான்

ராமு தனது தங்கைக்கு கடிதம் எழுத வந்து விட்டால் போதும். அவன் பேச்சு, உணர்ச்சி, முகத்தோற்றம் எல்லாமே அவனது இரத்தபாசத்தில் திளைத்து புதிதாக ஒரு யௌவன ஜனிப்பைத் தோற்றுவித்து விடும். இந்தியாவில் இருக்கும் தங்கையிடம் அவன் என் வீட்டிலிருந்து கொண்டே கதைத்துக்கொண்டிருப்பான்.

''அம்மா...! நான் சுருக்கா நம்ம ஊருக்கு வர எங்க தோட்டத்து கண்டாக்கய்யா ரொம்ப ஒதவி செய்றுரு. அவரு தயவால தான் காயிதம் போக்குவரத்து எல்லாம் இங்கிலீசுல நடக்குது. அவரை நெனைச்சு நீயும் கும்பிடவேணும்.

''தங்கச்சி...

''நம்ம பொட்டு. வச்சு உரிச்சமாதிரி ஒன்னைப் போலவே இருக்கா! பொழைச்சுக் கெடந்தா இந்த வருஷக்கடைசியிலே அக்கரை வந்துடுறேன்...''

போர் அடித்து விடும். கடித உரையாடல். ஒரே சூலில் பிறந்து ஓடி ஆடி விளையாடிய இரண்டு உடன் பிறப்புகளின் உயிர்ப் பேச்சுக்களை - இதயத் திணிப்புகளை ஒரு கடிதத்தின் அளவு ஆக்கி விடுவதில் மனித சாதனைகளில் ஒன்றை நான் சாதித்து விட்ட பெருமை அடைவேன்...

என்னையே நம்பிக்கொண்டிருக்கும் ராமு என்னிடம் அளவு மீறி உறவு வைத்திருப்பது ஊர் பார்வைக்கு நல்லதாக யிருக்காது என்பது எனக்குத் தெரியும். நான் ஒரு தோட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டத்து அதிகாரி. அவன் ஒரு லட்சணமான வயதுக்குப் பெண்ணுக்குத் தந்தை.

இதை வைத்துக் கொண்டு எழுந்த சந்து பொந்துப்பேச்சுக்கள் என் காதில் விழத்தான் செய்தன.

அவைகளையெல்லாம் நான் அக்கறைப் படுத்திக்கொள்ள விரும்பவில்லை. 'யோக்கியம்' என்ற தடித்த போர்வை இருக்கும் போது 'சின்னப் பேச்சுக்கள்' என்ற பொசுங்கைக் குளிரால் என்ன செய்ய முடியும்?

பொட்டு என் கண்காணிப்பில் வேலை செய்யும் ஒரு தொழிலாளப் பெண், அழகுள்ளவள்; நல்ல வேலைக்காரி.

மட்டத்து மலையில் அழுக்குக் கொழுந்து எடுக்க கூடையை மாட்டினுளென்றால் ஒரு கைக்கு ஒரு பிடியில் ஒவ்வொரு முத்தல் கட்டப்படும். கூடையில் போட்டால் அந்திக் கொழுந்து நிறுக்கும் போது நிறுவைத் தட்டில் கற்றை கற்றையாக கீரைக் கட்டு போல கிடக்கும். அவள் அழகு, பண்பு, உழைப்பு இந்த மூன்றிற்கும் சொந்தமாகப் போகும் ஒருவன் அகப்பட்டால் அவன் பெரும் பாக்கியசாலிதான்!

இலங்கை தேயிலை தோட்டத்தில் கூலி வேலை செய்து சீரும் சிறப்போடும் செல்வங்களை வாரிக் கொண்டு நாடு திரும்புவோம் என்ற எண்ணத்தில் வந்த ராமுக் கிழவனின் கடைசி நிலைமை பொட்டு என்ற விலை மதிப்பில்லா செல்வம் கிடைத்தது தான் மீதி. அவனுக்கு அவளை விட வேறு செல்வம் வேண்டியதில்லை.

சிறந்த சிற்பக் கலைஞன் வடித்தெடுத்த பதுமை போன்றிருக்கும் பொட்டுவும் நாற்பத்தி மூன்று வருடம் உழைத்துக் கொடுத்த தோட்டக்கம்பெனியால் தனக்குக் கிடைக்கப்போகும் பென்ஷன் பணம் சுமார் தொளாயிரம் ரூபாவுமே அவனது இரண்டு கைகளோடு இந்தியாவுக்கு கொண்டு போகும் கைமிச்சங்கள்!

* * *

பழைய மலை கவ்வாத்து காலம் முடிந்தது. மட்டம் வெட்டியாகி விட்டது. வெடிக் கொழுந்தும் எடுத்துவிட்டனர். அழுக்குக் கொழுந்து மீண்டும் திரும்பியது. தொழிலாளர்களுக்கு அதிகச் சம்பளம் கிடைக்கும் நல்ல கொழுந்துக் காலம். இவைகளையடக்கி ஐந்து மாதங்கள் ஊர்ந்து சென்றன. பொட்டு சரி

யாக வேலைக்கு வருவதில்லை. செக்ரோல் அவள் பெயர் கோட்டுக்கு நேரே அசிங்கப்படுத்தியது.

ராமுக் கிழவனுக்கு சுகம் குறைவு. வருத்தம் அதிகம் என்று தபால்கார சுப்பையா வந்து சொன்னான். மறுநாள் அதிகாலையில் என் வீட்டுக்குள் ஓடி வந்து ''ஐயா! அப்பாவுக்கு ரொம்ப வருத்தம். ராத்திரியிலிருந்து பேசலிங்க! கஞ்சியும் குடிக்க முடியல்லீங்க. கைக்காசு ஆஸ்பத்திரியிலே மருந்து எடுத்துக் கொடுங்க. எங்க அப்பாவை காப்பாத்துங்க'' என்று பொட்டு ஓலமிட்டாள்.

நான் முதலில் பயந்தேன். பின்னர் சுப்பையாவோடு கைக்காசு ஆஸ்பத்திரிக்குச் சென்று என் கடமையை முடித்தேன்.

ராமுக் கிழவன் நன்ருகப் பேசி, எழும்ப, உட்கார தேறிவிட்டான். எனக்கு நல்ல மூச்சு வந்தது. பென்ஷன் பணத்தை சுகயீனத்தை காரணம் காட்டி இந்த ஜனவரிக்குள் எடுத்துவிட வேண்டும். ஆறு வருட முயற்சி இன்னும் அறுபது நாட்களுக்குள் வெற்றி நிலையை அடைந்து விடும்.

ராமு சுகமாக இருந்தால் பென்ஷன் பணத்தோடு இருவரையும் இந்தியாவுக்கு அனுப்பி விடலாம் என்று கடவுளை வேண்டிக் கொண்டிருந்த என் இதயத்திலா அந்த 'இடி' விழ வேண்டும்?

ராமு செத்துவிட்டான்.

பொட்டு வீடதிர, காடதிர கத்துகிருள். எண்ணம் மண்ணுகி விட்ட உண்மை தெரிகிறது. மரக் கட்டையாய் நின்று கொண்டிருந்த என்னிடம் 'ஓடும் பிள்ளை' சின்னவன் இழவுச் செய்தி கூறிச் சென்ருன். 'தவறணை ராமு தவறிப் போய்விட்டாரு. நாலு மணிக்கு அடக்கங்க...'

சின்னவன் சொன்ன இழவுச் செய்தி என் காதுகளைக் குடைந்தது. சொந்த பந்தம் இல்லாத ராமு செத்து விட்டான். பொட்டு தனித்து விட்டாள். நீண்ட தொடர்பு கிழவனோடு வைத்திருந்தவன் நான் தான். தப்புக்காரர்களுக்கு நான் போய் தான் காசு கொடுத்தேன். இத்தனைக்கும் அவனது சாதி சனங்கள் அந்த லயத்து ஆட்கள் உட்பட கும்பலாகத்தான் இருந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் கால்களில் ஆடி மழையில் உடைந்து விழும் வாழை மரத்தைப் போல சடாரென பொட்டு விழுந்தாள். பேச்சு மூச்சில்லை. விழுந்தவளை தூக்கி நிறுத்தினேன். 'ஐயோ சாமி எனக்கு இனி யாரு தொணை...?' என்று அலறி என் மேல் விழுந்து என்னை இறுகக் கட்டிக் கொண்டாள். அவள் பிடியிலிருந்து விடுபட என்னால் முடியவில்லை, அலங்கோல நிலையில் ஆடைகள் நெகிழ்ந்தும் பருவங்கள் தெரிந்தும் என்மேல் அவள் புரண்டு புலம்புகின்ற விளங்காத காட்சி என்னை வேதனைப் படுத்தி வெட்கத்துக்குள்ளும் கொண்டு செலுத்தியது.

தாவிப் படர்ந்த கொடியாய் என் உடலைச் சுற்றிக்கொண்டிருக்கும் அவள் கரங்களை உருவித்தள்ள எனக்கு மனம் வரவில்லை. நிச்சயம் அவள் நிலத்தில்தான் விழுவாள். அவளுக்குத் துணையில்லை! அவள் கன்னிப் பருவத்துக்கு முன்பிருந்தே அவளும் ராமுவும் என் கடாட்சத்தில் வாழ்ந்திருக்கின்றனர். இரண்டு 'கைமிச்சங்களில்' ஒன்று தொலைந்து விட்டது. அந்த மற்ற ஒன்றை கடைசி வரை நான்...... முடியாது!

நான் ஏன், இவ்வளவு அக்கறை கொள்ள வேண்டும்...... இவர்கள் வாழ்க்கையில்? பொதுவில் பார்த்தால் நான் ஒரு தோட்ட அதிகாரி. இவ்வளவு நெருக்கமாகத் தொழிலாளரோடு ஒன்றிப் பழகுவது எனது கடமைக்கு துரோகமானது என்று எனக்குத் தெரியக் கூடாதா?

ராமு வாழ்க்கையில் நான் பிரத்தியேகமாகப் பழகி விட்டவன். அவன் எண்ணம் ஈடேறாமல்தான் போய்விட்டது. அவனது ஆத்மா சாந்தியடையவாவது நான் நிச்சயம் பொட்டுவை......?

ஏன் பொட்டு எனக்கு எல்லாவிதத்திலும் பொருத்தமானவள் தானே...? ச்சே! என்ன சுயநலத்தின் மேல் எழும்பும் பொதுப்பணி!

பொட்டுவைப் போன்று எத்தனையோ கற்புள்ள தனிமைகள் இப்படி ஆகி... நெறிகெட்டு சந்து பொந்துகளில் 'வாங்கித் தின்னும்' நடைமுறை கண்காட்சிகள் எத்தனை யெத்தனை?

தேயிலை ரப்பர் தோட்டங்களில் நாள் கூலிக்கு உழைக்க வந்த இந்திய வம்சாவழிக் கூட்டங்கள் ராமுவைப் போல தனது அந்திய கால சாவு காணிக்கையாய் கிடைக்கும் பென்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஷன் பணம் தொளாயிரத்தைப் பெருமலே கண்களை மூடிய கதைகள் எத்தனையோ தொளாயிரங்கள்?

அவைகளில் இதுவும் ஒரு கதை தானே?

என்னை இறுகத் தழுவிக் கொண்டிருந்த அவள் பிடியைத் தளர்த்தி பலவந்தமாக என்னை விடுவித்துக் கொண்டு இஸ் தோப்பை விட்டு வெளியே வந்து விட்டேன்.

ராமுவின் முகத்தைக் கூட பார்க்கவில்லை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரசவக் காசு

## பரிபூரண

சிலையாக நின்றான் சன்னாசி!

தலையில் சுற்றிக் கட்டியிருந்த முண்டாசு பாதி மயிரை மேல் நோக்கி வாங்கிபின் புறம் வழிய விட்டிருந்தது: கடைவாயில் எச்சில் நுரைத்துக்கொண்டிருந்தது. வேட்டியும் சட்டையும் சர்க்கரைச் சாக்குபோல் இருந்தது. இரண்டு கால்களிலும் வெவ்வேறு ஜாதியான சப்பாத்து. சப்பாத்தின் உள்ளே சென்றிருந்த சேற்றுக்குளம்பு முட்டைவிட்டுக் கொண்டிருந்தது.

தோட்டத்தை சுத்திசெய்யும் தொழிலாளிகளில் அவனும் ஒருவன்.

குறுக்குப் பாதையில் நின்றபடி தன் வீட்டுப் பக்கம் இருந்து தானே சத்தம் வருகிறது என்று யோசித்தான்

விடு விடு வென்று வீட்டிற்கிறங்கியவனிடம் அவனுடைய தாய் சொன்னாள்.

"உனக்கு பொண்ணு பிறந்திருக்குடா'' என்று. நாக்கின் நுனியில் நறுந்தேன் விழுந்தது போன்று மனமெல்லாம் இனித்தது. தயத்தின் விரிசல் விசுவரூபம் எடுத்து உதட்டளவில் விரிந்து சிரிப்பாய் மலர்ந்தது. 'ஒன்பது வயதுள்ள மூத்தவனுடன் எட்டு பயலுக பிறந்திட்டானுக பொண்ணு பிறக்கலையே என்ற கவலையும் தீர்ந்து போச்சு ஹும்.' வருடாவருடம் வரும் திருநாள் என்று வரும் என்று துடிக்கும் சிறுவர்களுக்கு இன்று தான் பெருநாள் என்றால் எப்படி இருக்கும்? அதே நிலைதான் இவனுக்கும்: வருடாவருடம் இவனுக்கு மட்டும் வரும் திருநாள் இதுவாயிற்றே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருந்துகாரரு வந்தாரு: குறிச்சுக்கிட்டு போனரு. இன்னேரம் ஆபீஸில் சொல்லியிருப்பாரு என்று கூறிய கிழவி வீட்டினுள் சென்ருள். வாளியில் தண்ணீர் ஊற்றும் சப்தம் கேட்டு திரும்பிப் பார்த்தான். எட்டு வயதும் ஒன்பது வயதும்போட்டி போட்டுக் கொண்டு வாளியை நிறைத்தன.

'அவன் நெருப்புப் போடட்டும் நீ போய் நான் சொல்ற சாமான்களை வாங்கிவா என்ருன் மூத்தவனை பார்த்து.

'காசு குடுக்காட்டி சாமான் தரமாட்டேன்னுட்டாரு மொதலாளி: என்று முனகினன் மகன்.

'புள்ள பெத்த காசு வாங்கினதும் தாரேன்னு சொல்லு; ஒத்துக்குவாரு' என்ருன்.

'ஆபீஸை' நோக்கி அவன் நடக்க கடையை நோக்கி மகன் நடந்தான்.

போன வருடம் வந்த கிழவி வரல்ல. ஆயா வந்திருக்கு, என்று கடந்த கால நினைவில் மனதை நனைத்து எடுத்துக்கொண்டான். பளீர்என ஒரு மின்னல் சிந்தனையில் கிளம்பியது. அதன் வேகம் போகும் தூரம் எல்லாம் மின்னல் போல் மனதிற்கு எட்டிய தூரம்வரை நினைவில் வந்துவிடும் கணப்பொழுதில்:

கடந்த எட்டு ஆண்டுகளாக மனைவி பிரசவித்த போது தோட்டம் கொடுத்த காசும் அனுபவித்த இன்பமும்கண்முன்னே விரிந்தது. சுளையாக எழுபது ரூபாய்! அவரவர்கள் வேலைசெய்த நாட்களை பொறுத்தே காசு கொடுக்கப்படும். என்ருலும் எல்லாருக்கும் எழுபதுக்கு குறையாமல் கிடைக்கும். முந்தாநாள் கூட பேர் போட்டுவிட்டு வந்தாள். நேற்று வீட்டிலிருந்தாள் இன்று பெற்றுவிட்டாள். சுளையாக எழுபதுரூபாய் கிடைக்கும். ஆனல் அந்த காசு எங்கே போகிறது. எப்படி செலவாகிறது என்று தோட்டத்திற்கோ கொடுக்கச் சொல்லும் கம்பெனிக்கோ தெரியுமா? நெல்லுக்கு இறைக்கும் நீர் புல்லுக்குப் பொசிவதை யார் அறிவார்கள்? பிரசவித்தவளின் உடல் தேறி உறுதி பெற கொடுக்கப்படும் காசு என்ன ஆகிறது என்று தெரிந்தவர்களுக்குத்தான் தெரியும்.

இதே இவர்களுக்கு தொழிலாகிவிட்டது. அசுர வேகத்தில் பெருகி வரும் ஜனத்தொகையை தூண்டிவிடும் கோலாக அமைந்து விட்டது' இந்த பிரசவக் காசு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுத்தது போல இப்போது ஜனத்தொகை பெருகுகிறது என்று குடும்பக் கட்டுப்பாட்டு திட்டம் போதிக்கப்படுகிறது.

இந்த தோட்டத்திற்கும் 'குடும்பக் கட்டுப்பாடு பிரசாரகர்கள் வந்தார்கள், எண்பது வயது கிழவிகூட வெட்கப்படும் போது இளையதினர் என்ன செய்வார்கள், ஏதோ காணக்கூடாததை கண்டது போன்று அருவருப்படைந்தார்கள். சன்னுசி மனைவி போன்றவர்களை கூட்டத்திற்கு அழைத்திருந்தார்கள்.

விஷயமறிந்த சன்னுசி வெறியனுக மாறினன், குடும்பக் கட்டுப்பாடு மருந்து வாங்கி சாப்பிட்டாளாப், மோகாபம் வராதா பின்னே! பிள்ளை பிறக்காவிடில் யார் காசு கொடுப்பார்கள் பிரசவக் காசு. வீட்டு வாசலில் உட்கார்ந்திருந்தான் பெரிய கம்புடன் இதுதான் அவளுக்கென்று.

அவள் தன் தாய் வீட்டிலே தங்கி விட்டாள். மூன்று நான்காக மாதங்கள் செல்லவும் வயிறு வளரவும் அவள்துணுக்குற்ருள்—அவளுக்கு கோபம் வந்தது, சன்னுசிக்கு சிரிப்புவந்தது

ஒரு நாள் தோட்டத்திற்கு வந்த டாக்டரை மடக்கிக் கொண்டாள். 'நீங்கள் எல்லாம் மருந்து சாப்பிடுற முறை சரியில்லை என்ருர் டாக்டர், 'நாங்கதான் தெரியாத ஆளு,'மருந்துக்காரரு மனைவிக்குமா முறை தெரியாது என்று வயிற்றை தடவிக் கொண்டிருந்த மருந்துக்காரர் மனைவியைக் காட்டி கேட்டாள்.

அவர் மூச்சு விடாமல் போய்விட்டார்.

நடந்ததை மனம் அசைபோட்டு ஜீரணிக்க கால்கள் பாதையை ஜீரணிக்கிறது.

படிகளைத் தாண்டி ஆபீஸை அடைந்தான்.

ஆபீஸ் வாசலில் தான் பெரியவருக்கு ஆசனம், ஆனல் வெளியில் இருந்துவருபவர்கள் அவரது முதுகைத்தான் பார்க்க வேண்டும், யாரும் வெளியில் வந்து நின்ருல்கூட அவருக்கு வசதியான போதுதான் திரும்பிப் பார்ப்பார்.

டெலிபோனை வைத்துவிட்டு எழுந்தவர் என்ன சன்னுசி" என்ருர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அந்த காசுங்க' என்று தலையை சொறிந்தான், 'துறையில்லை, காலையிலே வா' என்று கூறிவிட்டு அவர் வேலையில் மூழ்கினார்.

எங்கே விடிந்தது ஆபீசில் விடிந்தது என்றுதான் நின்றான்' ஆரவாரமின்றி ஆனால் சுறுசுறுப்புடன் இருக்கிறது அலுவலகம், ஆபரேஷன் நடக்கும் தியேட்டர் போல காலை நேரம் அல்லவா! செக்ரோல் வாங்க வருவோரும்செய்திகள் கொண்டு வருவோருமாக ஆடி ஓடிக்கொண்டிருந்தனர்.

காவணியின் ஒலியை அடக்க நுனிக்காலால் துள்ளித்துள்ளி ஓடி வந்தார் ஒரு குமாஸ்தா பெரியவர் தனக்கு முன்பே வந்து விட்டாரே என்ற பயம்.

நின்றுநின்று கால் கடுக்கவும் சன்னாசிக்கு 'சீ' என்று போய் விட்டது,இத்தனை பேர் அடைந்து கிடக்கிறாக என்ன செய்கிறுகளோ தெரியல்ல' என்று தனக்குள்ளே முனகிக்கொண்டான் வாசல் பக்கம் வந்தவனுக்கு, தூரத்தில் தன்னுடன் தினம் கள்ளருந்த வரும் வீரன் பீடி குடிப்பது தெரிந்தது, மெல்ல அவனை அணுகி 'ஒரு பீடி கொடுடா வீரா' என்றான்,

'அட சன்னாசியா என்ன காலங்காத்தால இந்த பக்கம்'

'அது தாண்டா காசு வாங்க வந்தேன். இன்னும் நீட்ராக; காசு இருக்கிறதுன்னு இவ்வளவு வருத்தம் வுகையை அறுத்துக்கிட்டு சொடுக்கிற மாதிரி. வீரா இன்னைக்கு என் லயத்தெல்லாம் சேர்த்துக் கூட்டிடு, சாயந்தரத்திற்கு பதுளைக்கு போவோம் சரியா,

'எனக்கிட்ட காசு இல்லையே'

'நீ அதைப்பத்தி கவலைப்படாதே வேலையை எல்லாம் முடிச்சுட்டு ரெடியா இரு'

என்றவன் பேச்சுத் தடைப்பட்டது, பெரியவரின் குரலை தொடர்ந்து 'சன்னாசி சன்னாசி என்ற பல குரல்களை இந்தா வாரேங்க என்ற ஒரு குரலால் அடக்கிவிட்டான்,

பத்துசத முத்திரையில் அவனின் பெருவிரல் அடையாளத்தை ஊன்றி எடுத்தபர் இந்தரசீதை துரையிடம் கொண்டு போய் கொடு என்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு கைகளாலும் துரைக்கு சலாம் போட்டவன் துரையிடம் துண்டை கொடுத்தான், துரை எண்ணிக் கொடுத்த நோட்டுகளை இரண்டு கைகளாலு வாங்கி கைகளை மூடி ஒரு கும்பிடு போட்டு விட்டு படிகளில் இறங்கினான்

தன் சக நண்பனுடன். ஒத்தாசையாக வேலை செய்து முடித்துவிட்டு பன்னிரண்டு மணியளவில் வீட்டிற்கு வந்தான், மேல் சட்டை அணியாத கருத்த மேனியை இழுத்து மூடிய வண்ணம் வெளியே வந்த கிழவி 'அதுக்கு லேசா காச்சல் அடிக்குதடா' என்றாள் வாடிய முகத்துடன்

மருந்து காரரு வந்தாரா என்று கேட்டான்

'ஆமாம் வந்தாரு, பயலை கூட்டிக்கிட்டு போயிருக்காரு மருந்து கொடுத்து அனுப்புறேன்னு' பயப்பட ஒன்றுமில்லையாம். அப்படி ஏதாச்சும் வருத்தம் கூடவாயிருந்தா கார் புடிச்சி பதுளைக்கு அனுப்புங்க. நான் தொரை கிட்ட சொல்லி கார்க் காசு வாங்கித் தந்திடுரேன்னு சொன்னாரு. ஹ்ும் அவருக்கும் மேலு அக்கை அதுதான்' என்றாள் கிழவி.

'சரி. சரி, நான் ஓடிப் போய் சாராயம் ஒரு போத்தல் எடுத்து கிட்டு வந்துடுரேன், டேய் சம்புகா இங்க வா. அப்பாயிகிட்ட இருந்து கூட ஈட வேலை செய் – சல்லி அடிக்கப் போயிடாதே தெரிஞ்சுதா' என்றவன் ரோட டிலே வீரன் தலை தெரியவும் வேட்டியை மடித்துக் கொண்டு ஓடினான்–

தூரத்தில் பஸ் வருவது தெரிந்ததும் எல்லோரும் தயாராய் நிற்கிறார்கள். முதலில் இடம் பிடித்து உட்கார்ந்து ஓடி வந்து பஸ் நிற்கு முன்னரே அதைச் சுற்றி ஓடுகிறார்கள் அரைகுறை உயிருடன் கிடக்கும் புழுவையும் இழுத்துக் கொண்டு போகும் எறும்புக் கூட்டம் போல!

அந்த பஸ்ஸிலில் முதலில் ஏறிவிட முயற்சி செய்து பஸ் தூரப் போய் நின்றதால் கடைசியில் ஏறும்படியாக வந்து விட்டதே என்று அங்கலாய்த்துக் கொண்டான் சன்னாசி. வீரன் எப்படியோ முதலில் ஏறிவிட்டான்.

தேனீர் அருந்த சென்றிருந்த சாரதி திரும்பி வந்து பஸ்ஸில் ஏறும் போது இடமில்லாமல் முன்னே நின்று கொண்டிருந்த சன்னாசியின் வேட்டியை இடது கையால் ஸ்டைலாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தட்டி விட்டான், கூடியிருந்தோர் கொல்லெனச் சிரித்தனர். பண்பற்றதையும் நகைச்சுவையாக்கி பல் இளிக்கும் கூட்டம்.

கெட்டதை நாலு பேர் வெறுக்க நாற்பது பேர் வரவேற்கிறார்கள். பண்பு எது என்று தெரியாது படுகுழியில் விழுகிறார்கள். தனது புதிய நூலுக்கு கரு தேடிய வெளிநாட்டார் ஒருவர் இலங்கைக்கு வந்து போன போது 'சிலோன் இஸ் ஏ கல்சரல் டெசர்ட்' என்று எழுதினாராம்.

பண்பு என்பதை எவ்வளவு கவனமாக உச்சரிக்க வேண்டுமோ அதைவிடக் கவனமாக நடந்து கொள்ள வேண்டும்.

பதுளை நெருங்கு முன்பே பஸ் பாதி காலியாகி விட்டது. வீரனும் சன்னாசியும் வசதியாக உட்கார்ந்து கொண்டனர்.

மலைச் சரிவுகளில் மறைந்து கிடந்த பாதையை தேடிப் பிடித்துக்கொண்டு ஓடியது பஸ்.

மனோரம்மியமான மாலைக் காட்சிகள் அவன் மனதைத் தொடவில்லை. கல்லிலே தேன் சொட்டு விழுந்தது போல பச்சை பச்சையாக மலை, மரம், வயல் எல்லாம் தோன்றி மறைவது போல கள்ளுக் கடையும் அதன் வாசலில் பொரித்து வைக்கப் பட்டிருக்கும் பல வகை காரமான பொருட்களும் அவன் மனக் கண் முன் வந்து வந்து போய்க் கொண்டிருந்தன. கள்ளுக் கடைக்கு பேல் இரண்டு வளைவு. இன்னும் கால் மைல் இருக்கும். அவனுக்கு இருப்புக் கொள்ளவில்லை; முள்ளில் குந்தி இருப்பதைப் போல.

கள்ளுக் கடை வந்ததும் தட்டுத் தடுமாறி எழுந்து 'பெல்லை' அடித்தான் பஸ்ஸை நிறுத்த. ஆனால் பஸ் நிற்கவில்லை.

அங்கே 'ஹால்டிங் பிளேஸ்' இல்லாததால் சற்று தூரம் சென்று கீழே நிறுத்தினான்.

வீரனை தொடர்ந்து பின்னால் இறங்கிய சன்னாசி புட்போட் கம்பியைப் பிடித்துக் கொண்டு 'உன்னை அங்கே தானே நிற்பாட்டச் சொன்னேன். ஏன் இங்கே கொண்டாந்தே?' என்றான். கையில் ஓங்கி அடித்து பிடியை விடுவித்து தூர தள்ளி விட்டு 'ரைட்' என்றான் கண்டக்டர். பஸ் நகர்ந்தது.

காகம் போல பறந்து வந்தவர்கள் கொக்குப் போல கடையிலே வாடி நின்று பின் வாங்கி மனம் போல குடித்து விட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுமான் போல தாவிக் குதித்து விட்டு பேசுங்கிளியுடனே வெளியே வந்தார்கள்.

'அட வீரா! நல்ல படம் போகுதடா' என்றவன் 'நேர மார்ச்சே' என்றபடி தூரத்தில் நின்ற காரிடம் சென்றான்.

பூமியை விட்டுக் கிளம்பி புகை மண்டலத்தில் பறப்பது போன்று இருந்தது. மனைவி மக்கள் வீடு வாசல் எல்லாவற்றையும் மறந்து விட்டான். இப்ப உன் மனைவிடா' என்றாலும் யாரு என் மனைவி என்று கேட்பான். அவ்வளவு போதை.

காரிடம் சென்றவன் சுற்றி சுற்றி வந்தான். சும்மா தான் தான் நிற்கிறானுக்கும் என்று நினைத்த சாரதி நிலையை உணர்ந்து கொண்டு 'ஐயா எங்க போகனும்?' என்றான்.

'அங்க நின்னுகிட்டு இருந்தா போரது எப்படிய்யா, இங்க வா' என்றான் சன்னாசி.

அவன் பேசும் தோரணையிலிருந்து இவனிடம் கொஞ்சம் தட்டலாம் என்று எண்ணிக்கொண்டான் சாரதி.

'இந்த படம் எதுலே ஓடுது?' என்று மரத்தில் ஒட்டியிருந்ததைக் காட்டிக் கேட்டான்.

'ஒன் தலையிலே ஓடுது. ஏறு போவோம்'

'டேய் வந்து ஏறுடா! நீ இப்பதான் கடலை திங்கற' என்று வீரனையும் பின்னால் ஏற்றிக் கொண்டு தானும் ஏறினான்.

ஐந்து நிமிட பிரயாணம் கூட இல்லை. காரை நிறுத்தி நிறுத்தி 'சும்மா குடுங்க இரண்டு ரூபா பார்ப்போம்' என்றான்.

''டேய் ஓங்கப்பன் நாட்டுல வயலு வெட்றது எனக்குத் தெரியும். என்னைப் பிச்சைக்காரன்னு நினச்சியா ஒன்னாட்டம்? இந்தா ரெண்டரை ரூபா ஓடிரு' என்று காசை உள்ளே வீசிவிட்டு 'டேய் வா போவோம்' என்று அவனைக் கூட்டிக் கொண்டு தியேட்டர் உள்ளே போனான்.

எல்லா வகுப்புகளும் நிறைந்து விட்டன. என்ன செய்ய. இரண்டு பல்கனி டிக்கட்டுகளுடன் மாடிப் படியில் ஏறினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''டேய் எங்கிட்டும் போயிராதே! என் கூட வா படியை பார்த்து ஏறி வா. இந்த ட்ரைவர் பய எனக்குத் தெரிய ஓசி பீடிக்கு தொண்ணுந்துக்கிட்டு கிடப்பான். அஞ்சு தாரியா பத்து தாரியான்னு பிசுவுறன். பிச்சைக்காரபய' என்று கூறி காறித் துப்பினன்.

''டேய் அங்க எங்கடா போறே. இங்க வா காத்தாடி கிட்ட'' என்று அவனை தன் அருகில் அழைத்து உட்கார வைத்து விட்டு ''இன்னும் டயம் இருக்கு இடத்தைப் பார்த்துக்க கீழே போயிட்டு வாரேன்'' என்று போனவன் இரண்டு சிகரெட் பக்கட்டுடன் மேலே வந்தான்.

தியேட்டரே அதிர இவர்கள் சல சல என்று பேசுவதை எல்லோரும் திரும்பிப் பார்த்தார்கள்.

புளித்த கள்ளின் ஊசல் நாற்றம் முன்வரிசையில் இருந்தவர்களை இடம் பெயர்த்து தூர அனுப்பிவிட்டது.

சிகரெட்டை இருவரும் ஊதித் தள்ளினர்கள். அன்று பீடி பிடிப்பவனை தனக்கும் தரமாட்டாரு என்று உன்னிப்பாகப் பார்த்துக்கொண்டிருந்தவன் இன்று சிகரட் குடிக்கிறன்.

''நான் எவ்வளவு நேரமா குந்தியிருக்கேன், இன்னும் படம் போடலே டேய் படம் போடு' என்று உரத்துக் கத்தினன்! சத்தம் போடாதடா என்று அதட்டிய வீரனை ,நிப்பாட்டுறு என்று இவன் அடிக்க அவன் தடுக்க குழப்பமே வந்து விட்டது!

இருவருக்கும் செம்மையாக சாப்பாடு கொடுத்து வெளியே இழுத்து சென்றன் காவலாளி.

அவிழ்ந்து விழும் வேட்டியைக் கூட அள்ளிச் சொருக முடியாதபடி இரண்டு கைளாலும் பிடித்துக்கொண்டு காட்டாற்றில் விழுந்த இலைபோல முட்டி மோதிக் கொண்டு வெளியே வந்து விழுந்தனர்.

இரண்டாவது காட்சிக்காக காத்திருந்தவர்களுக்கு இதுவே ஒரு காட்சியாகப் போய்விட்டது.

இருவரையும் வெளியே தள்ளி கதவைச் சாத்தினன் காவலாளி. அவன் தள்ளிய வேகத்தில் வெளியே வந்து ஒரு கானிலே விழுந்தான் சன்னசி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயோ பாவம் என்று அவனை தூக்கி விட்டு மேலே எல்லாம் துடைக்கும் சாக்கில் அவன் ஜேப்பில் இருந்த நோட்டுக்களில் அகப்பட்டதை உருவிக் கொண்டு ஓடினன் ரௌடி.

'டேய் டேய்' என்று அவனைத் துரத்திக்கொண்டு ஓடினன் சன்னசி. இவனிடமா அவன் அகப்படுவான். அல்லது அவனைப் பிடிக்க இவனால் முடியுமா?

இனி விரட்டி விட இவனல் முடியுமா?

இனி விரட்டி வரமாட்டான் என்பதை அறிந்தவன் தூரத்தில் நின்று சிரிக்கிறன் ஒரு சலாம் போட்டுக் கொண்டே. எனக்கு தெரியும் ஓய் என்று காவியேறிய பற்கள் வெளியே தெரிய சிரித்தான். வாடிய கீரை தண்டு போல துவண்டு நடந்து வந்தவன் 'எங்கடா நம்ம வீரனைக் காணும்' என்று அவனைத் தேடினன்.

வீரனின் தம்பி ஒருவன் தியேட்டர் வாசலில்உள்ள தேநீர் கடையில் வேலை செய்கிறன். வீரன் அடிபட்டு விழுந்ததும் அவனைத் தூக்கித் துடைத்து விட்டான். சன்னசி வந்ததும் நீ தானடா எங்கண்ணனுக்கு அடி வாங்கி வச்ச - படவா என்று அவன் கன்னத்தில் ஓங்கி அறைந்தான்.

'டேய் நாங்க பிரண்ட்ஸ் அதை கேட்க நீ யாருடா?' கூறியது சன்னசி அல்ல வீரன். இருவரும் சேர்ந்து அவனை அடிச்க, இவன் தள்ள, அவன் தள்ள தியேட்டர் வாசலில் பெரிய கூட்டம் கூடி விட்டது.

நிலைமையை சமாளிக்க தனக்கு தெரிந்த ஒரு காரை பிடித்து இவர்களை கொண்டு போய் கட்டவளையில் விட்டுட்டு வா நான் காசு தாரேன்' என்றன் வீரனின் தம்பி.

'டேய் நீ என்னடா எனக்கு காசு குடுக்கிறது? நான் கொடுக்கிறேன். நீ நாளைக்கு சொல்லிக் காட்டுவே' என்று சன்னசி வீரனின் தோள்களில் கையை போட்டு 'கம் ஐசே காருக்கு போவோம்' என்றன்.

சிட்டென பறந்தான் கார்க்காரன். தூங்கி வழிந்தவனுக்கு நல்ல ஹயர் கிடைத்த மகிழ்ச்சி, மின்சார விளக்குகள் மின்மினிப் பூச்சாக கண் சிமிட்டி மறைய பதுளை டவுனை சுற்றிக் கொண்டு பறந்தது கார். மணிக் கூட்டில் எழுந்த இசைவெள்ளம் எட்டாவது முறையாக ஒலித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கம்' என்று அடங்கி விட்டது. கடை வீதிகளை கடந்து நகரின் எல்லைக்கு வந்த காரை மீண்டும் நகரத்தினுள்ளே திருப்பி விட்டது சாரதி அல்ல சன்னுசி.

'மேல் நாட்டு குடிவகைகள் இங்கே கிடைக்கும்' என்ற போர்ட்டின் கீழே காரை நிறுத்த சொன்னுன். 'அதுக்கு ஒரு போத்தல் சாராயம் வாங்கனும், மறந்து போச்சு, அதுக்குத்தானே வந்தேன்' படம் பார்க்கவா வந்தேன், என்ன மசிரு படம்? என்றவன் 'வாடா ஒரு கிளாஸ் போட்டுக்குறுவோம், ட்ரைவருன்னே நீங்களும் வாங்க என்று அவனையும் இழுத்துப் போனுன்.

இவர்களை ஓரளவு புரிந்து கொண்ட ட்ரைவர் தனக்குத் தெரிந்த விலையுயர்ந்த குடிவகைகளை ஓடர் செய்தான்.

காரமாக வறுத்த கோழி இறைச்சியை ஆஸ் ஊஸ் என்று கடித்துக் கொண்டு மூவரும் குடித்தனர் — கண்கள் கோவைப் பழம் போல் சிவக்கும் வரை. தூரத்தில் நின்ற சர்வர் பக்கம் திரும்பி சராயம் ஒரு போத்தல் கொண்டு வாங்க காயிதத்திலே சுத்தி என்று கூறியவன் 'அது என் பொஞ்சாதிக்கு' என்முன் ட்ரைவர் பக்கம் திரும்பி.

மதுக் கிண்ணத்துடன் இவன் விளையாடுகிருன் இங்கே. மரணத்துடன் அவள் போராடுகிருள் அங்கே.

'இன்ஞெரு நாளைக்கு போவோம்' என்று முன்பு வந்து விட்டு போன எமன் இன்று வந்திருப்பதை இவன் அறிவானு?

காய்ச்சலில் தொட்டது ஜன்னியில் போய்விட்டது' ஆரம்பத்திலேயே ஜன் தான் என்று கண்டுகொள்ள கிழவி டாக்டரா நர் ஸா?

கை விறைத்து கால் விறைத்து மெய்யெல்லாம் ஜில்லிட்ட பிறகுதான் "ஐயையோ ஓடியாங்களேன்" என்று கத்தினுள்.

வையமே உறங்கும் அந்த மைய இருளிலே ஐயையோ ஓடியாங்க'ன்னு யார் வருவா அதுவும் வரவேண்டியவனே எங்கோ போய் கிடக்கும் போது.

கிழவியின் குரலைத் தொடர்ந்து விழித்துக் கொண்ட ஓரிரு சிறுவர்கள் கத்தினுர்கள். என்னமோ ஏதோ என்று புரண்டு கொண்டிருந்தவர்கள் ஓடி வந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடி வந்தவர்கள் உள்ளே ஓடிப் பார்க்கிறார்கள். இஸ்தோப்பு கருங் கும்மென்று இருக்கிறது. உள்ளே மினுக்மினுக்கென்று எரியும் விடி விளக்கின் மங்கிய ஒளி கதவின் ஊடாக ஸ்தோப்பில் கோடிட்டிருந்தது.

சன்னாசி எங்கே கார் கொண்டாரப் போயிருக்கானோ என்று எல்லோரும் கேட்க கிழவிக்கு என்ன கூறுவது என்று தெரியாமல் 'நான் என்ன செய்வேன்' என்று ஒப்பாரி வைக்கிறாள் தலையில் அடித்துக் கொண்டு.

'கார் இப்ப வந்துரும் பயப்படாதே' என்று கூறிய ஒருவர் வெளியே வந்து பார்க்கிறார். கிழவி உள்ளே போவதும் வெளியே வருவதுமாக இருக்கிறாள்.

'வெத்தலையும் கொஞ்சம் தேனும் கொண்டா இப்ப சொல்றேன்' என்ற கிழவயின் பேச்சை மறைக்கும்படியாக பல குரல்கள் வெளியே எழுந்தன. அதோ காரு வருது' என்று;

'வா எல்லாம் ரோட்டுக்கு தூக்கிட்டு போவோம்' என்று எல்லோரும் உள்ளே பாய்கிறார்கள்!

கம்பளியுடன் அவளை சுற்றி தூக்க தலைப்பக்கம் குனிந்தவர்களில் ஒருவன் விட்ட மூச்சு விளக்கை அணைத்து விட்டது. வீடு ஒரு கணம் இருளில் மூழ்கியது.

'யார்ரா அவன் மூதேவி விளக்க நூத்தவன்' என்று எல்லோரும் இருட்டிலே கத்துகிறார்கள்.

'சரி சரி எல்லாம் ஆறித் துப்பிட்டு தூக்குங்க' என்றார் கிழவர், மூதேவி ஓடிடும் என்ற நம்பிக்கை. எல்லோரும் காறி 'தூ' என்று துப்பி விட்டு அவளை தூக்கினார்கள்.

சீ என் மூஞ்சிலே துப்பிட்ட என்று முண்டியடித்துக் கொண்டு ஒருவன் வெளியில் ஓடினான்.

'இருட்டிலே நான் துப்பின பக்கம் ஏன் வந்தே' என்றான் ஒருவன். ரோட்டில் கார் வந்து நின்றது.

வீட்டை விட்டு அவனை வெளியே கொண்டுவர முன்னரே கூட்டை விட்டு குருவி பறந்து விட்டது.

தூக்கிய இடத்திலே கொண்டு போய் வைக்கிறார்கள் அவளைப் பத்திரமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன சத்தம் என்று யோசித்தவனுச்கு 'ஐயையோ ஆயா என்று மூத்த மகன் வைத்த சத்தம் விளக்கம் கொடுத்தது. சம்மட்டியால் ஓங்கி தலையில் அடித்தது போல இருந்தது அவனுக்கு. உலகமே சுற்றியது. கையில் இருந்த போத்தலை ஓங்கி தரையில் அடித்தவன், 'கடவுளே நான் என்ன செய்வேன் — இனி நான் குடிக்கமாட்டேன், சத்தியமாகக் குடிக்கமாட்டேன்' என்று கத்தினுன். கத்திப் பலன்......!

கெட்ட பின்பு ஞானம் வந்திருக்கிறது. காலம் கற்பித்த பாடம் சாட்டை அடியாய் நெஞ்சில் விழுந்தது.

சன்ஞசியின் மனைவி மிக மிக துர்ப்பாக்கியசாலி. மரண வேதனை, பிரசவ வேதனை ஆகிய இரண்டு வேதனைகளையும் ஒரே நேரத்தில் சந்தித்திருக்கிருள். நூறு தேசிக்காய்கள் பிழிந்து தேய்த்தாலும் போகாத சூர் போய் விட்டது அவனுக்கு அவனைக் கொண்டு வந்த கார் சென்று மறைந்தது போல; சிலையாக நின்முன் சன்ஞசி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலவு காத்த கிளி

## சி. பன்னீர்செல்வம்

பிடில் வாசித்த நீரோவின் மன நிலை எனக்கிருக்குமானால்...

தவறு செய்யாத போதே செய்து விட்டதாக எண்ணி மனங்குமைகின்றது. அதனைப் போக்கக் கொள்ளவும் வழி தெரியவில்லை. இதனை எண்ணுகிறபோது துன்பத்தின் சுவடு படியாத வாழ்க்கையே கிடையாதென்பது நிதர்சனமாகத் தெரிகிறது.. தெரிந்து கொள்வதனால் மட்டும் துன்பத்துக்கு கோடி காட்டி விட முடியுமா?

குட்டியப்பன் கங்காணியார் விறகுக் கட்டையொன்றை வெட்டிக் கொண்டிருக்கின்றார்.. மெல்ல செல்கின்றேன். கூப்பிடுவதற்கு கூட நடுக்கமாக இருக்கிறது.

'கங்காணியாரே!'

முடிச்சு விழுந்த அந்தக் கட்டை, அவரது சக்திக்கு பணிய மறுத்து, சறுக்கி வந்து என் காலிலடிக்கின்றது.. என் சத்தம் கேட்டதும் திரும்பிப் பார்த்து பதறி ஓடி வருகின்றார்..

'கட்டை பலமாக அடிச்சிரிச்சாய்யா..? காயம் ஏதும் பட்டிரிச்சா..?'

'லேசாத்தான்..' என்று சமாளித்துக் கொள்கின்றேன்' அவரது பெயருக்கு இந்தியாவிலிருந்து வந்த கடிதத்தை நீட்டுகின்றேன். ஒரு விநாடி அமைதியாக நிற்கிறார்.. பிறகு சொல்கிறார். எனக்கிட்ட கொடுக்கிறியே நீயே படிச்சுக் காட்டுப்பா..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு துன்பமாக இருக்கிறது. . அவர் இருக்கின்ற மன நிலையில் இந்தக் கடிதம். . பிரித்து வாசிக்கிறேன். .

பேரன்பின் மாமா அவர்கட்கு,

வணக்கம் கோடி இதுவரை மூன்று கடிதங்கள் எழுதி விட்டேன். ஆனால் இந்த விநாடிவரை ஒரு கடிதத்துக்குக்கூட பதில் வர வில்லை. காரணம் என்ன மாமா?

நான்கு வருசங்கள் முடியப் போகின்றன. இன்னும் நீங்கள் இந்தியா வந்து சேரவில்லை. இன்னும் பாஸ்போர்ட் கிடைக்க வில்லையா? விரைவில் வந்து விட முயலுங்கள். . முடியாவிட்டால் விமானத்திலாவது இலங்கை வந்து நான் வள்ளியைக் கலியாணம் பண்ணிக்கொண்டு போகிறேன். வள்ளி நலமா? இத்துடன் எனது போட்டாவை அனுப்பி வைத்திருக்கின்றேன். எல்லோருக்கும் காட்டுங்கள், உங்கள் வரவில்தான் என் முடிவு தங்கியிருக்கின்றது. கடனுக்கு தொல்லை தருகின்றார் கள். விரைவில் வந்து சேருங்கள். பிறபின்.

இப்படிக்கு,
கா. அண்ணாமலை.

கடிதத்தைப் படித்து விட்டு அவர் முகத்தைப் பார்க்கின்றேன். . அந்த முதியவரின் கண்களிலிருந்து முதன் முதலாக கண்ணீர் வடிவதைக் காணுகின்றேன், அவர் முன் நிற்கவே நாணுகின்றேன். பித்து பிடித்தவர் போல் கீழே உட்கார்ந்து விசும்புகின்றார். . கடிதத்தை மெல்ல வைத்து விட்டு நகருகின்றேன். . இலவு காத்த கிளியின் நிலைதானா அவருக்கு. . ?

விறகு கட்டை ஒரு புறமும் கோடரி ஒரு புறமும் கிடக்கின்றன.

★ — ★

எங்கோ பிறக்கின்றோம்; எங்கோ இணைகின்றோம்; எப்படியெப்படியெல்லாம் வாழ்கின்றோம்.

இந்தியாவின் எங்கோ ஒரு மூலையில் பிறந்து இலங்கையின் ஏதோ ஒரு மூலையில் வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருப்பவர் அவர். அவரது வாழ்க்கை வரலாற்றை கதை கதையாகச் சொல்வார். என்னிடம் கூறியுள்ள கதைகள் தான் எத்தனை யெத்தனை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளைக்காரன் காலத்தில் இந்தியாவிலிருந்து ஆள் கூட்டி வந்தவர் குட்டியப்பன் கங்காணியார். அன்றிலிருந்து இன்றுவரை கங்காணியார் என்ற பெயரும் அவருடனேயே இருந்து வருகின்றது. இந்தத் தோட்டத்து பழுத்த பழம் அவர். வயசைக் கணித்துப் பார்த்தால் ஏறக்குறைய எழுபத்தைந்து இருக்கும். ஆனால் சுறுசுறுப்புக்கு என்றால் முப்பது வயசுகூட இருக்காது. அவர் சோம்பேறித்தனமாக இருந்து நான் கண்டதில்லை. அவர் வாழ்க்கையில் சுறுசுறுப்பையும், உழைப்பையும் தான் பார்த்திருக்கின்றேன்.

சின்ன வயசிலேயே வள்ளியின் தாய்—அவரது மனைவி பிரிந்து போய்விட்டாள். வள்ளியை அன்பிலே குளிப்பாட்டி வளர்த்தார். வள்ளி தோட்டத்துப் பள்ளியில் மூன்றும் வகுப்புவரை படித்திருந்தாள். அந்த மூன்றும் வகுப்புப் படிப்பு உருப்படியாக ஒரு கடிதம் எழுதக்கூட பயன்படவில்லை. அவருக்கு வருங்கடிதங்களை வாசிப்பதும், பதில் எழுதுவதும் நான்தான்!

அவர் தொடர்ந்து தனது குட்டிக் கடையை நடத்தி வந்தார். பீடி, சுருட்டு, வெற்றிலை பாக்குத் தட்டுப்பட்டால் அவர் வீட்டில் கிடைக்கும். இந்த வ்யாபாரத்தில் அவருக்கு வருமானம் வரத்தான் செய்தது.

அவர் சிக்கனப் பேர்வழியாதலால் கொஞ்சம் பணமும் சேமித்து வைத்திருந்தார். அந்தப் பணத்தோடு இந்தியா போய் சேர்ந்து விட வேண்டுமென்பது அவரது நெடுநாளைய திட்டம். இந்தியாவிலிருக்கும் அவரது தங்கை மகன் அண்ணாமலை வள்ளியை மணந்து கொள்வதாக முடிவு. அண்ணாமலையின் கடன் ஆயிரம் ரூபாவையும் குட்டியப்பன் கங்காணியார் தீர்த்து விடுவதாக ஒத்துக் கொண்டிருந்தார். அவரது மருமகன் தானே. . எத்தனையோ வ்ருஷங்கள் கண்டிக்கும் தோட்டத்துக்குமாக நடந்து போன மாசம் தான் அவருக்குப் பாஸ்போர்ட் கிடைத்தது. அடுத்த மாதத்தில் இந்தயப் பயணத்தை வைத்துக் கொள்வதாக முடிவு செய்திருந்தார். . ஆனால் ஒரு வாரத்துக்கு முன்னர். .

அவர் திட்டங்களில் பேரிடி விழுந்து சிதைந்து விட்டது. அவரோடு முன்போல கதைக்க முடியாத இக்கட்டான சூழ்நிலையிலிருந்து தவிக்கின்றேன். . ஒரு வாரமாக என்னிடங்கூட அவர் கதைக்கவில்லையே. . பத்து வருடங்களில் அவரிடம் நான் கண்டிராத சோகம் என்னையும் வாட்டுகின்றது. .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆம், எத்தனை யெத்தனை பாசத்தோடு, எத்தனை யெத்தனை திட்டங்களோடு வள்ளியை வளர்த்தாரோ அந்த வள்ளி இன்னொருவனோடு ஓடிப் போய் விட்டாள்.. சாதாரணப் பேரிடியா இது? இதோ இந்தியாவிலிருந்து வேறு கடிதம் வந்திருக்கிறது. எப்படி பதில் எழுதுவது? அதுவும் நான் நெருங்கிப் பழகியவனே இந்த நிகழ்ச்சிக்கு காரணமானவன் என்றால்.. என்னால் எப்படி துணிந்து அவர் முன் பேச முடியும்? அவரது புலம்பல் எதிர் வீட்டிலிருக்கும் எனக்குத் தெளிவாகக் கேட்கிறது..

'முருகா! என்ன தான் பண்ணுவேன்? ஒன்னைய நம்பினேனே.. இப்ப எப்பிடி போய் அவன் மொகத்துல முழிப்பேன்? உன் மேல குத்தமில்லே எல்லாம் என் விதி.. நான் செஞ்ச கர்மம்..'

தெய்வத்தை நப்புகிறோம். நினைத்து நடந்தால் தெய்வத்தின் அருள் என்றும் நடக்கா விட்டால் விதியென்றும் கற்பித்துக் கொள்ளுகின்றோம். எப்படியும் தெய்வம் தப்பித்துக் கொள்ளுகிறது.

★ — ★

தோட்டமே அவருக்கு அனுதாபம் தெரிவித்து ஓடிப் போன இருவரையும் வண்டிய மட்டும் சபிக்கிறது.. அதனால் அதனை மாற்றி விட முடியுமா? அவர் துன்பத்தை குறைத்து விட முடியுமா? ஒரு சிலர் என்னையும் சேர்த்துத் திட்டுகின்றார்கள்.. ஆனால் கங்காணி யாரோ.. தினமும் என்னிடம் வந்து உலக விஷயங்களைப் பற்றி கதைப்பவர் இந்த ஒருவாரமாக வருவதுமில்லை.. கதைப்பதுமில்லை. அவரும் என்னைச் சந்தேகிக்கின்றாரோவென ஐயுற்ற போது அவர் என்னை அழைக்கிறார்.. போகின்றேன். அவரது குரல்வரட்சியாக ஒலிக்கிறது.

'அந்திக்கி எங்கிட்டும் போயிடதயா.. இந்தியாவுக்கு பதில் எழுதிடணும்..'

ரிசங்க....

என் மனம் அமைதி பெறுகிறது, வள்ளி ஓடிப்போனமைக்கு நானும் உடந்தையென்று அவர் நினைக்காததே போதும் எனக்கு.. உண்மை அது தான் என்பதை உலகம் எப்போது உணரும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவில் கடிதம் எழுத செல்லுகின்றேன்; வழக்கம் போல சுகசேமங்களை எழுதி விட்டு நிமிர்கின்றேன்.. அவர் கூறும் சொற்கள்.. ஓரளவு புரிகிறது.. எனக்கு கண்கலங்குகின்றது..

'வள்ளிய பாம்பு கடிச்சிரிச்சி.. ஆஸ்பத்திரியில வச்சுருக்கோம்... பொழைக்கிறது நிச்சயமில்லை..

அவர் குனிந்து நிலத்தைப் பார்த்துக் கொண்டே இருக்கின்றார்... எழுதி விட்டு அவரைப் பார்க்கின்றேன். அவர் என்னைப் பார்க்காமலேயே சொல்லுகின்றார்..

'கடுதாசிய அதோடு முடிச்சிடு.. நாளாக்கி கடுதாசியை போட்டு விட்டு நாளாண்ணைக்கு வள்ளி செத்துப் போச்சுண்ணு அண்ணமலைக்குத் தந்தி அடிச்சிடு.. சல்லி தர்றேன்..'

'கங்காணியாரே..! என்று இழுக்கிறேன்;

அவர் சொல்லுகிறார்.

'சொன்ன மாதிரியே செஞ்சிடுப்பா.. நான் கடசியா செய்யக்கூடியது இது ஒண்ணுதான்.. நீ வருத்தப்படுறது எனக்குத் தெரியும்.. நீ நல்லவன்.. உன் கூட்டாளி செஞ்சதுக்கு ஒன்னைய கொறை சொல்ல மாட்டேன்.. என் விதி.. நேராவே சொல்லியிருந்தா சந்தோசமா முடிச்சு வச்சிருப்பேன்... இனி என்ன பண்ண.. எல்லாம் போச்சு..

உண்மை உணர்ந்த நான் மௌனமாக கண்ணீர் வடிக்கின்றேன். அவர் வேதனை தீரகூடியதா? எனக்கேன் இந்த சோதனை...

அந்த வடுவை அவரது காலத்தில் துடைத்து விடவே முடியாது; அதுவும் தோட்டப் பகுதிகளிலென்றால்.. இதைப் பற்றிய பேச்சு தான் ஒவ்வொரு வீட்டிலும் இருக்கும்;

இப்பொதெல்லாம் அவர் வெளியில் செல்வது கிடையாது பிறரோடு கதைப்பதும் குறைவு, வீட்டுக்குள்ளேயே சிறகொடிந்த பறவை போலக் கிடக்கின்றார். தோட்டத்தவர்களின் அனுதாப விசாரணைகளுக்கு அவரது மௌனமே பதிலளிக்கின்றது.. சிலவேளைகளில் வேதனையால் வெளி வரும் 'வள்ளி.. வள்ளி..' என்ற முனகலைக் கேட்டிருக்கிறேன்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலையில் அவரது வீட்டிற்குச் செல்கின்றேன். அவர் கடிதங்களை தீ வைத்துக் கொளுத்திக் கொண்டிருக்கின்றார். வெறும் கடிதங்கள் தானேவென்று கூர்ந்து கவனித்தபோது.. அது வெறுங் கடதாசிகளல்ல.. நான்கு வருடங்களாகப் பாடு பட்டு, பணத்தை செலவழித்து, கிடைத்த பாஸ்போர்ட் தான் அது.. மண்ணெண்ணையை அதன் மீது ஊற்றிக்கொண்டே கூறுகிறார்..' இந்தியாவில் போய் ஒருத்தன் கையில் ஒப்படைச் சிட்டு, நிம்மதியா அந்த மண்ணுல கட்டையைப் போட லாமுனு நெனச்சேன்.. எல்லாம் பாழாப் போச்சு..

இனி எதுக்கு பாஸ்போர்ட்..? கப்பல்ல போரதுக்கா..? எனக்கு குடுத்து வச்சது அம்புட்டுத்தான்..? நீ ஒண்ணு செய் வியா தம்பீ.. ஒன்னைய என் மகனாகத்தான் நெனச்சேன்— இப்பவும் நெனைக்கிறேன்.. எனக்கு மண்ணள்ளிப் போட மறந் திடாதே.. எனக்கு எல்லா கடமையும் செய்வியா? சொல்லு..'

என் கையைப் பிடித்துக் கொள்கிறார். நான் கண்ணீரோடு தலையசைத்துப் பதிலளிக்கின்றேன்.. சரியென்று.

'நீ நல்லவன்.. நல்லாருப்பே..'

அவர் எரிந்து போனக் காகிதங்களை குச்சியால் கிளறிக் கொண்டிருக்கிறார்.. மௌனத்தோடு வெளியே வருகின் றேன்.

தீபாவளி வந்து ஒரு மாதமாகி விட்டது. பொங்கல் வரு வதற்கு இன்னும் ஒரு மாதமிருக்கின்றது.

இந்த இரண்டுக்குமிடையில் எத்தனையோ அசுர மாற்றங் கள் ஏற்பட்டு விட்டன. வியப்பாகவும் வெறுப்பாகவும் இருக் கிறது. வள்ளி இப்படி போகக்கூடுமென்று யார் கண்டார்கள்? நல்லபிள்ளையாக இருந்தவள்தான்; தந்தையிடம் ஒரு வார்த் தை கேட்டிருக்கக் கூடாதா?

வள்ளி போய்விட்டதற்கும் குட்டியப்பன் கங்காணியாரின் துன்ப நிலைக்கும் நான் சிறிதுங் காரணமானவனல்லதான். என்றாலும் என் பேனா முனையினால் எத்தனையோ தடவை அண்ணமலை—வள்ளி திருமணத்தைப் பற்றி எழுதி இருக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றேன். தோட்ட முழுவதுமே தெரிந்த விஷயம் இது. இதற்கு மேலாக அவர் என்னிடம் காட்டிய அன்பு. . என்னிடம் வைத்திருந்த படித்தவனென்ற மரியாதை. . இவையெல்லாம் இன்று என்னை குழப்புகின்றன.

அதோ — இறுதி வாயிலில் கங்காணியார் நிற்கிறார். . இனி இந்த உலகைத் திரும்பிப் பார்க்க மாட்டார். . ஊரரரின் அனுதாபம் எதுவும் இனி அவர் செவியைத் தொடாது. வள்ளியை நினைத்து கண் கலங்க மாட்டார்.

அதோ தபாலும் வருகின்றது இந்தியாவிலிருந்து. நான் வாசிப்பதைக் கேட்க அவர் இல்லை. என்றாலும் வாசிக்க வேண்டிய கடமை என்னுடையது,

மாமா'

தந்தி கிடைத்த பின் என் மூளையே கலங்கி விட்டது. என்னால் எழுதக் கூட முடியவில்லை! வள்ளி இறந்து விட்டதா? என் மனக்கோட்டைகள் இடிந்து, குட்டிச்சுவராகிப் போய் விட்டன.

கடிதத்தை வாசித்துக் கொண்டிருக்கையில் பெண்களின் அழுகுரல் கிளம்புகின்றது, வெளியே முரசொலி கேட்கிறது. . நான் கடிதத்தை மூடி விட்டு வெளியே வருகின்றேன். யாரோ என்னை தொடர்வது போலத் தெரிகிறது. .

ஆமாம், கடமை—அவரது இறுதி வேண்டுகோள் என்னைத் தொடர்ந்து வருகின்றது. நான் அதைப் புறகணித்து விட முடியாது! ஆமாம் புறக்கணித்து விட முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிஞ்சு உலகம்

## மாத்தளை வடிவேலன்

எனக்கு பள்ளிக்கூடம் போக விருப்பந்தான். அப்ப ஏன் போகலையாமுன்னு கேட்கிறீங்களா? விருப்பம் மட்டும் இருந்தா பள்ளிக்கூடம் போக முடியுமா? நான் பள்ளிக்கூடம் போயிட்டா அம்பிப் பயலை யாரு பாத்துக்கிறதாம்? மலைக்கு தேத்தண்ணி கொண்டு போறது யாராம், கேக்கிறேன்!

"நாலெழுத்துக் கத்துக்கிட்டா தேவலை ஆம்பளபுள்ள... நாளைக்குப் பின்ன ஒருத்தன் முன்னுக்கு வெரல நீட்டிக் கிட்டு நின்னா நல்லாவா இருக்கும் எப்ப பார்த்தாலும் அம்மா இப்புடியே தான் சொல்லுது, எந்த நேரமும் இந்த கதை தான் பாட்டா பாடுது, நான் ஒன்னும் அப்படிமக்கு இல்ல. இந்தஅம்மா தான் மக்கு. எனக்கு நல்லா பேர் எழுத தெரியும் என் பேரு அம்மா பேரு அம்பிபய பெரெல்லாம் கூட எழுதியிருவேனே? லயத்துக் கோடியில 'பந்தம் பிடிக்காதே'ன்னு பெருசா எழுதி சாணியால அழிச்சி மறைச்சிருக்கு இல்லையா... அதற்கு கீழே ஒரு ஓரத்தில்ல 'கோழி(ள்) சொல்லாதேன்னு' சிறுசா கரிக்கட்டியால எழுதி வச்சியிருக்கது யாராம்... ஓ... அது நான் தான்!

எழுதமட்டுமா! வாசிக்கவும் தெரியும். தமிழ் மலர் கடைசி பக்கத்தில உள்ள ஆத்திசூடி, கொன்றைவேந்தன் எல்லாம் கூட தண்ணி பாடம் இப்ப கேட்டாலும் கட கடன்னு சொல்லுவேன்.

மேட்டு லயத்தில இருந்து ராசு வந்தான். சிகப்பு வார் கட்டின கெற்றப்போல் வச்சி இருந்தான். 'வாடா சுப்பு, குருவி அடிக்கப் போவோம்'ன்னு கூப்பிட்டான். போ... நான் வரமாட்டேன்னு சொல்லிப்புட்டேன். 'இன்னைக்கு மட்டும் வாடா... வாடா' ன்னு கூப்பிட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயோ! நான் போகவே மாட்டேன். அம்மா கண்டால் தோலே உரிச்சுப்போடும்.

ச்சீ... இந்த ராசு பெரிய மோசம், பள்ளிக்கூடத்திற்கு போகாமல் ஒழிஞ்சு திரியுறுன். ஆனுல் கெற்றப்போல் மட்டும் நல்லா லெக்கு வச்சு அடிப்பான். பெரிய ஆளாக வந்தோடனை தோக்க எடுத்துக்கிட்டு ஸ்டோருக்கு காவல் பார்க்கப் போவாணும்! பெருசா... கறுப்பா மீசையில்லாம எப்படி காவல் வேலே பார்க்கிறதாம்! இவன் இப்படித் தான் எப்ப பார்த்தாலும் பொய் பொய்யாச் சொல்வான்.

ராசுவுக்கு அம்மா... அப்பா... அண்ணு அக்கா, தம்பி தங்கச்சி எல்லாரும் இருக்காங்க. என் கூடப் பிறந்தவன் தம்பி மட்டுந்தான். அவன் பேரு தம்பிப்பிள்ளை. நான் அவனை அம்பி பயன்னுதான் கூப்பிடுவேன். ராசுவைப் போல எனக்கும் வீட்டு வேலேக்கு ஆள் இருந்தா நான் தினமும் பள்ளிக்கூடம் போவேன்.

ஒழுங்கா பள்ளிக்கூடம் போய் இருந்தால் இந்த வருஷம் நாலாம் கிளாசுக்கு பாஸ் பண்ணி இருப்பேன். கோபால் இப்ப டவுண் இஸ்கூல்ல நாலாம் கிளாஸ்தான் படிக்கிறுன். போன வருஷம் நானும் அவனும் மூணும் கிளாஸ்தான் படிச்சோம்.

கோபாலுவுங்க அப்பா கங்காணி வேல பாக்குது. நானும் அம்மாகிட்ட கோபாலுக்கு மாதிரி எனக்கும்தொப்பி' சப்பாத்தெல்லாம் வாங்கித் தாம்மான்னு கேட்டேன். 'இப்ப சல்லி இல் சம்பளத்திற்கு வாங்கித்தாரேன்னு சொல்லிச்சி சம்பளத்திற்கு கேட்டா 'அடுத்த மாசம் பாப்போம்னு சொல்லும்.

எனக்கு அப்பா இல்ல. இஸ்டோர் அடுப்புக்கு சவுக்கு மரம் வெட்டுற போது, வாதுஅடிச்சி அப்பா செத்துப் போச்சு, அப்பா இருந்தால் எனக்கும் சப்பாத்து வாங்கித்தாப்பான்னு கேப்பேன்.

டவுண் பள்ளிக்கூடத்தில புள்ளேகளுக்கு பால் இச்சுகோத்து எல்லாம் கொடுக்கிறுங்களாம். கோபாலு தான் சொன்னுன். எங்க தோட்டத்து பள்ளிக்கூடத்திலேயும் கொடுத்தா என்னவாம். எங்களுக்கும் கொடுத்தால் நான் பாலேக் குடிச்சிட்டு இசுக்கோத்த அம்பிபயலுக்கு கொண்டாந்து கொடுத்திடுவேன்.

அம்பிப்பய தொட்டியில இருந்துக்கிட்டு அழுறுன். நான் போய் அவனுக்கு மல்லி தண்ணியை பருக்கி விட்டுட்டு தூங்க வைக்கனும், இல்லாட்டி அம்மா வந்து ஏன்டா தம்பி அழுது இருக்கான்... தம்பியை பார்த்துக்கிட்டு இருக்காம லயஞ் சுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தப் போனியா...' இனிமே போவியா......? போவியான்னு அடிக்கும். மெதுவாத்தான் அடிக்கும். அப்புறம் தேத்தண்ணி ஊத்தி கொடுக்கும். கருப்பட்டியும் கொடுக்கும். நான் கடிச்சிக்கிட்டே குடிப்பேன்.

ஆராரோ ஆரீரரோ ஆராரோ ஆரீரரோ
ஆரடிச்சி நீயழுர......

இந்த அம்பிபய பெரிய மோசம். எப்ப பார்த்தாலும் வீல்...... வீல்ன்னு கத்துறன். அதுதான் அம்மா கிட்ட, 'தகப்பன தின்னி பயலே எந்த நேரமும் கரையாதடா'ன்னு நல்லா ஏச்சு வாங்குறன். இரு...... இரு...... ஒனக்கு ஒரு நல்ல பாட்டா படிக்கிறேன்.

விவசாயி...... விவசாயி விவசாயி......
கடவுள் என்னும் முதலாளி......

தொட்டியை ஆட்டிவிடிற போது மேலே முகட்டில இருந்து ஒட்டறை ஒட்டறையா கொட்டுது. வீட்டு உள்ளுக்கு தொட்டியை மாத்திக் கட்டுறதுக்கு வேற இடம் இல்ல. அந்த பக்கம் அடுப்பு, விறகு அட்டாலெல்லாம் இருக்கு. அங்க இருந்து புகை வரும்.

அப்பா...... ஒரு மாதிரியா அம்பிபய தூங்கிட்டான். அவன் முழிச்சி எழும்புறதுக்கு முந்தி ஓடி ஒரு வாளி தண்ணி கொண்டாந்து வச்சிடனும். அப்புறம் மலைக்கு சோறு கட்டி கொடுத்திட்டு மிலாறுக்குப் போற பொடியன்களோட போயிட்டு ஒரு கட்டு மிலாறு கொண்டாந்து வச்சிட்டா, என் வேலை எல்லாம் முடிஞ்சிடும்.

...... ஓல்ரைட்.

வெள்ளிக்கிழமை அந்திக்கு ஸ்டோர்ல மணி அடிச்சாங்க. நான் ராமு, ராசு எல்லோரும் அரிசி புடிக்கப் போனோம். 'நீ இனிமே பள்ளிக்கூடத்திற்கு வரமாட்டியா'ன்னு ராமுகேட்டான். நான் அம்பிபய பெரிய ஆளாக வந்தோடன வருவேன்னு சொன்னேன்.

ராமு சொன்னன், 'உங்களுக் கெல்லாம் சேரு நல்ல வேலை செய்யப் போராராம்'

'என்ன செய்யப் போராரு........?'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அது என்னமோ..... எனக்குத் தெரியாது அடுத்த வாரம் சோதனை இருக்காம். நாளைக்கு கட்டாயம் வராத புள்ளைகளை யெல்லாம் பள்ளிக்கூட்டத்திற்கு கூட்டிக்கிட்டு வரச் சொன்னாரு"

"வேற ஒன்னும் சொல்லலியா?"

"வேற ஒன்னும் எங்ககிட்ட சொல்லல்ல. டீச்சர் கிட்ட தான் மெதுவா சொன்னாரு"

"என்ன......?"

"மகள்! வரவு ரொம்ப விழுந்துப் போச்சி. இன்ஸ்பெக்டர் வேறு அடுத்த வாரம் சோதனைக்கு வார வராம். இதை இப்ப டியே விட்டு வைச்சமென்றால் ஒரு ஆள் வீட்டதான் போக வேண்டி வரும். புதுக்க வந்த சேர்க்குலரை பார்த்தா பயமா இருக்கு"

அரிசிக் காம்பராவை சுத்தி புள்ளைகலெல்லாம் கூடைப் பெட்டி, குட்டிச்சாக்கு எல்லாத்தையும் வச்சிக்கிட்டு, நிற்குதுக, ஐயா பேரு வாசிக்க வாசிக்க, ஒரு ஆளு அளந்து போடுவான். அரிசி மூட்டை மாவு மூட்டையெல்லாம் சுவத் தோரமா அடுக்கி இருக்கும்; திண்ணையில பள்ளிக்கூடத்தில உள்ள போட் பலகை மாதிரி ஒரு பலகை சுவத்தில தொங்க வச்சியிருக்காங்க. அதுல அரிசி மாசியின்னு எல்லாம் எழுதியிருக்கு.

ராசு கூடைப் பெட்டியை என் கிட்ட கொடுத்திட்டு பங் களா மரத்திற்கு மாங்காய் பொறக்க போயிட்டான். நானும் ராமுவும் ஜன்னல் கண்ணுடியில எட்டிப் பார்த்தோம். உள் ளுக்கு ஐயாவுக்கு பக்கத்தில சேரும் உக்கார்ந்துக்கிட்டு, கையை ஆட்டி ஆட்டி என்னமோவெல்லாம் சொல்லிக்கிட்டு இருக்கிறாரு. ஒரே...... பயம் ஜன்னலை விட்டு மெதுவா நகர்ந்திட்டேன்.

அரிசி புடிச்சிக் கிட்டு வீட்டுக்கு போற புள்ளைகளெல்லாம் கண்ண துடைச்சிக் கிட்டே போவுதுக. வழமையா அரிசி போடுற பிச்சைக்காரங்களுக்குக் கூட அரிசி போடல்ல. என்ன? என்ன ன்னு கையாலசாட கேட்டா ஒன்னுமே பதில் சொல்லுதுக இல்லே. அரிசி போடுற எடத்தில சத்தம் போட்டு கதைக்க ஏலாது. சத்தம் போட்டா வெறட்டு வாங்க.

"ரெண்டாவது மாரியாய் நாலு கொத்து"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா பேரு வாசிச்சோடன நான் கூடைப்பெட்டியை எடுத்துக் கிட்டு உள்ளுக்குப் போறேன். ஐயா என்னமோ கேக்கிற மாதிரி சேர் முகத்தை பாக்கிருரு. சேர் கையில வச்சியிருந்த காகிதத் துண்டை வாசிச்சுப் பார்த்துபுட்டு 'பையன் எப்சண்டு'ன்னு சொல்ருரு.

ஐயா கால் சட்டை சேப்புல கையை விட்டு கைலேஞ்ச எடுத்து கண்ணுடியையும், முகத்தையும் தொடச்சிக்கிட்டே "உங்களுக்கெல்லாம் ஒழுங்கா இஸ்கூலுக்கு போய் படிக்க ஏலாதா? தெரியாமலா வெள்ளக்காரன் இஸ்கூல்கட்டிப் போட்டிருக்கான். நாளைக்கு பேர் பதிஞ்சி வேலைக்குப் போனியின்னு எப்புடிடா கொழுந்து ருத்தல் கணக்கு வச்சிக்கிற போற? அட...... இத்தனை நாள் வேல செஞ்சிருக்கோமுன்னு பேரு கணக்கு சரி ஞாபகம் வச்சிக்கிற வேண்டாமா?"

எனக்கு பயமா...... இருக்கு. ஒன்னுமே பதில் பேசல்ல. தலைய குனிஞ்சிக்கிட்டு கால் பெரு விரல் நகத்தால சிமிந்தியை தேய்ச்சிகிட்டு இருக்கிறேன்.

"பாருங்கோ ஐயா இதிலிருக்கின்ற வில்லங்கத்தை ஆசிரிய தொழில் என்றால் மகத்தானது அல்லோ! நான் சேவை செய்ய வேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காகத்தான், இந்த துறையை தெரிஞ்சன் பாருங்கோ! என்னிலும் படிப்புக் குறைஞ்ச என்ர ஒன்றுவிட்ட தமையன் பிஸ்னஸ்ல இறங்கி இன்றைக்கு லட்ச லட்சமாய் சம்பாதிச்சுப் போட்டான். எனக்கும் அப்படி செய்திருக்க இயலாதோ. இப்பவும் பாருங்கோ எவன் படிச்சாலென்ன படிக்கா விட்டாலென்ன என்று சம்பளத்தை வாங்கிக் கொண்டு மற்ற வாத்திமாரைப் போல வாத்தி திறீய ஏலாதே......"

"நீங்க கவலைப்படாதீங்க மாஸ்டர்' இப்ப அடிச்சியிருக்க துரும்பு அருமையானது. நாளைக்கு பள்ளிக்கூடத்திற்கு போய் பாருங்களே, நீங்கள் மலைச்சு போவீங்க, சரி கருப்பையா கூடப் பெட்டிக்கு ரெண்டு போடு"

ஐயா சொன்னோடன அரிசி போடுற ஆளு ரெண்டு கொத்து அளந்து போட்டிட்டு சொல்ருன். "இஸ்கூலுக்குப் போவாத புள்ளைகளுக்கெல்லாம் அரிசி நிப்பாட்டி இருக்கு, இனி இஸ்கூலுக்கு போனுதான் அரிசி கெடைக்கும்.

நான் வீட்டுக்குப் போய் அம்மாகிட்ட சொன்னேன். அம்மா அழுதிச்சி. இந்த அம்மா பெரிய மோசம், எப்ப பார்த்தாலும் அழுகைதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்ப நான் பள்ளிக்கூடத்திற்கு போகவா அம்மா......

அம்மா ஒன்னுமே சொல்லல்ல. அடுத்தநாள் வேலே விட்டு வருகிற நேரம் - அஞ்சாறு வாகைக்கம்பை பலகை மாதிரி சீவி எடுத்துக்கிட்டு வந்திச்சி, அப்புறம் இஸ்தோப்புல நாலு கட்ட கம்பநட்டு பலகை மாதிரி சீவிக்கிட்டு வந்த வாகைக் கம்ப சுத்திவர வச்சி அடிச்சிருச்சி இப்ப பாத்தா, கூடுமாதிரி இருக்கு. ரெண்டாம் புத்தகத்தில புலியும் பிராமணனும் பாடத்தில புலி யின் சொல்லே நம்பி பிராமணன் திறந்து விட்டானே கூடு அந்த மாதிரியே இருக்கு.

நான் மெதுவா கூட்டு உள்ளுக்கு போனேன். கால் லேசா தட்டுப் பட்டு படக்கின்னு சத்தம் கேட்டிருச்சி.

"நீ அதுல வெளேயாடி ஒடைச்சுப்புடாத. அது ஒனக்கு இல்ல. அம்பிபயலுக்குத்தான். காலேயில தம்பியை உள்ளுக்கு விட்டுட்டு பள்ளிக்கூடத்திற்குப் போ......

அம்மா சொன்னேடன நான் மெதுவா தாண்டி வந்துட்டேன். ஆனல் அம்பிபயலுக்குன தாண்டி வரஏலாது. நுழைஞ்சும் வர ஏலாது.

காலேயில கூட்டுள்ளுக்கு சாக்க விரிச்சி அம்பிப்பலே படுக்க வச்சிட்டு, பள்ளிக்கூடத்திற்குப் போனேன். மேகணக்கு, டொப் டிவிசனிலிருந்தெல்லாம் புள்ளேகள் வந்திருந்தாங்க. ஒரே கூட்டம். உக்கார கூட பெஞ்சியில எடம் இல்ல. மணி யடிச்சோடன்ன சேரும் டீச்சரும் வந்தாங்க. எங்களே யெல்லாம் கண்டோடன பெருசா சிரிச்சாங்க.

"தெரியாமலா சொன்னுன், எல்லா பிரச்சினேகளும் பொரு ளாதார பிரச்சினேதான்னு பொருளாதாரம்ணு என்னு வயிறு தான்! வயிற்றில கைவச்சன்......இங்க பள்ளிக்கூடம் இடம் காணல்ல ...... ஹா...... ஹ......''

சேரு சிரிக்கிருரு. அவருக்கென்னு சிரிப்பாரு. நாங்கள் எல் லாம் அழுவுறோம்.

புள்ளேகலெல்லாரும் ஒரெண்டு ரெண்டு படிக்குது.

"மகள் இங்க ஒருக்கா வாங்கோ'' சேரு டீச்சரை கூப்பிட் டாரு'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னப்பா கூப்பிட்டனீங்களே" "கையோட அந்த இன்ஸ்பேக்டருடைய பைலை எடுங்கோ. ரெண்டு பேருக்கென்ன மூன்று சேருக்கென்டாலும் எவரேஜ் இருக்கு.குறித்தபடி அடுத்த வாரமே சோதனைக்கு வரலாம் என்று கடிதம் போட்டிட வேனும்......"

"இந்த சனியன் பிடிச்சதுகள் எல்லாம் கடைசி நேரத்தில வந்து நிற்குதுகளே அடுத்த வாரம் இன்ஸ்பெக்டர் வந்தாப் போல என்னென்று பதில் சொல்லப் போவுதுகள்......!"

அதைப் பற்றி நமக்கென்ன கவலை, எவரேஜ் சரியா இருந்து கிராண்ட் குறையாமல் ஒழுங்கா வந்தால் போதும். இவன் இன்ஸ்பெக்டர் இல்லை. எந்தக் கொம்பன் வந்தாலும் பயப்படுற நானே அந்த கம் போதத்தில ஒழுக்கா இப்புடி தாங்கோ கையோட கடிதத்தை அனுப்பிறோம்"

"மகள் நம்மட விக்கினேஸ்வரனுக்கு இந்த ஊர் சுவாத்தியம் ஒத்து வருமா......?"

"விக்கினேஸ்வரனு...... யார் அது—"

'என்ன பிள்ளை தெரியாதது போல கேட்கிற நீ. அவன் தான் உன்ரை மாமியின்ர மகன். சோதனை பாஸ் பண்ணிப் போட்டு அங்கை கொடிகாமத்திலை சுருட்டுக் கடையில் நின்டவன்......?

"ஓம்...... ஓம்...... புக்கரசிமாமியின்ர மோனை சொல்லுற நீங்களா......? அதுக்கென்ன இப்ப......?"

"அதில்லை பிள்ளை, ஆளை கடிதமெழுதி ஒருக்கா வரச் சொன்னால் நல்லம். அடுத்த வருடம்தான் நான் பென்சனுல போறேன், என்டாலும் ஆளை இப்ப இருந்தே இங்க எக்டிங்ல போட்டு வந்தால்தான் சரி வரும். இங்கையும் தோட்டத்தில சோதனை பாஸ் பண்ணின பொடியள் ரெண்டொருத்தர் இதுல கண் வச்சி இருக்கினயாச்சும் சரி...... சரி...... பாக்கிறன்.

சேரும் டீச்சரும் கதைச்சிக்கிட்டே இருக்காங்க. நான் வெளியே எட்டிப்பார்த்தேன், தூரத்தில மலைகளெல்லாம் ஒட்டகம் மாதிரி வளைஞ்சி வளைஞ்சு இருக்கு. மேகமெல்லாம் ஓடிப் பிடிச்சு விளையாடுதுகள். வெள்ளை மேகம் தோத்து தோத்து ஓடுது. கறுப்பு மேகம் அதை அப்படியே போட்டு அமுக்கி மறைக்கிது ...... இப்ப எங்க பார்த்தாலும் கறுப்பு மேகமாத்தான் தெரியுது. மழையும் வரும் போல இருக்கு.

எனக்கு படிக்கவே நினைவு வரல்ல. தம்பிடைய கூட்டில கெடந்துசகிட்டு அழுவானே! ஒன்டுக்கு ரெண்டுக்கு இருந்திட்டா யாருமாத்திப் போடுறது. மழை பெய்தா சாரல் அடிச்சிமேலெல்லாம் நனைஞ்சிறுமே. கூட்டுல இருக்கிற ரொட்டி துண்டு திங்கிறேன்னு அந்த்த வீட்டு ஜிம்மி நாய் கடிச்சாலும் கடிச்சிறும்.

நான் உடனே ஓடிப்போய் அவனை பார்க்கனும். அப்படியே தூக்கி வச்சிக்கிட்டு கொஞ்சனும் போல இருக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரேம் ஆறு அமைதியாக ஓடிக்கொண்டிருக்கிறது!

## பரிபூரணன்

அந்த இடம் அமைதியாகக் கிடக்கின்றது!

நாற்பது ஐம்பது பேர், அதுவும் பெண்கள், வேலை செய்யும் இடமாகத் தோன்றவில்லை. அத்தனை நிசப்தம்.

அர்த்தமற்ற பேச்சு அரட்டையும் இல்லை. அவ்வளவிற்கும் காரணம்—நெருப்பு மழையாகப் பொழியும் வெயில்தான். எல்லோரது வாயும் காய்ந்து விட்டது. வறண்ட தொண்டையிலிருந்து வார்த்தைகள் தான் வருமா! அல்லது காய்ந்த நாக்கிலிருந்து பேச்சுதான் எழுமா!

அக்கினி பிழம்பாக சூரியன் தகிக்கிறது.

அந்த வெப்பத்தை ஜீரணிக்க முடியாமல் பூமியும் வெப்பத்தைக் கக்குகிறது.

வானமும் பூமியும் ஒன்றையொன்று மூடிக்கொண்டு ஸ்டோர் அடுப்பாக புழுங்குகிறது.

பெரிய மரங்களும் நெருப்பு வைத்தாற் போல் காய்ந்து தீய்ந்து போய்க் கிடக்கின்றன.

இடை விடாது கொழுத்தப்படும் புல்லுமலைகளின் புகை வெயிலையே மங்கலாக்கி விட்டது. மாணப் புல்லின் சாம்பல் எங்கும் மிதக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'திடு திடு' என ஓடிவரும் 'ரேம்' கானும் ஓடிவர திராணி யற்று நிலத்தினுள்ளே ஒடுங்கி கொண்டது. சுட்ட சட்டியில் விட்ட சொட்டுத் தண்ணீரைப் போல.

ஒருவருக்கும் கண்களில் ஒளியில்லை. ஆறு மாதமாகக் காய்ந்து போன கத்தரிக்காய் போல கண்களும் கன்னங்களும் சுருங்கி விட்டன. குற்றம் செய்தவன் மேலதிகாரியை நிமிர்ந்து பார்க்க முடியாதது போல் அத்தனை பேர் தலைகளும் கவிழ்ந் திருக்கின்றன. விரல்கள் தளிர்களைத் தேடிப் பிடிக்கின்றன.

காய்ந்த தேயிலைச் செடிகள் உண்ணி முள்ளாய் கிழித்தது எரிகிறது.

இரண்டு மாதங்களாக எரித்த வெய்யில். நாளுக்கு நாள் வெப்பம் அதிகரித்துக் கொண்டே போகின்றது. குறைவதாகத் தெரியவில்லை.

மரநிழலில் உள்ள கூரைக்கடியில் இருப்பவர்கள் கூட கைகளாலும் கடதாசிகளாலும் விசிறிக் கொள்கின்றனர் 'வட் ஏ டெர்ரிபிள்' என்றபடி சட்டைப் பொத்தானை கழற்றி விட்டு வாயால் ஊதிக் கொள்கின்றனர்.

பொட்டை வெயிலில் மொட்டு மொட்டு என்று நிற்கும் அத்தனை மண்டைகளுக்கும்..! அது சகஜம். அவர்களுக்கு வெயில் இல்லை! வியர்வை இல்லை!!

கன்னத்து தோலை உரிப்பது போன்ற எரிச்சல். வரண்ட தொண்டைக்குள் இதமாக விட்டுக் கொள்ள ஒரு சொட்டு நீர் இல்லை. ஓயாது வடியும் வியர்வையும் கண்களில் பட்டு எரிக்கிறது. வாயில் பட்டு கரிக்கிறது.

தேயிலைச் செடிகள் அசையும் ஒலியைத் தவிர வேறு சப் தம் இல்லை.

தலைக்கு மேல் உயர்ந்து கிடக்கும் சரிவில் ஏற முடியாமல் பெருமூச்சு விடுகிறாள்- மிகவும் பின் தங்கி வந்த ஒருத்தி.

வயிறும் மார்பும் வலிக்கும் படியாக உப்பித் தணிகிறதே ஒழிய மூச்சு வெளிப்படவில்லை. சுவாசம் வெளி வர முடியாமல் திணறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீசும் காற்று கூட சாம்பல் கரியுடன் வெப்ப மணத்துடன் வெப்பமாகவே வீசுகிறது. வாய் காய்ந்து விட தொண்டைக் குழியும் எண்ணெய் அற்ற இயந்திரமாக இயங்க மறுக்கிறது. மிகவும் சிரமத்துடன் எச்சிலைக் கூட்டி விழுங்குகிறாள்.

எத்தனையோ சுமைகள் வலிந்து சுமத்துப் படுவது போல் இந்த வயிற்றுச் சுமையும். எத்தனையைத் தான் சுமப்பது?

களைப்பால் உடல் சோர்ந்து ஆயாசமாக இருக்கிறது. எங்கும் ஒரே வலி.

உடலிலுள்ள ஒவ்வொரு அணுவும் உயிரிழந்து விட்டாற் போன்ற உணர்வு.

கண்கள் சோர்ந்து விட்டன. உறக்கம் உடலைத் தழுவு முன் ஏற்படும் ஒரு மயக்கம்.

கால்கள் சோர்ந்து விட்டன. தேயிலையை பிடித்திருந்த கைகள் தளர்கின்றன.

'தண்ணி.. தண்ணி' வறண்ட நாவிலிருந்து வார்த்தைகள் வரவில்லை. அதரங்கள் அசைகின்றன. கிணற்றிலிருந்து பேசுவது போல் கேட்கின்றது.

'ஐயோ அம்மா' என்ற முனகலுடன் பள்ளத்தில் சாய்ந்து விட்டாள்.

கூடை தேயிலைக்கு மேலாக சுழன்று ஓடுகிறது. அடுத்த நிரைப் பெண்கள் எல்லோரும் மேலே சென்று விட்டனர். தற்காலிகமாக ஒரு குழியில் கிடக்கிறாள் அவள்.

"ஐயோ பாவமே" என்று பதறி அடித்துக்கொண்டு ஓடிவர யார் இருக்கிறார்கள்?

தண்ணீர் கொண்டு வரும் பொடியனும் போனவன்தான் இன்னும் காணோம்.

"தண்ணி எப்படி வரும்"! என்று கேட்டபடி திரும்பி கீழ் ரோட்டைப் பார்க்கிறாள். கொழுந்தெடுக்கும் ஒருத்தி. பகல் வெயிலின் நிழலாக சிறுத்து தெரியும் தண்ணீர் பொடியன் கீழே வருவது தெரிகிறது. மறுகணம் கூடையை வீசி விட்டு பெண்கள் ஓடுகின்றனர். சரிவில் ஓடிவரும் அவர்கள் ஒய்யாரத்தை ரசித்தபடியே சவுக்கு மரத்தடியில் சமமான ஓரிடத்தில் வாளியை இறக்கி வைத்தவன் துணுக்குற்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிர்ச்சிக்கு காரணம் முதலில் ஓடி வந்தவள் போட்ட காட்டுக் கூச்சல்! காட்டுக்கூச்சலுக்குக் காரணம் குழியில் கிடந்தவளைக் கண்டு விட்டதால்.

எல்லோரும் அவளை சூழ்ந்து கொண்டனர்; தண்ணீர், காற்று எல்லாம் வந்தன. வரவழைக்கப்பட்டன. அவள் வீட்டிற்கு தூக்கி செல்லப்பட்டாள். மலையெங்கும் இதே பேச்சுத் தான்.

'தண்ணி கொண்டார போனவன்தான் பொதைஞ்சு பொயிட்டானே'.

'ஆமா அங்க திடு திடு'ன்னு ஊத்துது! போனதும் வந்திர' என்கிறான் பொடியன் ஓடி வரும் நீரும் டங்கிகளில் நிரப்பப் பட்ட பெரிய துரை பங்காளவில் போய் 'திடு திடு' விழுகிறது—ஏன்?

ஒரு சிலரைத் தவிர எல்லோருக்கும் அது தெரியாது.

அந்தத் தோட்டத்தின் உயிர் நாடி போன்றதே அந்த 'ரேம்' ஆறுதான். ஆறுதான் ஊருக்கு அழகு என்ற காரணத்தால் காணும் ஆறாக கருதப்பட்டது. கரும் பூதமாக அமர்ந்திருக்கும் பாறைகளுக்கடியில் ஓடி வரும் நீர் அதிகமாக இல்லாவிட்டாலும் உயிருடன்—சுறு சுறுப்புடன்—அளவிற்கதிகமாகவே இருந்தது. தேவைக்குப் போதுமான நீர் கிடைத்தது என்றாலும் எது தேவை என்பதே சிக்கலான கேள்விதான்: அவசியமற்றவையும் சிலருக்கு தேவையாய் இருக்கும் போது அவர்களை திருப்தி படுத்திக் கொள்ள சிலர் அத்தியாவசிய தேவைகளையும் இழக்க வேண்டும் தானே. உயிர் போகப் போகும் ஒருத்திக்கில்லாத ஒரு சொட்டு தண்ணீர் எங்கேயோ போய் வடிகிறது; வடிக்கப்படுகிறது; எல்லாம் தேவை என்ற தேவையற்ற காரணத்தால் தான்!

ரேம் ஆற்றின் இருமருங்கிலுமுள்ள அடவியை யாரும் அழித்து விடாமல் பார்த்துக் கொள்வார் பெரியதுரை. இலை முருங்கையும் ஏலரிசியும் அடவின் இடையிடையே பயிரிடப் பட்டுள்ளது எப்பொழுதும் 'சிலு சிலு' என்றிருக்கும் அந்த காட்டில் கால் வைத்தால் போதும், நனைந்த றப்பர் நுரையை அழுத்துவது போல நீர் வடியும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறு குறுகலாக உள்ள இடத்தில் நீரை மறித்துத் தேக்கி குழாய்கள் மூலம் நீரை தொட்டிகளில் நிரப்பி இயந்திர 'பம்ப்' மூலம் அவற்றை உறிஞ்சி மலை உச்சியிலுள்ள டங்கி களில் விழச்செய்து அங்கிருந்து தோட்ட முழுவதிற்கும் நீர் விநியோகிக்கப்படுகிறது.

'நர்சரி'யிலிருந்து ஸ்டோர், பங்களா அத்தனையும் எதிர் பார்த்திருப்பது இந்த 'பம்ப்' உறிஞ்சிக் கக்கும் அந்த 'ரேம்' ஆற்று நீரைத்தான்.

நாலு லயன்களுக்கு மத்தியில் சாரைப் பாம்பாக தலை தூக்கி நிற்கும் அத்தனை பைப்புகளுக்குள்ளும் ஓடி வந்து வடிவது இந்த ஆற்று நீர்தான்.

ஆற்றை மறித்துள்ள இடத்தில் பொருத்தப்பட்டுள்ள அவ்வளவு பெரிய குழாயும் கொள்ளாமல் நிறைந்து வழியும் நீர் கீழே குடத்துடன் நிற்கும் பெண்களுக்கு பீலியாக அமைக் கப்பட்டுள்ளது.

தலையைப் பிடித்தால் மூச்சு தாங்க முடியாமல் விழும் நீர் தான் இன்று சொட்டு சொட்டாக வடிகிறது. இளமை செழிப்பு எல்லாம் கனவாய் போய் விட்டன.

கட்டுக்கடங்காமல் வழிந்த நீர்தான் இன்று கட்டுச் சாராய மாக வடிகிறது. இயந்திரத்திற்கு தேவையான நீரை சேர்த்து கொடுப்பது எப்படி. கீழே குடத்துடன் 'நான் நீ' என்று மோதும் பெண்களுக்கு நீர் அனுப்புவது எப்படி? முடுக்கி விட வும் இயந்திரத்தை மூடி விடவும் நியமிக்கப்பட்ட தண்ணீர் தங்கதுரைக்கு இப்பொழுது பல வேலைகள் சுமத்தப்பட்டன.

'டங்கிப்' பைப்பை அடைத்து விட்டு பீலிக்கு தண்ணீர் விடாமல் பார்த்துக் கொள்ள, டங்கியின் மூடியைக் கழற்றி திருப்பி விட்டு தண்ணீரை மொண்டு விடாமல் காவல் காத்து கொள்ள, ஆட்களுக்கு வேலை முடிந்த பின் எஞ்சினை நிறுத்தி விட்டு தண்ணீரை மறித்து விட இப்படிப் பல புதுப்புது வேலை கள் முளைத்தன.

வெயிலின் கொடுமை தாங்காது நீர் கண்டிப் போக ஆட் களும் திண்டாடுகிறார்கள்.

வேலை விட்ட பின் தண்ணீர் திறந்து விடப்படும். ரேம் ஆறு ஒரே அல்லோல கல்லோலப்படும். இரவு பத்து மணிக்கு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கு மேலாகவும் ஆட்கள் தண்ணீர் பிடிப்பார்கள். 'ஒரு குடம் ரொம்பத்தான் ஒரு மணித்தியாலமாகும்!

தோசைக் கல்லின் அடிப்புறத்தில் பற்றிய நெருப்புத் துளிகளாக இருட்டில் ஓடி மறையும் அத்தனை வெளிச்சமும் தண்ணீர் தூக்குபவர்களுடைய பந்தங்கள் தான் உடலைப் பிழிந்தெடுக்கும் வெயிலில் உழைத்துவிட்டு வந்தால் 'உஸ்' என்று உட்கார முடியுமா?

'மலையில் ஒருத்தி மயங்கி விழுந்திட்டா. உசிரு போனாலும் கூட ஒரு சொட்டு தண்ணி கெடைக்காது இந்த நாதியத்த தோட்டத்திலே' என்று பொரிந்து தள்ளியபடி பெண்கள் வேலை விட்டு வருகிறார்கள்.

'ராத்திரி இருட்டுல காலை இட்டு கிட்டு நெகம் பேந்து போச்சு. தண்ணியும் தூக்கல ஒரு எழவும் தூக்கல. காலையில் கொண்டாந்துபோட்ட கொடைய இன்னும் புடிச்கல' என்று பீலியை பார்த்து சபித்தவள் பெருவிரலை தூக்கிக் கொண்டு பாதத்தின் ஓரத்தால் நடந்து வந்தவள் பத்திர காளியாக மாறி விட்டாள். 'சுண்டிய' மரவள்ளிக் கீரையில் சோற்றை சாப்பிட்டு விட்டு கோப்பையுடன் வந்த அந்த மூன்று வயது பிள்ளை வெளியில் வாளியில் இருந்த அவ்வளவு தண்ணீரிலும் கையையும் கோப்பையையும் போட்டு கழுவிக் கொண்டிருக்கிறான்; ஒரு வாளி நீர்தான் என்றாலும் அதைத் தூக்க எத்தனை பாடு.

''ஐயையோ ஐயையோ நீ ஏண்டா சாகாமா இருக்க இப்ப சோறு திங்காட்டி என்ன கேடா' என்று கத்திக் கொண்டே வந்தவள் மீண்டும் விரலில் இட்டுக் கொண்டாள்.

வேதனை கோபம் எல்லாம் அவளை பேயாக்கி விட்டன. மட்டக்கம்பை இரண்டாக ஒடித்துக் கொண்டு அவனை நெருங்கினாள்.

அந்த அசுரப் பிடியினின்றும் தப்ப முடியாது என்று அறிந்தவன் அங்கேயே அழுகத் தொடங்கி விட்டான்.

'நீ நாசமாப் போக, இப்ப என்ன சோறு' என்று அவனைப் பிடித்து முங்கில் கப்பு கிழிய கிழிய முதுகிலும் கால்களிலும் மாறி மாறி விளாசினாள். வாய் என்னவெல்லாமோ கத்தித் தீர்க்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடி தாங்க முடியாமல் திணறிய சிறுவனுக்கு வாயிலிருந்து சத்தம் வரவில்லை. தீனிக்காக குருவிக் குஞ்சு வாயைப்பிளப்பது போல வாயைப் பிளக்கிறான். சத்தம் இல்லை.

வீட்டிலிருந்து கிழவி ஓடி வருகிறாள், 'அடிபாவி! நீ நாசமா போக ஒன்னை குளிப்பாட்டவா இப்ப தண்ணி புல்லய கொன்னுட்டியேடீ' என்று பதறியபடி பிள்ளையை தூக்கி முதுகில் கிடத்துகிறாள். கண்களை துடைத்து விடுகிறாள்.

மீண்டும் மூச்சு வருகிறது அவனுக்கு. விசும்பி அழுகிறான். கைகால்கள் எல்லாம் தடித்துப் போய் சிவந்து கிடக்கின்றன.

கிழவி யாரை எல்லாமோ வாயில் வந்தபடி பேசுகிறாள்.

'வெறி' தணிந்தவள் ஒன்றும் செய்யத் தோன்றாமல் வாளியைப் பார்க்கிறாள். அரை பெரல் நிறைய இருந்த தண்ணீரில் அயிரைக் குஞ்சுகளாக கீரை மிதக்கின்றது. அதைக் கானில் சாய்த்து ஊற்றிவிட்டு குடத்தைத் தூக்கிக் கொண்டு பீலிக்குச் செல்கிறாள்.

குப்பையை கிண்டிக் கொண்டிருந்த கோழிகள் துள்ளிப் பாய்ந்தன. கான் கழுவிக் கொண்டு ஓடுகிறது. 'யாருவூட்டு கொடம் இருந்தாலும் தூக்கி வீசிட்டுத்தான் புடிப்பேன்' என்று கூறிக் கொண்டே 'ரேம்' பீலிக்கு வருகிறாள். ஏற்கனவே பீலியில் ஏகப்பட்ட கூட்டம். பாத்திரங்கள் நூற்றுக் கணக்கில் கிடக்கின்றன.

* * *

மெயின் டங்கியிலிருந்து நீர் விநியோகம் செய்ய முடியாத அந்த மேல் ஒட்டு லயத்திற்கு 'ட்றக்' மூலம் தண்ணீர் எடுத்து வீட்டிற்கு இரண்டு குடம் என்று கொடுக்கப்படுவதுண்டு.

மேல் ஒட்டு லயத்திற்கு 'ட்றக்' செல்கிறது. ஆட்கள் குடத்துடன் ஓடி வரவில்லை. தண்ணீர் கொண்டு ஊற்றுபவன் ஆச்சரியப்பட்டான்.

'தண்ணி புடிக்க வல்லியா ஆளுகளா' என்று சத்தம் போடுகிறான்.

'தண்ணி வேண்டாம், போ. ரெண்டு கொடம் என்ன மூக்குல மோந்துக்கிறவா! ,'அது இல்லாட்டி செத்துப் பொயிர மாட்டோம்.'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'எந்த கானு கட்டையில இருந்து ராக்கியார்ரானுகளோ—கருமச் சண்டாளம், 'இந்த நாதியத்த தண்ணிய குடிக்க ஒண்ணும் நாண்டு கிடக்கல, ரேம் பீலிக்கு போறு நாலு நடை. வேலே முடிஞ்சிச்சு.'

'ஊத்த வாளிய போட்டு மோந்து ஊத்துரான். பொம்பல புள்ளே க மேலஊத்துரான்—மறுகென்ன! கில்லாடி இல்ல' என்று எல்லோரும் அவனை மொய்த்துக் கொண்டனர். யாருக்கு பதில் சொல்வது, என்ன சொல்வது என்று தெரியாமல் அவ னுக்கு ஆத்திரம் தலைக்கேறுகிறது.

'இந்த ரெக்கிலாஸ் எல்லாம் நம்ம கிட்ட வேணும். தெரியுமா! போய் தொரை கிட்ட சொல்லு'

'தொரை என்ன கொம்பா—வரலுபுடிக்கும் பயலே ஓங்கலாலதாண்டா தோட்டத்தில் தண்ணி இல்லாமல் போச்சு....!'

'ஏகதேசமா பேசாத அப்பரம்..' அவன் முடிக்கவில்லை.

'அடிச்சி புடிவீகளோ' என்று சட்டையைப் பிடித்து கீழே இழுக்கிருன் பழைய தலைவர். சட்டை லேசாகக் கிழிந்து விட்டது.

'ட்றக் றைவர்' அவர்களை சமாதானம் செய்து அவனை ஏற்றிக் கொண்டு போகிருன்.

வாளியைத் தூக்கி எறிந்தவன் "ட்றக்"கில் தொத்திக் கொண்டே, பொறு தொரைகிட்ட சொல்லுரேன்' என்கி ருன். ட்றக் சென்று விடுகிறது.

ஆபீசை விட்டு பங்காளாவிற்கு வந்த துரை பூந்தோட் டத்திற்கு வருகிருர். நீச்சல் குளத்தில் நீர் இல்லாததைக் கண்டு ஒரு கணம் அதிர்ச்சியுற்ருர். 'விசிட்டர்ஸ்' வரு முன் குளம் தளம்பிக் கொண்டிருந்தால் அல்லவா அழகாக—இயற் கையாக—கௌரவமாக இருக்கும்.

பழைய நீர் மாலையில் அகற்றப்பட்ட பின் புதுநீர் இரவில் நிறையும். ஆனல் இன்று உறவினர்கள் வருகிருர்களே!

தோட்டக்காரனே அழைக்கிருர் துரை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பங்களாவுக்கு தண்ணி வேணும். விஸிட்டர்ஸ் எல்லாம் வாரது. சுருக்கா தண்ணி அனுப்ப சொல்லு ஆளுகளுக்கு இன்னிக்கி தண்ணி திருப்ப வேண்டாம். வெளங்குதா. ஓடு சுருக்கா' என்கிறார்.

தோட்டக்காரன் நாலுகால் பாய்ச்சலில் ஓடுகிறான்.

தன் பணச் செருக்கையும் அதிகார மோகத்தையும் பறைசாற்றிக் கொண்டு சகல அதினுட்ப அலங்கார வேலைகளுடன் வளங்கும் அந்த நீச்சல் குளத்தை சுற்றி வந்தார் துரை.

பனி விழுந்த புல்தரையில் சப்பாத்து சத்தம் கீச்சிடுகிறது.

வெயிலின் கொடுமை தாங்காமல் ஆண்களும் பெண்களும் அந்த நீச்சல் குளத்தில் விழுந்து கிடப்பார்கள். பொற்றாமரை வாவியில் போய் விழுந்த நக்கீரன் போல.

இந்த மலை உச்சியிலும் ஒரு 'மவுன்ட் லெவனியா' வா என்று தோன்றும் படியாக அந்தக் காட்சி அமையும்.

தோட்டக்காரன் சென்ற சிறிது நேரத்தில் 'ட்றக்' தடதட என்று ஓடி வந்து வாசலில் நிற்கிறது,

கோடடித்தாற் போல நேராக அமைந்த பாதையின் இரு மரங்கிலும் அழகாக வெட்டப்பட்ட 'சைப்பிரஸ்' மர மறைவில் துரைக்கு தெரியும்படியாக அவன் வந்து நிற்கிறான்.

'யாரது' துரை கேட்டுக் கொண்டே அவனை நோக்கி வருகிறார். என்ன என்னும் பாவனையில் தலையை ஆட்டுகிறார்.

''மே ஒட்டுலத்து ஆட்களுக்கு தண்ணீ வேண்டாங்களாம்'

'யாரு சொன்னு?'

'பழைய தலைவருங்க''

'ஏனும்...'

'அழுக்கு தண்ணியாம்... ரெண்டு கொடம் பத்தாதுங்களாம். என்னை அடிச்சுபிட்டு ரேம் பீலிக்கு போராக ஆளுக!'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் உடல் ஆத்திரத்தால் பதறுகிறது.

'ஓ. ஐ. சீ— தண்ணி நர்சரிக்கு போடு, நீ காலையிலே ஒப்பீசுக்கு வா உன்னை அடிச்சாச்சி இல்ல' என்று கூறிக் கொண்டே காப்பவுண்ட் சுவரருகே வருகிறார் துரை. ட்றக் சென்று விட்டது.

மலை உச்சியிலிருக்கும் அந்த இடத்திலிருந்து தோட்டம் முழுவதையும் பார்த்து விடலாம்.

பைனகுலரை எடுத்து கண்களில் வைத்துக் கொண்டார் துரை.

'ஒட்டுலயத்து ஆட்கள் — பெண்கள், ஆண்கள், சிறுவர், சிறுமியர் அனைவரும் ஒவ்வொரு பாத்திரத்துடன் ஓடி வருவது தெரிகிறது. தலைவரும் வருகிறார்.

அந்திநேரத்தில் தோட்டமே கூடும் அந்த 'ரேம்பீலி' சந்தைக் கடையாக இரைகிறது. குடம், தவலை, வாளி எல்லாம் சத்தம் போடுகின்றன!

யார் பேசுவது என்ன பேசுவது என்று தெரியாமல் எல்லோரும் கூச்சல் போடுகின்றனர். எல்லோரும் கையில் குடத்தை தயாராக வைத்துக்கொண்டிருக்கின்றனர். பீலியில் உள்ள வாளி நிரையும் தறுவாயில் இருக்கிறது.

ஓடி வந்த ஒட்டுலயத்து ஆட்கள் ஒரு கணம் மலைத்து நிற்கின்றனர்.

'எல்லாம் இதுக்கே ஓடியா' என்று அசிங்கமாக சைகை செய்கிறாள் ஒருத்தி.

தண்ணீர் தங்கதுரை டங்கியை எட்டிப் பார்த்து விட்டு உதட்டைப் பிதுக்கிக் கொண்டே 'இந்தா பாரு டங்கியின தண்ணி இல்ல. வார தண்ணியைப் புடி. இன்னைக்கின்னு தண்ணி திரும்ப ஏலாது' என்று கூறிக் கொண்டே பைப்பில் உட்கார்ந்து கொண்டான்.

மிகவும் நிதானமாக வந்த பழைய தலைவர் பீலியை எட்டிப் பார்த்து விட்டு 'ஏன் தண்ணீர் திருப்பி விடல?' என்று கேட்கிறார்.

அவருடன் வந்த ஆண்களும் தங்கத்துரையைப் பார்க்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'டேங்கியில தண்ணி இருக்கா......? என்ஜின் சேத்தை இழுத்தா கெட்டுகிட்டுப் பொயிராதோ.''

'என்ஜினை இப்ப ஏன் போடுர. நாங்க எல்லாம் சாகிறதா? மனுஷன்னு நெனைச்சிகளா இல்ல மாடுன்னு நெனைச்சிகளா?'

'ஒங்களுக்குத்தான் ரக்கிலே தண்ணி வருமே, பின்ன இங்க ஏன்வரனும்?'

'டேய் ஒனக்கு அந்தக் கதை வேணும். வேலை விட்டதும் என்ஜினை நிறுத்திட்டு தண்ணியை திருப்பி விடவேண்டியது தானே...'

'அடா புடா கதையை வேற எங்கேயும் வச்சிக்க' என்று சொல்லிக் கொண்டிருக்கும் பொழுதே தோட்டக்காரன் ஓடி வருகிறான்.

தலைவருக்கும் சகாக்களும் இரத்தம் சூடேறுகிறது.

பெண்களின் பேச்சு ஓய்ந்து பின் சூடு பிடிக்கிறது.

'என்னப்பா பங்களாவுக்கு தண்ணி இல்லையாம், துரை சத்தம் போடுறாரு சுருக்கா தண்ணி அனுப்பப்பாரு...'

'போடா போடா... நிறுத்தடா கதையை: தொரை சொல்லிட்டாராம், இவுரு தொடையால கழியிராராம். நாங்க எப்புடியோ நாசமா போகட்டும். நீச்சல் குளத்துக்கு தண்ணி அனுப்பிருங்க' என்கிறார் தலைவர்.

'இந்தா ஒனக்கும் நமக்கும் பேச்சு இல்லே. நான் தங்க துரையோட தான் பேசுறேன்.'

'அடேயப்பா பெரிய துரை — 'யூஸ்லஸ் பகர்' சரிதான் போடா.'

'மனுஷன் குடிக்க தண்ணி இல்லன்னு பேயா அலையிரான். தொரைக்கு வாலு புடிக்க வந்திட்டாரு இவரு......'

ஒருவர் மாற்றி ஒருவராக பொரிந்து தள்ளுகின்றனர். தோட்டக்காரருக்கு உடலிலுள்ள ஒவ்வொரு அணுவும் பரம அணுவும் துடிக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தொரையை போய் படுக்கச் சொல்லு இல்லாட்டி வீட்டுலேயிருந்து ஒன்னை அனுப்பு...'

அவன் கூறி முடிக்கு முன்னர் முகத்தில் ஒரு அறை விழுகிறது.

இருவரும் மல்லுக் கட்டிக்கொண்டிருக்க மற்றவர்கள் அவனை ஆளுக்கு ஒரு அடி அடித்து விலக்கி விட்டு 'இதான் ஒங்க தொரைக்கும் போய்ச் சொல்லு என்று பிடித்துத் தள்ளுகின்றனர்.

தோட்டக்காரன் ஆத்திரத்துடன் திரும்பிப் போகிறான்.

தான் அனுப்பிய ஆள் அடிபட்டதைப் பார்த்துக்கொண்டிருந்த துரைக்கு கண்கள் நெருப்புத் துண்டுகளாகச் சிவக்கின்றன. தன்னை அடித்ததிற்கு சமமாக அதைக் கருதியபடி பங்களாவிற்குள் சென்று சற்றைக் கெல்லாம் அதேஇடத்தில் வந்து நின்று கொண்டார். தோளில் தொங்கிய பைனுகுலரை கண்களில் பொருத்திக் கொள்கிறார்.

தோட்டக்காரன் சென்ற பிறகு தலைவர் தண்ணீர் தங்கதுரையிடம் வருகிறார்.

வீட்டுல ஒரு சொட்டு தண்ணி இல்ல தண்டு முண்டா செய்யாம தண்ணியை திருப்பி விட்டுரு' என்று கூறிக் கொண்டே தண்ணீர் மறித்திருக்கும் இடத்தை நோக்கிச் செல்கிறார்.

ஆத்திரத்தால் தங்கத்துரையின் உடல் பதறுகிறது.

'அங்க எங்கடா போற ராஸ்கல்' என்று தலைவரை பிடித்து இழுத்து ஓங்கி ஒரு அறை விடுகிறான்.

தலைவரின் சகாக்கள் அனைவரும் தங்கதுரையின் மேல் பாய்ந்து தாக்குகின்றனர். சின்னஞ் சிறு புழுவை கட்டெறும்புகள் மொய்த்துக் கடிப்பது போல. தங்கதுரையின் உடல் எல்லாம் ஒரே காயம். எங்கெல்லாமே அடி' எங்கெல்லாம் இருந்தோ இரத்தம் வடிகிறது. அவன் மயங்கி கீழே விழு தங்கத்துரையின் உறவினர்களும் சகாக்களும் விஷயமறிந்து ஓடி வருகின்றனர். ஒரே கைகலப்பு. வெறியில் எழுந்த அடிதடி. வெண்கலக் கடையில் யானை புகுந்தது போல வாளி குடம் எல்லாம் சிதறி ஓடுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்கள் விகாரமாக கீச்சிடுகின்றனர். ஓடவும் முடியாமல் பாராமல் இருக்கவும் முடியாமல் அவர்கள் கைகளையும் கால்களையும் உதறிக் கொண்டு அழுகின்றனர்.

வெறி கொண்ட வேங்கையாக ஒவ்வொருவரும் முட்டி மோதி அடிபடுகின்றனர். தோல் கிழிந்து சட்டை கிழிந்து விகாரமாக பயங்கரமாக போரிடுகின்றனர்.

ரேம் ஆறு போர்க்களமாக மாறி விட்டது,

பயங்கர விலங்குகளின் சண்டையை பாதுகாப்பான இடத்தில் இருந்து பார்ப்பவன் போல துரை அமைதியாகப் பார்த்துக்கொண்டிருக்கிறார்.

முடுக்கியவன் எங்கோ இருக்க பாவம் இவர்கள் முட்டிச் சாகிறார்கள்.

ரோட்டில் பொலிஸ் ஜீப் வந்து நிற்கிறது. பொலிஸ் அத்தனை பேரையும் ஜீப்பில் ஏற்றிக்கொண்டு செல்கிறது.

பீலியில் குடங்களும் வாளிகளும் சிதறி சின்ன பின்னமாகக் கிடக்கின்றன.

மயான அமைதி அங்கே நிலவுகிறது.

ரேம் ஆறு அமைதியாக ஓடிக்கொண்டிருக்கிறது.

பங்களா நீச்சல் குளத்தில் தண்ணீர் மடமட வென்று பாய்கிறது.

பீலி மயானக் காடாக கிடக்கின்றது. அந்த இடம் அமைதியாகக் கிடக்கின்றது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பள நாள்

பெரியகுறியானை சலமன்ராஜ்

கூடை நிறையக் கொண்டுவந்திருந்த ரொட்டிகளை சம்பள வாசலிலேயே விற்றுத் தீர்த்துவிடலாம் என்ற நம்பிக்கை வீண்போகவே, லயம் லயமாக ரொட்டிக் கூடையைத் தூக்கிக்கொண்டு நடந்தான் ரப்பியேல்!

லயத்துக் கோடிகளையும், வீட்டு வாசல்களையும் கடப்பது எவ்வளவு சிரமமென்பது நன்ருக அவனுக்குத் தெரிந்திருந்தாலும், வயிறு என்று ஒன்று இருக்கிறதேயென்பதால் கூடையைச் சுமந்தவண்ணம், லயம் லயமாக ஏறி இறங்கினுன்.

பீலியடியில் என்னென்னவோ சாமான்கள்! காம்பரா வாசல்களில் வாளிகளும், சட்டிப் பானைகளும் காங்கிறீட் கற்கள் வேறு அசிங்கமாகக் கிடக்கின்றன; அதிலும் பணிய லயம் ஆகமோசம். எத்தனை தடவைதான் ரப்பியேல் இந்த லயன்களுக்கு வந்தாலும் தடுமாருமல் போவதில்லை.

ஒவ்வொரு காம்பராவிலும் சிறு சிறு குப்பி விளக்குகள் மினுக்கிக்கொண்டிருக்கின்றன. அவற்றையும் வீட்டுக்குள்ளேயே வைத்திருந்ததால் வெளியில் வெளிச்சம் தெரியவில்லை.

ஆக, சம்பள தினத்தன்று முழுத் தோட்டமும் வெறிச்சோடிக் கிடந்தது. மற்ற நாட்களில் ஒரு சில காம்பராக்களிலிருந்து வெளிவரும் ரேடியோ கானம் கூட இன்று நின்று விட்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடையில் அரைவாசி ரொட்டி மிஞ்சிக்கிடந்தது. முன்பெல்லாம் இரண்டு கூடைநிறையக் கொண்டுவந்தாலும் சம்பளம் முடியுமுன்பே தீர்ந்துவிடும். இதுதான் பஞ்சகாலமாயிற்றே!

மேட்டு லயத்துக்கு ஏறியும்கூட கூடை கனத்துக்கொண்டு தானிருந்தது. மூன்றுவது காம்பராவின் முன் நின்று குரல் கொடுத்தான் ரப்பியேல்.

வாசல் திண்ணையில் அமர்ந்து முதுகை சுவருக்கு முட்டுக் கொடுத்தவண்ணம், மடித்து—வைத்திருந்த கால்களுக்கிடையில், தலையைப் புதைத்துக்கொண்டிருந்த சுப்பையாவை அவன் கவனிக்கவில்லை.

'அம்மா ரொட்டி.. யம்..மா.. ரொட்டி வாங்கித்தாம்மா...!' தனது மூன்றுவது மகன் சிணுங்கியது அவனுக்குக் கேட்டதோ என்னவோ, 'டபக்' கென்று தலையைத் தூக்கி வாசலை வெறித்துப் பார்த்தான் சுப்பையா!

'யோவ்..ரொட்டிக்காரய்யா..ஏதாச்சும் வேணுமின்னு வாங்கிக்குவோம்தானய்யா... வாணுமின்னு பேசாம போறது தானே; ஏனய்யா இப்படி வாசல்ல நின்னு கழுத்த அறுக்குறே..! போய்த் தொலவியா..?'

ரப்பியேல் உற்று நோக்கினன் கண்களைச் சுருக்கிக் கொண்டு. இருளுக்கு மத்தியில் திண்ணையில் உட்கார்ந்திருப்பது சுப்பையா என்பது புரிந்தது. ரப்பியேல் மெதுவாகத் தன் வழியில் நடந்துவிட்டான்.

மாதம் முப்பது நாளும் உழைக்கும் மலையகத்தினர் சம்பள நாளன்றுதான் ஒருகணம் விக்கித்துவிடுகின்றனர். எவ்வளவுதான் செலவைக் குறைத்து வாழ்வை நடத்த முயற்சித்தாலும், புருஷன்காரர்களின் கவனயீனத்தால் செலவு தலையைக் கவிழ்க்கவைத்துவிடுகிறது.

காமாட்சியின் இன்றைய நிலையும் அதுதான்!

'ஏன் இப்பிடி நாய் மாதிரி கொலைக்கிறே.. உன் கோவத்த உன்கிட்டயே வெச்சுக்க.. அவங்கிட்டே காட்டப் போனீன்னு நாளைக்கு நாட்டுல வச்சு தோல உரிச்சுடுவான்" உள்ளே அடுப்படியில் உட்கார்ந்து ஏதோ சிந்தித்துக்கொண்டிருந்த காமாட்சி உரத்துக் கத்தினுள்.

சுப்பையாவுக்குக் கோபம் பொத்துக்கொண்டது.

'போதும், போதும்..வாயமூடிக்க..பெரிய இவ..'

'சீ, சும்மாகெட.. போன சம்பளத்துக்கு இப்படித் தொடங்கித்தான் கங்காணிய ஏசி, தலைவர ஏசி, தொரையையும் பேசி, கண்டாக்கு, கணக்கப்புள்ளை எல்லாத்தியும் பேசின.. ஒரு கவுடாப்பய போயி பத்திப்புட்டான்..! இப்பவும் வெக்கமில்லாம கத்துறியா..? போன மாசந்தான் தொரை வேலையை நிப்பாட்டுனரு.. இந்தமாசம் தோட்டத்திலயே வேலை இல்ல, போடாங்கட்டும். ஒனக்கென்ன, வூட்டுல வந்து குந்திக்கிவ. நான்தான் ஒருத்தி இருக்கனே' தண்ணி இல்லாம, வென்னி இல்லாம சாவுறதுக்கு..ஒன்னுல இந்தப் புள்ளைங்களுக்குத்தான் கஷ்டம்! வேளாவேளைக்கு சாப்பிட இல்ல.. பள்ளிக்கொடத்துக்கு போக வழி இல்ல..' காமாட்சி மனம் குமுறி அழுதாள்.

'பெரிய எளவுடாப்பா இது..' வெடுக்கென்று திண்ணையிலிருந்து குதித்து கோடிப்பக்கமாக நடந்தான் சுப்பையா.

'போ..போ..இருவது ரூவாதான்சம்பளம்எடுத்த, அதையும் நாட்டுப் பயலுகளுக்கே குடுத்துட்டுவா!' நன்னிகெட்ட மூடமே!' தனது ஆத்திரத்தை எதில் காட்டுவதென்றே அவளுக்குப் புரியவில்லை.

அவளும் கடந்த மூன்று வருடமாக சொல்லிக்கொண்டுதான் வருகிறாள். கொஞ்சமாவது காதில் போட்டுக்கொள்கிறானா என்ன? மாடாக உழைத்து உழைத்துத் தேய்வதுதான் அவள் கண்ட பலன்.

வேறு எந்த இனத்தில்தான் இப்படிப் பெண்கள் படுகிறார்கள்..?

வேலைக் காட்டிலும் நாயாக உழைத்துவிட்டு, வீட்டுக்கு வந்தும் நிம்மதியாக ஐந்து நிமிடங்கூட உட்கார நேரமில்லாமல் இரவுவரை கஷ்டப்படும் அவளுக்கு வாழ்க்கையில் என்னதான் சுகம் மிஞ்சுகிறது? வெறும் எலும்பும் தோலும்தான்! இதைக்கூட நிம்மதியாக விட்டுவிடுவானா; கடைசிவரை உறிஞ்சிவிட்டுத்தானே விடுகிறான்..! எடுக்கும் சம்பளத்தை நல்ல வழியில் செலவழித்தாலும் பரவாயில்லை; இப்படியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாள் கணக்காகக் குடித்து அழிக்கவேண்டும்? காமாட்சிக்கு உலகமே சூனியமாகத் தெரிந்தது?

தோட்டத்து பவுண்டரியைக் கடந்துகொண்டிருந்த சுப்பையாவின் கையில் துரையிடமிருந்து வாங்கிய இரண்டு பத்து ரூபா நோட்டுக்கள் கசங்கிக்கொண்டிருந்தன.

'சீ, வெக்கமில்லாம இருவது ரூபாவை சம்பளமின்னு வாங்கிட்டு வந்திருக்கனே..' எண்ணங்கள் ஒன்றோடொன்று முட்டி மோத, பண்டா கடையை நோக்கி நடந்த சுப்பையாவின் மனம் போராட்டக் களமாகக் குழம்பியது.

* *

கலியாணமாகி மூன்று மாதங்களாகியும் 'பால்வெட்டு' கிடைக்காமல் சில்லறை வேலைக்கே போகிறோமே என்ற பெருங்குறை சுப்பையாவின் மனதை அரித்துக்கொண்டிருந்தது. சமூகத்தில் வாழும் எத்தனையோ ரக மனிதர்களில் எந்தெந்த வேலைக்கு, எவர் எவரைப் பிடித்துப்போகவேண்டும் என்ற 'முறை' தெரியாதவன் அவன்; காக்கா பிடித்துப் பழகாதவன்!

பேர் பதிந்து ஒரே மாதத்தில் பெரிய கங்காணியின் மகள் தெய்வானைக்கு ஜீ. எல். வன்னில் வெட்டு... தோட்டத் தலைவரின் மகன், மனைவி, அக்காள் எல்லாருக்கும் 'பட் ரப்ரில்' பால்வெட்டு?! எப்படி இவை மட்டும் சாத்தியம் என்று அவன் தனக்குத்தானே கேட்டுக்கொண்டான்.

ஒரு நாள் மாலை மெதுவாகத் தலைவர் வீட்டுக்குப் போய் தலையைச் சொறிந்தான்.

'என்னப்பா! நீ பேசுறது பெரிய 'ரெக்குலாசா' இருக்கு.. தோட்டத்துல இருக்கிற அத்தனை பேருக்கும் வெட்டு குடுக்குறது முடியுமா..? சங்கம் இருக்குங்கறதுக்காக தவறான வழியில் வாதாட முடியுமா? வெட்டு இருந்தா ஒனக்கும் குடுப்பாங்கதானே..' தலைவர் வேலுவின் பதில் இது. மறு கிழமையே வேலுத் தலைவரின் மகனுக்கு ஜீ. எல். வன்னில் ஒரு வெட்டுக் கிடைத்தது. சுப்பையாவின் மனம் கொதித்தது! ஆனால் அவனும் ஒரு தலைவராகவோ — கங்காணியாகவோ ஆகிவிட முடியுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு வழி எப்படியோ தட்டுப்பட்டது.

மருத கங்காணி!

அவரை விட்டால் வேறு கதியில்லை; மருத கங்காணி வழமையாக 'கட்டைக்கு தண்ணி' போடும் மோட்டி முதலாளியின் வீட்டில் ஒரு போத்தல் 'கொழும்பை' வாங்கிவைத்து கொண்டு உட்கார்ந்திருந்தான் சுப்பையா!

கங்காணிக்கு அன்று நல்ல ஏற்றம்.

கங்காணியின் தூண்டுதல் நன்ருக வேலைசெய்தது: மறு வாரமே எவனே ஒருவனின் வெட்டு—அதுவும் பீ. பீ. 86ல் கிடைத்துவிட்டது. வெட்டுக் கிடைத்த மறுவாரமே ஒரு போத்தல் 'வெள்ளை'யோடு சின்ன கணக்கப்பிள்ளையின் குசினிப் பக்கமாக 'சும்மா வந்தேங்க' என்றவாறே நுழையவும் அவன் மறந்துவிடவில்லை.

வாசலருகில் போடப்பட்டிருந்த மேசையில் அமர்ந்து 'செக்ரோல்' செய்துகொண்டிருந்தார் சின்ன கணக்கப் பிள்ளை! அவரது மனைவி அலுமாரியை 'கிறீச்' சென்று திறந்த போது அவருக்கு விஷயம் புரிந்துவிட்டது. ஒரு கணம் 'செக் ரொல்' கணக்கு தலைகீழாக மாறி; வலது இடது புறமாக; ஓடிப் பிடித்து; பிறகு நேராகத் தெரிந்தது! எப்போது செக்ரோல் முடியும், ஒரு 'டோஸ்' அடிக்கலாமென்றிருந்தது!

'என்னப்பா சுப்பையா, நல்லா பாலுவருதா..? அந்த 'போன வெட்டுக்காரன்' நெறைய காயம் போட்டுருக் காணு?' என்று நாலு வார்த்தை பேசிவைத்தார்; அதுதான் அவர்கள் பாஷையில் நன்றி என்று அர்த்தம்;

'எல்லாம் நல்லாத்தாங்கய்யா, ஒங்க புண்ணியத்துல நடக்குது.. அப்ப நா வர்றேன்க!' சுப்பையா நடையைக் கட்டினுன்.

'பீ. பீ. 86க்கு அவன் வந்த மூன்றரை வருடங்களுக்குப் பிறகு எத்தனையோ பேருக்கு எத்தனையோ வெட்டுகள் மாறிவிட்டன. யார் யாரோ திடீர் திடீரென்று குழிவெட்ட வும்காட்டுசெடிவெட்டவும் போகிருர்கள்—போய்க்கொண்டே இருக்கிருர்கள். அவர்களின் வெட்டுகளும் ஒவ்வொரு புது ஆட்களுக்கும், கங்காணி வீட்டு ஆட்களுக்கும் கைமாறுகின் றன. ஆனல் சுப்பையாவுக்கு மட்டும் மலை மாற்றப்படவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மில்லை—ஒரு தகராறும் இல்லை. அவனுக்கு இந்த மலை பழகி விட்டது. சம்பள நாளன்று அவன் செய்யும் மறைமுக படைப்புதான் இதற்கு முக்கிய காரணமோ?

சின்னக் கணக்கப்பிள்ளை 'பீ பீ 86ஐ' சுற்றிப்பார்க்க வருகிறரென்பதை முதல் நாளே கேள்விப்பட்டிருந்ததால் விரைவாக மரங்களைச் சீவி சிரட்டை போட்டுவிட்டு 'நாட்டுக்கு' ஓடினன் சுப்பையா! சின்னவரைக் குளிப்பாட்ட ஒரு போத்தல் தயார்.

பத்து மணியளவில் வழமைபோல் பாறைமேல் உட்கார்ந்து வெற்றிலை மென்றுகொண்டிருந்த சுப்பையாவுக்கு, அடுத்தவெட்டு ராசம்மாவின் மலையில் சின்னக் கணக்கப் பிள்ளை ஏறுவது தெரிகிறது.

விடிகாலையில் ஒரு 'காட்டத் தண்ணி'யோடு மலைகளுக்கு விரைபவர்களுக்கு பத்து மணிவரை சாப்பிடாமல் இருக்க முடியுமா? மலையகத்தின் எதிர்கால சிற்பிகளான இளம் பிஞ்சுகள் கணக்கப்பிள்ளையின் தலையைக் கண்டதும் ரொட்டியும்-தேத்தண்ணிப் போத்தலுமாக விரைந்து ரோட்டுக்கு இறங்குகின்றன. பிள்ளைகள் மலைகளுக்கு வரக்கூடாது என்பது ஒரு சட்டம்! ஓடாக உழைக்க மட்டுமே தெரிந்த மலைநாட்டான் சட்டம் படித்திருந்தால் இப்படி மலையிலா வேலை செய்யப் போகிறன்?

ஆக-இப்படியான சட்டங்களை அவன் மதிப்பதில்லை; நேரத்தோடு காலையிலேயே மலைக்கு வந்துவிடவேண்டும் என்பதும் சட்டம். பதினெரு மணிக்கு முன் பால் சேகரிக்கக் கூடாது என்பதும் சட்டம்; இடை நேரத்தில் லயத்துக்கு போகக்கூடாது என்பதும் சட்டப்! பிள்ளைகள் மலைக்கு ரொட்டி கொண்டுவரக்கூடாது என்பதும் ஒரு சட்டம்..! சமாளிக்கக்கூடிய ஒரு காரியமா?

இரண்டு வயதிற்குக் கீழ்ப்பட்ட பிள்ளைகள் லயத்துக் கான்களில் விழுந்துவிடும் அல்லது ஆறு, கிணறுகளில் தவறி விழும் என்பதால் பிள்ளை மடுவத்தில் விடுகிறார்கள்! இரண்டு வயதுக்கு மேற்பட்ட பிள்ளைகள் சிறு பிள்ளைகளை அடித்து சேட்டைசெய்யும் என்பதால் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பி விடுகிறார்கள். ஆறு ஏழு வயதாகி ஓரளவு ரொட்டிசுட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேத்தண்ணீர் ஊற்றும் தகுதி வந்ததும் எல்லாப் பிள்ளைகளும் வாளிக்குள் ரொட்டியையும் தேத்தண்ணிப் போத்தலையும் வைத்துக்கொண்டு அப்பா, அம்மா அல்லது அண்ணன் அக்கா வெட்டுகளுக்கு நடந்துவிடுகின்றனர். எல்லாம் தலைவிதிதான்.

பால் சேகரிக்கும் நேரம் நெருங்கிக்கொண்டிருப்பதை நிழல் மூலமாகவே அறிந்துகொண்ட சுப்பையா, சின்னக் கணக்கப்பிள்ளைக்காக வாங்கிவைத்திருந்த கள்ளுப் போத்தலை ஏக்கத்தோடு ஒருமுறை பார்த்துக்கொண்டான்.

'எங்க, இவர இன்னமும் காணலியே.. ஒருவேளை அப்பிடியே 'அருப்பு மலை'க்கு எறங்கிட்டாரோ..?' புருபுருவென்று நுரைத்துக்கொண்டிருந்த போத்தலைப் பார்த்ததும் அவன் நாவிலும் நீர் சுரக்கத்தான் செய்தது. என்றாலும் போத்தலையும் கக்கத்தில் இடுக்கிக்கொண்டு அடுத்தவெட்டு ராசம்மாவின் மலையில் ஏறினான்.

கண்ணுக்கு எட்டிய தொலைவுவரை ஆள் நடமாட்டமே தெரியவில்லை! பாறையொன்றில் ஏறிநின்று மீண்டும் தனது பார்வையை ஓடவிட்டான். தூரத்துப் பாறையொன்றுக்கு அருகில் காட்டுச் செடிகளுக்கிடையில் ஏதோ அசைவது தெரிகிறது. உற்று நோக்கினான் சுப்பையா—கண்களைக் கூர்மையாக்கிக்கொண்டு. மறுகணம் சுப்பையாவின் தலையில் எவரோ ஓங்கி அடித்ததுபோன்ற அதிர்ச்சி!

'சீ.. கருமம்! சின்னக் கணக்கப்பிள்ளையா இப்பிடி..? ஆளுங்க பேசிக்கிறது சரியாத்தான் இருக்கு..' விடுவிடுவென ராசம்மாவின் மலையைவிட்டு பாய்ச்சல் நடையில் ரோட்டுக்கு இறங்கினான் அவன்.

பெரிய இடத்து விஷயமாயிற்றே, கண்டதைக் காற்றோடு விட்டுவிடுவதுதான் அறிவுடைமை!

'சுப்பையா..!'

அப்போதுதான் பாதையில் காலை வைத்திருந்த சுப்பையா விக்கித்து நின்றான். ஒருவேளை சின்னக் கணக்கப்பிள்ளை அவன் பார்த்ததைக்கண்டிருந்தால்..?

ஒன்றும் நடக்காததுபோல் சின்னக் கணக்கப்பிள்ளை ரோட்டுக்குமேல் நின்றுகொண்டிருந்தார். சுப்பையாவின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதற்றம் நின்றபாடில்லை. ஏதோ செய்யக்கூடாத தவறொன்றைத்தானே செய்துவிட்டு நிற்பதுபோல் அவன் உடம்பெல்லாம் வியர்த்துவிட்டது. ஆனால் சின்னக் கணக்கப்பிள்ளை எப்போதும்போலவே தான் நின்றுகொண்டிருந்தார். பழக்க தோஷமோ?

சைவாளியைத் தூக்கிக்கொண்டு அவசர அவசரமாக பால் சேகரிக்கத் தொடங்கினாள் ராசம்மா! நடுங்கும் இதயத்தோடு கள்ளுப் போத்தலைத் தூக்கி 'சின்னவ'ரிடம் கொடுத்தான். 'நான் பார்த்தது தப்புதாங்கய்யா..' என்று ஏக்குவது போலிருந்தது அவன் பார்வை. எதையுமே கவனித்தது

போல் அவர் காட்டிக்கொள்ளவில்லை. ஹிட்லர் மீசையைத் தடவியவாறே ஓரே மூச்சில் போத்தலைக் காலியாக்கிவிட்டு 'அருப்பு மலைக்கு' இறங்கிவிட்டார்.

மறு நாள் சுப்பையாவின் வெட்டில் வேறொருவன் மரம் சீவிக்கொண்டிருந்தான். மண்வெட்டியோடு குளிவெட்டுக் காட்டுக்கு நடந்த சுப்பையாவுக்கு ஆத்திரம்.

செய்யாத குற்றங்களுக்கெல்லாம் தண்டனை கொடுக்கப்படும் ஆட்சி இன்று மலையகத்தில் மட்டும்தான் நடக்கிறது. எவ்வளவு பெரிய தலைவர் வந்தாலும் தொழிலாளியைப் பற்றியும், அவனுடைய கஷ்டங்களைப்பற்றியும் வெளி நாடுகளில் போய்க் கரைத்துக் குடித்தவன் வந்தாலும் இயமாதிரியான இழிநிலை தோட்டங்களில் நடப்பதைக் குறைக்கமுடிகிறதா? எல்லாம் வயிற்றுப் பிழைப்பு..! சுப்பையா எட்டி நடை போட்டான்...

மீண்டும் தலைவர் வீடு, மருத கங்காணியின் வீடு— இறுதியாக சின்னவரின் வீட்டுக்கும் நடந்து பார்த்துவிட்டான். கொண்டுபோயிருந்த 'கொழும்பை'யும் திருப்பிக் கொண்டு போகச் சொல்லிவிட்டான் கணக்கன்! பலம் பூஜ்யம்தான். இனி துரையே வந்து பால்வெட்டு கொடுத்தாலும் இரண்டே வாரங்களில் குற்றம் கண்டுபிடித்து வெட்டு நிற்பாட்டுவது சின்னவருக்குப் பெரிய காரியமில்லை என்பது அனைவருக்கும் தெரியும்!

அன்றும் சம்பள நாள்!

சுப்பையாவுக்கு வெட்டு நிற்பாட்டிய பன்னிரெண்டாவது நாள், வயிறும் வாயும் புடைக்குமட்டும் பண்டாக் கடையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கசிப்பை இழுத்துவிட்டு எட்டுமணியளவில் லயதிற்குள் நுழைந்தான்.

வழமைபோல் காமாட்சி 'புறுபுறுக்க' வீட்டிற்குள்ளேயே புகைந்த சண்டை அந்த லயத்தையே ஒரு கலக்குக் கலக்கி விட்டது.

முதலில் காமாட்சியை ஏசி, பிறகு தோட்டத்து நிர்வாகத்தைத் தூற்றி, சின்னக் கணக்கப்பிள்ளை, ராசம்மா, அவள் குடும்பம், தலைவர், காரியதரிசி எல்லாரையும் வாட்டு வாட்டென்று வாட்டினான் சுப்பையா!

தொங்கல் லயத்திற்குள் அப்போதுதான் நுழைந்த ராசம்மாவின் அப்பன் வீரமுத்துவுக்கு பொத்துக்கொண்டு வந்து விட்டது. சம்பள நாளாகையால் அவனும் கொஞ்சம் 'கட்டைக்குத் தண்ணி' போட்டிருந்தான்.

'என்னடா சின்ன சாதிப் பயலே.. நீ குடிச்சிருந்தா ஒன்னோட வச்சிக்கடா.. ஒங்குடிககு, எங்குடும்பம் 'டேஸ்டு கடலே'ன்னு நெனைச்சியா படுவா..? எதுக்குடா ஏம் புள்ளைய இழுக்குறே நீ..' என்று வீரமுத்து தடியுடன் பாய்ந்தான்.

'சின்ன கணக்கப்புள்ள ஒனக்கு மருமவனு இருந்தா எனக்கென்னடா.. அவன ஒன் வூட்டுல கூட்டிவெச்சிருந்தா எனக்கு பயமுன்னு நெனைச்சியாடா..?' என்று சுப்பையாவும் வரிந்து கட்டிக்கொண்டு குதிக்க ஒரே களேபரம். ஒருவாறுகச் சண்டை ஓய்ந்துவிட்டாலும் வழக்கு துரைவரையும் போய் விட்டது.

மறுநாள் வழக்கை விசாரித்தார் துரை!

ஆதி முதல் அந்தம்வரை அர்த்தம் திருத்தமாகச் சொன்னான் சுப்பையா! தனக்கு வேலை போய்விட்டாலும் பரவாயில்லை; அனுவசியமாகத் தன்னை சில்லறை வேலைக்கு அனுப்பிய கணக்கனின் மானத்தை வாங்கவேண்டும் என்பதுதான் அவனது குறிக்கோளாய் இருந்தது.

'சுப்பையா! நீ சொல்றது நெசம்னு வச்சிக்குவோம். ஒன்னுடைய சாக்கி யாரு..? ஒருத்தரும் இல்லை. பார்த்தவன் சரியா பாக்கவும் இல்லே..! ஆனா, நேத்து நீ லயத்துல பேசினதை தோட்டமே சொல்லுது. நீதான் குத்தக்காரன். சின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னக் கணக்கப்புள்ளைய அனுவசியமா அவமானம் செஞ்சது நீ.. ஒனக்கு இரண்டு கெழமை வேலை இல்ல, போ!'

துரை முன்னாலும் எதிர்த்து நிற்கமுடியுமா? தனக்கு யார் உதவப் போகிறார்கள்! மலையக சாம்ராஜ்யத்தின் சர்வாதிகாரியாயிற்றே அவர்! பால் வெட்டும் போய்விட்டது. கிடைத்த சில்லறை வேலையிலும் ஒரு நாளைக்கு இரண்டு ரூபாவும் சதக் கணக்கும்தான். இரண்டு வாரம் வேலை நிற்பாட்டிவிட்டால்..?

* *

இன்று பிள்ளைக்கு ரொட்டி வாங்கவும் வழியில்லை.

80 ரூபாவுக்கு குறையாமல் சம்பளம் எடுத்த அவனுக்கு இன்று இருபத்த ரூபா தான் சம்பளம்..! அதுவும் மூன்று பிள்ளைகளின் அப்பன்; முழு ஆண்மகன்! சீ..

பண்டா கடையை நோக்கி நடந்துகொண்டிருந்த சுப்பையாவுக்கு தன் கையாலேயே தன்னை அடித்துக்கொள்ளவேண்டும் போலிருந்தது! உத்தியோகத்தனுக்கு பந்தம் பிடிப்பவன் கதி கடைசியில் அரோகராதானோ..?

பண்டா கடையில் கேஸ்லைட் பிரகாசமாக எரிந்துகொண்டிருக்கிறது-அவன் எட்டி நடக்கிறான்!

'சில்லறை வேலை என்றால் மாத்திரம் இழிவா..? செய்பவன் எல்லாம் மனிதன் இல்லையா..? நமக்குமட்டும் பால் வெட்டு என்ன வேண்டியிருக்கிறது; பால் வெட்டு..!' அவன் மனம் சிரித்துக்கொள்கிறது!

* *

"காமாட்சி, காமாட்சி.. இந்தா, இந்தபாண்ரொட்டியை வெட்டி புள்ளைங்களுக்கு குடு.. அதோட, இந்த 18 ரூபாய வெச்சிக்க. பொழைச்சி இருந்தா நானும் அடுத்த மாசம் 80 ரூபா சம்பளம் எடுக்குறனா இல்லியா பாரு..!' காமாட்சி உண்மையிலேயே திகைக்கிறாள். பண்டா கடையில் கசிப்பு மாத்திரமல்ல, பாண் ரொட்டியும் இருப்பது இன்றுதான் அவளுக்குப் புரிந்தது. இன்று சுப்பையாவின் வாயிலிருந்து கசிப்பு நெடி வரவில்லை; இது ஒன்றே அந்த மலையகச் செல்விக்கு கோடான கோடி செல்வம்!

அவள் பெருமிதத்தோடு அடுப்பைப் பற்றவைக்கிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Muralai Shanmuganathan
" Gandhi Nilavam "
Lady MacCallums Drive, Nuwara Eliya

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

= Naralai – S. Shanmuganathan

Naralai Shanmuganathan
Gnana Nilayam
Lady MacCallum Drive, Nuwara Eliya

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org